# நமது மொழிப் பிரசினை

## மகாத்மா காந்தி

மொழிபெயர்ப்பு:
அ·லெ·நடராஜன்



போட்டோ: கனுகாந்தி

வார்தா கல்வித் திட்டத் தலைவர்

டாக்டர் ஸாஹிர் ஹுஸேனுடன்

# நமது மொழிப் பிரசினை

மகாத்மா காந்தி
(பேசியதும் எழுதியதும்)

மொழிபெயர்த்தவர் :
அ. லெ. நடராஜன்

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்
காரைக்குடி

முதல் பதிப்பு: 7—6—45

விலை ரூபா: இரண்டரை

உரிமை பதிவு செய்யப்பெற்றது.

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸில்) அச்சிடப்பெற்றது

# முன்னுரை

சுதந்திர இன்பம் துய்க்கும் நாடாயினும் சரி, அல்லது, அடிமைப் படுகுழியில் வீழ்ந்து அல்லலுறும் நாடாயினும் சரி, ஒவ்வொரு நாட்டிலும் பல்வகையான பிரசினைகள் தோன்றுவது இயல்பு. ஆனல், அவ்விதம் தோன்றும் பிரசினைகளுக்கு முடிவுகாண்பது சுதந்திர நாடுகளில் எளிது; அடிமை நாடுகளில் அவ்வளவு எளிதானதன்று. காரணம்: அடிமை நாட்டை ஆளும் அதிகார வர்க்கம் நாட்டில் ஒற்றுமை ஏற்படாதவாறு தடுப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருக்கும்; சிலருக்கு விசேஷ உரிமைகளையும் சலுகைகளையும் காட்டத் தலைப்படும்; வேறு சிலரை அடக்கி ஒடுக்கி அதிகாரம் செலுத்தும். இதனல், ஒற்றுமை குலைவுற்று, ஐக்கிய பாவம் ஏற்படாது போகிறது; நாட்டில் தோன்றும் சின்னஞ்சிறு பிரசினைகள்முதல் பெரிய பெரிய பிரசினைகள்வரை, எளிதில் முடிவு காணுதவாறு, நாட்டுமக்கள் தத்தளிக்க நேருகிறது.

அப்படி முடிவுகாணுதவாறு, நம் நாட்டில் தத்தளிக்க நேரும் பிரசினைகளில், மொழிப் பிரசினையும் ஒன்று. இது ஒரு சாதாரண, எளிய, சிறு பிரசினையே யாயினும், இந்தப் பிரசினைபோல், வாதப் பிரதிவாதங்கள், எதிர்ப்புகள், மறுப்புகள், இயக்கங்கள் ஆகியவற்றுக்கு இடம் கொடுத்த பிரசினை சமீபகாலத்தில் வேறு இருந்ததில்லை எனலாம். இந்தியாவுக்குப் பொது மொழி ஒன்று அவசியந்தான? அவசியமாயின் பொது மொழியாய் இருக்கத் தகுதியுடைய மொழி எது? பொது மொழி உருது என்பதா? ஹிந்தி என்பதா? அல்லது ஹிந்துஸ்தானி என்றுதான் அழைக்க வேண்டுமா? பொது மொழியை எந்த லிபியால் எழுத வேண்டும். தேவநாகரியா? உருதுவா? ரோமன் லிபியா? அகில இந்தியாவுக்கும் ஒரே லிபி இருப்பது நல்லதா? அப்படியாயின் பொது லிபியாய் இருப்பதற்குத் தகுதியுடைய லிபி எது? என்பன போன்ற கேள்விகள், புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவதுபோல், ஒன்றன்பின் ஒன்ருய்க் கிளம்புகின்றன.

பரப்பிலும் ஜனத்தொகையிலும் பெரிதாய் இருப்பதைப் போல, நம் நாடு, மொழி எண்ணிக்கையிலும் பெரிதாய் இருக்கிறது. மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு, ஒரியா, மாாத்தி,

# முன்னுரை

குஜராத்தி, சிந்தி, வங்காளி, ஹிந்தி, உருது, குர்முகி, முதலிய மொழிகள் எழுத்துவழக்கிலும் பேச்சுவழக்கிலும் நடைமுறையில் இருந்து வருகின்றன. எழுத்துவழக்கின்றி, பேச்சுவழக்கில் மட்டும் உள்ள மொழிகள் இருநூறுக்கு அதிகமென்று சொல்லுகிறார்கள். இந்தப் புள்ளிவிபரம் சரிதானா என்பதை நிச்சயிக்க முடியவில்லை.

பேச்சுவழக்கில் மட்டும் உள்ள பாஷைகளைக் கணக்கில் சேர்க்காது, எழுத்துவழக்கு, பேச்சுவழக்கு ஆகிய இரண்டிலு முள்ள பாஷைகளைக் கணக்கிட்டால், நடைமுறையில் இருந்துவரும் மொழிகள் மொத்தம் பன்னிரண்டு ஆகும். இந்தப் பன்னிரண்டு மொழிகள் பேசுபவர்களிடையே, நடையுடை பாவனைகளில் சிறிது வேற்றுமை காணப்படினும், ஒரு ஜீவாதாரமான விஷயத்தில் எல்லோரிடையும் ஒருவித ஒருமைப்பாடு நிலவுவதைக் காண்கிறோம். தெய்விக மொழி, புராதன மொழி, பண்டைய இலக்கியச் செல்வங்கள் நிறைந்த மொழி, நவீன இலக்கிய வளம் உள்ள மொழி, அதிகப்படியான மக்கள் பேசும் மொழி, இலக்கண வரம்பு கடவாத மொழி என்று தனித்தனியே பெருமை பாராட்டிக் கொள்ளும் மொழியினர் அனைவரையுமே, அடிமைத்தனம் விட்டபாடாக இல்லை. உயர்ந்த மொழியினர், தாழ்ந்த மொழியினர் என்று வேற்றுமை பாராட்டாது, அனைவரையுமே அடிமைப் பேய் வந்து கவ்விக்கொண்டு படாதபாடு படுத்துகிறது. இதன் பிடியிலிருந்து விடுதலை அடைந்தாலன்றி, மொழிக்கும் விமோசனம் இல்லை; மொழி பேசுபவர்களுக்கும் விமோசன மில்லை.

சகல மொழி பேசுபவர்களையுமே பிடித்தாட்டும் அடிமை வாழ்விலிருந்து, விடுதலை பெற வேண்டுமானால், பொது மொழி ஒன்று அவசியம் வேண்டும். அந்தப் பொது மொழியின் துணைகொண்டு ஒரு மொழி பேசும் மாகாணத்தார் மற்றொரு மொழி பேசும் மாகாணத்தாரை நன்கு அறிந்துகொள்ளவும், அறிந்து கொண்டு, தேசிய ஐக்கியத்தை வளர்க்கவும் இயலும். தேசிய ஐக்கியம் ஏற்பட ஏற்பட, நாட்டின் விடுதலை நம்மை நாடி விரைந்து ஓடி வரும் என்று, நாம் உறுதியாக நம்பலாம்.

சுதந்திர இந்தியாவில் பொது மொழியாக வரவிருக்கும் மொழியை, ஹிந்தி-ஹிந்துஸ்தானி என்ற பெயரால் தேசத் தலைவர்கள் அழைக்கிறார்கள். அந்தப் பொது மொழிபற்றி, தலைவர்களுக்கு எல்லாம் தலைவராய் விளங்கும் காந்தியடிகள் கொண்

# முன்னுரை

டுள்ள கருத்துக்கள் இந்தப் புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. தேசிய மொழி ஒன்று ஏற்படுவதால் தேசிய ஐக்கியம் வளரும் என்றும், மற்ற மாகாண மொழிகள் சிதைந்து போகா வென்றும் காந்திஜி கூறுகிறார். அவர் கருத்தை, அவருடைய வாக்காலேயே படியுங்கள் :

> "ஒரு பாஷையைச் சிறப்பித்துப் பேச வேண்டுமென்ற எண்ணத்தோடு, நான் இவ்வாறு பேசவில்லை. சத்தியத்தையும் அஹிம்சையையும் பலிகொடுத்துவிட்டு, அதனால் வரும் சுயராஜ்யத்தை நான் எவ்வாறு ஏற்றுக் கொள்ளமாட்டேனோ. அதேபோல, தாய் மொழியைப் புறக்கணித்துவிட்டு வரும் சுயராஜ்யத்தையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால், நான் ஏன் ஒருபொது மொழி வேண்டுமென்று மிகவும் வற்புறுத்துகிறேன் என்றால், பொது மொழியானது தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்குச் சிறந்த வலிமையுள்ள ஒரு கருவியாக நின்று உதவுகிறது. பொது மொழி நாட்டில் எவ்வளவுக்கு எவ்வளவு உரம் பெற்றிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு நமது ஐக்கியமும் ஸ்திரம் பெற்றிருக்கும்."

ஹரிஜன் - ஏப்ரல் - 3, 1937.

காந்தி மலர்கள் என்ற நூல் வரிசையைத் தொகுத்து வெளியிட்ட ஸ்ரீ ஆனந்த் டி. ஹிங்கோரானி அவர்களே, இந்த நூலையும் வெளியிட்டுள்ளார். அவருடைய அனுமதி பெற்று, 'நமது மொழிப் பிரசினை' என்னும் இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்து இருக்கிறேன். தமிழில் மொழிபெயர்த்து வெளியிட அனுமதி தந்த, ஸ்ரீ ஆனந்த டி. ஹிங்கோரானி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காந்திஜியின் புத்தகங்கள் சிறந்த முறையில் தமிழில் வெளிவர வேண்டுமென்ற ஆவலுடையவர்கள், பலர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களில் முன்னணியில் நிற்பவர், நண்பர் சா. கணேசன் அவர்கள். அவர்கள், இந்த நூலை, மூலத்தோடு ஒப்பிட்டுச் சரிபார்த்து உதவி புரிந்தார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரியது.

காரைக்குடி,<br>3—6—45.

அ. லெ. நடராஜன்

# பொருளடக்கம்


பக்கம்

1. அகில இந்தியாவிற்கும் ஒரே லிபி ... ... 3
(யங் இந்தியா-ஜுலை, 14-1927)

2. இரு நல்ல தீர்மானங்கள் ... 8
(ஹரிஜன்—மே, 4-1935)

3. ஹிந்தி, அல்லது ஹிந்துஸ்தானி —க— ... ... 11
(ஹரிஜன்—மே, 9-1936)

4. ஹிந்தி, அல்லது ஹிந்துஸ்தானி —உ— ... ... 22
(ஹரிஜன்—மே, 16-1936)

5. சில வெளிப்படையான காரணங்கள் ... ... 26
(ஹரிஜன்—ஜுன், 27-1936)

6. தப் பெண்ணத்தால் வந்த சிக்கல் ... ... 32
(ஹரிஜன்—ஆகஸ்டு, 1-1936)

7. இன்னும் சில சிக்கல்கள் ... 36
(ஹரிஜன்—ஆகஸ்டு, 15-1936)

8. பொது லிபியின் அவசியம் ... 44
(ஹரிஜன்—ஏப்ரல், 3-1937)

9. புதியதொரு சகாப்தத்தை தோற்றுவிக்கவல்ல தீர்மானம் 47
(ஹரிஜன்—ஏப்ரல், 3-1937)

10. ஹிந்தி-உருதுப் போட்டி ... 53
(ஹரிஜன்—ஜுலை, 3-1937)

11. வரவேற்கத்தக்க ஏற்பாடு... 57
(ஹரிஜன்—செப்டம்பர், 11-1937)

பக்கம்

12. ஹிந்துஸ்தானி, ஹிந்தி, உருது ... ... 59
(ஹரிஜன்—அக்டோபர், 29-1938)

13. ரோமன் லிபிக்கும் தேவநாகரி லிபிக்கும் போட்டி ... 65
(ஹரிஜன்—பிப்ரவரி, 11-1939)

14. சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய மொழிகள் அனைத்திற்கும் ஒரே லிபி ... ... 68
(ஹரிஜன்—ஆகஸ்டு, 5-1939)

15. ரோமன் லிபியா? ... 70
(ஹரிஜன்—மார்ச், 16-1940)

16. ஹிந்துஸ்தானி ... ... 71
(ஹரிஜன்—பிப்ரவரி, 1-1942)

17. ஹிந்தி + உருது = ஹிந்துஸ்தானி ... ... 75
(ஹரிஜன்—பிப்ரவரி, 8-1942)

18. ரோமன் லிபி ... ... 83
(ஹரிஜன்—ஏப்ரல், 12-1942)

19. தேசிய மொழி பற்றிய வினாக்கள் ... ... 85
(ஹரிஜன்—ஏப்ரல், 26-1942)

20. அனுபந்தம் ... ... 92
(1) ஹிந்தி என்ற சொல்லின் பிறப்பு ... 92
(ஹரிஜன்—ஜுலை, 17-1937)
(2) ஹிந்தி-உருதுத் தகராறு 93
(ஹரிஜன்—ஜுலை, 24-1937)


*

# நமது மொழிப் பிரசினை



# அகில இந்தியாவிற்கும் ஒரே லிபி

> "ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஐக்கிய-பாவம் ஏற்படுவதற்கு, ஆக்கந்தரும் சில முறைகளை, நான் இப்போது இங்கு சொல்வது பொருத்தமற்றதாகத் தோன்றினாலும் தோன்றலாம். எனினும், முன்னர் தெரிவித்ததையே மீண்டும் நான் இங்கு தெரிவிக்க வேண்டியவனாய் இருக்கிறேன். முஸ்லிம் சகோதரர்களோடு நெருங்கிப் பழகுவதற்கு ஹிந்துக்கள் உருது அவசியம் படிக்க வேண்டும்; அதேபோல, ஹிந்து சகோதரர்களோடு நெருங்கிப் பழகுவதற்கு முஸ்லிம்களும் ஹிந்தி அவசியம் படிக்க வேண்டும்."

இந்தியா முழுமைக்கும் ஒரே பொது லிபி இருப்பதுதான் நலம் என்பது எனது நம்பிக்கை. இந்த நம்பிக்கையை நடைமுறையில் மெய்ப்பித்துக்காட்டும் பொருட்டு, நவஜீவன் பத்திரிகையைத் தேவநாகரி லிபியில் வெளியிடும்படி ஆலோசனை கூறி, சிறிது காலத்திற்குமுன், ஒரு கூர்ஜர நிருபர் கடிதம் எழுதியிருந்தார். இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஒரே லிபி இருக்க வேண்டும் என்பதும், அந்த லிபி தேவநாகரி லிபியாகத்தான் இருக்க முடியும் என்பதும் எனது உறுதியான நம்பிக்கையாயினும், இந்த நிருபரது ஆலோசனைப்படி நடக்க என்னால் இயலவில்லை. அதற்குரிய காரணங்களை நவஜீவன் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளேன்; அவற்றை மீண்டும் இங்கு குறிப்பிடத் தேவையில்லை. மகத்தான தேசிய விழிப்பு நம்மிடையே ஏற்பட்டு இருப்பதை, நழுவ விடாமல் பயன்படுத்திக்கொண்டு, இந்தியா முழுமைக்கும் ஒரே லிபி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் பரப்ப வேண்டும். அதோடு மட்டும் நின்றுவிடாது, நிதர்சனமான முறையில் சில காரியங்களை இந்தத் துறையில் செய்தும் காட்ட வேண்டும். இதில் சந்தேகமே இல்லை. இந்தத் துறையில் புகுந்து, சரியான முறையில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு, ஹிந்து-முஸ்லிம் பிணக்கு வந்து குறுக்கே தடையாய் நிற்கிறது. இந்தியாவிலுள்ளோர் அனைவருமே தேவநாகரி லிபியை ஏற்றுக்கொள்ளுவதற்குமுன், ஹிந்துக்களின் மனநிலை மாற்றம்

அடைய வேண்டும். திராவிட மொழிகளையும், சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய ஏனைய மொழிகளையும் ஒரே லிபியினால் எழுதுவதற்கு அவர்கள் சம்மதிக்க வேண்டும். வங்காளத்தில் வங்காள லிபியையும், பாஞ்சாலத்தில் குர்முகி லிபியையும், சிந்துவில் சிந்தி லிபியையும், உத்கல் பிரதேசத்தில் ஓரியா லிபியையும், கூர்ஜரத்தில் கூர்ஜர லிபியையும், ஆந்திர நாட்டில் தெலுங்கு லிபியையும், தமிழ் நாட்டில் தமிழ் லிபியையும், கேரளத்தில் மலையாள லிபியையும், கன்னடத்தில் கன்னட லிபியையும் இப்போது உபயோகித்து வருகிறார்கள். தெக்கானில் உபயோகிக்கிற மோடி லிபியும், பீஹாரில் உபயோகிக்கிற கைத்தி லிபியும் இந்த எண்ணிக்கையில் அடங்கவில்லை. இந்த லிபிகளையெல்லாம் நீக்கிவிட்டு, இவற்றுக்குப் பதிலாக, இந்த மொழிகள் அனைத்தையுமே தேவநாகரி லிபிமூலம் நாம் எழுதி வருவோமேயானால் - தேசியக் காரியங்கள், மற்ற நடைமுறைக் காரியங்கள் அனைத்திற்குமே இந்த லிபியையே கையாளுவோமேயானால் - இது ஒரு சாதாரணமான முன்னேற்றமன்று ; மகத்தான முன்னேற்றமேயாகும். இதனால் ஹிந்துக்களின் நிலைமை பலமடைவதுடன், பல்வேறு மாகாணங்களுக்கிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுவதற்கும் இது உதவி புரியும். இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளையும் லிபிகளையும் கற்ற ஒருவரே, ஒரு புது லிபியைக் கற்றுக் - கொள்வதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது, எவ்வளவு காலம் இந்த வீண்சிரமத்திலேயே போய்விடுகிறது என்பதை நன்கு அறிவர். தேசத்தின்மீது அன்பு வைத்துள்ள ஒருவருக்கு, எதுவும் சிரமமில்லைதான் ; பல்வேறு லிபிகளைக் கற்றுக்கொள்வதற்காக அவர் செலவு செய்த காலம் வீணே செலவு செய்த காலமாகாதுதான்; சில லிபிகள் அழகாய் இருப்பதும் உண்மைதான். எனினும், இங்குள்ள கோடிக்கணக்கான மக்கள் அனைவருக்குமே இதே விதமான தியாக உணர்ச்சியும் ஈடுபாடும் இருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. தேசத் தலைவர்கள் இவர்களுக்குக் காரியங்களை எளிதாக்கிக்கொடுக்க வேண்டும். எனவே, எளிதான ஒரு லிபியை எங்குமே பரவத்தகுந்த ஒரு

லிபியை, நாம் கையாண்டு பார்க்க வேண்டும். தேவநாகரி லிபியைத் தவிர, வேறு எந்த லிபியும் இப்போது தயாரில் இல்லை; அந்த லிபியைப்போல நிலைமைக்கு ஏற்ற வேறு லிபியும் இல்லை. தேவநாகரி லிபியைப் பொது லிபி ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அதற்காக உழைத்து வருகிற ஒரு அகில இந்திய ஸ்தாபனம் இருக்கிறது; அல்லது இருந்ததாக வைத்துக்கொள்வோம். இப்போது அதனுடைய முயற்சிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நான் அறியேன். இனிமேல், தொடர்ந்து வேலை நடைபெறுவதற்குப் பழைய ஸ்தாபனத்தைப் பலப்படுத்த வேண்டும்; அல்லது, அதற்கெனவே ஒரு புதிய ஸ்தாபனத்தை நிறுவ வேண்டும். தேசியப் பொது மொழியாகிய ஹிந்தி-ஹிந்துஸ்தானியைப் பரப்புவதையும், இந்திய மொழிகளுக்கு ஒரே லிபி வேண்டும் என்கிற இந்த இயக்கத்தையும் கலந்து குழப்பலாகாது. தேசிய மொழியைப் பரப்பும் வேலை, மிக மிக மெதுவாக நடைபெற்றுக்கொண் டிருக்கிறது; ஆனால், நல்ல முறையில் நடைபெறுகிறது. ஒரே லிபியை உபயோகிக்க உபயோகிக்க, ஒரு தனித்த மொழி பரவுவதற்கு அது உதவி புரியும். இந்த இரண்டு போக்கும் ஒரு குறிப்பிட்ட எல்லை சென்றதும் நின்றுவிடும். ஹிந்தி-ஹிந்துஸ்தானியைப் பரப்புவது, மாகாண மொழிகளைத் துரத்திவிடாது; ஆனால், அவை வளர்வதற்கு உதவியாகவே இருக்கும். பொது மொழியைப் பரப்புவதன் நோக்கம்: மாகாணங்களுக் கிடையில் தொடர்பு ஏற்படும் பொருட்டேயாம். ஹிந்து-முஸ்லிம் பிணக்கு நீடித்து இருக்கும்வரையில், உருதுவோ அல்லது ஹிந்தியோதான் பொது மொழியாக இருந்து வரும். உருதுவைப் பாரசீக லிபியில் எழுதுவார்கள்; அதில் அராபியச் சொற்கள் அல்லது பாரசீகச் சொற்கள் மிகுந்து நிற்கும். ஹிந்தியைத் தேவநாகரி லிபியில் எழுதுவார்கள்; அதில் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகுந்து நிற்கும். இதயம் ஒன்றுபட்டு, இரு வகுப்பினரிடையே ஒற்றுமை ஏற்படும் காலத்தில், இந்த இரண்டு மொழிகளின் உருவங்கள் - அதாவது லிபிகள் - ஒன்றாகிவிடும். இந்த ஐக்கியத்தின் விளைவால் நமக்குப் பொது லிபி கிடைத்துவிடும்.

அனேக சம்ஸ்கிருதச் சொற்களும், பாரசீகச் சொற்களும், அராபியச் சொற்களும், இன்னும் அதனுடைய வளர்ச்சிக்கும் சொல்வன்மைக்கும் தேவைப்படும் பிற சொற்களும் கலந்து, அந்தப் பொது மொழி உருவடையும்.

ஒரு லிபிமூலம் எழுதத்தொடங்குவதால் மற்ற பல்வேறு லிபிகள் எல்லாம் மறைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. வெவ்வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பிற மாகாண மொழியை எளிதில் பயிலும் பொருட்டே, இந்த ஏற்பாட்டைச் செய்கிறோம். இந்த எண்ணம் கைகூடி வருவதற்கு, முதலில் நாம் தேவநாகரி லிபியைக் கட்டாயமாக்க வேண்டும். கூர்ஜரத்தில் இருப்பதைப்போல, எல்லாப் பள்ளிக்கூடங்களிலுமே தேவநாகரி லிபியை, குறைந்த பட்சம் ஹிந்துக்களாவது கட்டாயம் படிக்கும்படி செய்ய வேண்டும். இரண்டாவதாக, பல்வேறு இந்திய மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியச் செல்வங்களைத் தேவநாகரி லிபியில் அச்சிட வேண்டும். ஏற்கனவே, இந்த முறையை ஓரளவிற்குக் கையாண்டு பார்த்திருக்கிறார்கள். தேவநாகரி லிபியில் அச்சடித்துள்ள கீதாஞ்சலியைப் பார்த்தேன். ஆனால், இந்த முயற்சி இன்னும் விரிந்த முறையில் நடைபெற வேண்டும். இவ்விதம் தேவநாகரி லிபியில், அச்சடிக்கப்பெற்ற புத்தகங்களை, எங்கும் பரவும் வகையில் பிர்சாரம் செய்ய வேண்டும். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஐக்கியபாவம் ஏற்படுவதற்கு, ஆக்கந்தரும் சில முறைகளை, நான் இப்போது இங்கு சொல்வது பொருத்தமற்றதாகத் தோன்றினாலும் தோன்றலாம். எனினும், முன்னர் தெரிவித்ததையே மீண்டும் நான் இங்கு தெரிவிக்க வேண்டியவனாய் இருக்கிறேன். முஸ்லிம் சகோதரர்களோடு நெருங்கிப் பழகுவதற்கு ஹிந்துக்கள் உருது அவசியம் படிக்க வேண்டும்; அதேபோல, ஹிந்து சகோதரர்களோடு நெருங்கிப் பழகுவதற்கு முஸ்லிம்களும் ஹிந்தி அவசியம் படிக்க வேண்டும். ஹிந்து முஸ்லிம்களிடையே உண்மையான ஒரு ஐக்கியபாவம் ஏற்பட வேண்டும் என்ற நம்பிக்கை உடையவர்கள், இப்போது இருந்துவரும் பயங்கரமான பகைமை உணர்ச்சியைக் கண்டு, மனங்குலைந்து

போக வேண்டாம். அவர்களுடைய நம்பிக்கை, கண்ணிய மான நம்பிக்கையாக இருக்குமாயின், தங்குதடையின்றி அவர்கள் முயற்சி செய்துகொண்டு போக வேண்டும்; சுறு சுறுப்பாகவும் செய்ய வேண்டும். கூடுமானவரையில், சகிப் புத்தன்மையோடும், கண்ணியத்தோடும், அன்போடும் நடந்துகொள்ள வேண்டும். இந்தத் துறையில் நாம் வெற்றி பெறுவதற்கு, ஒருவர் மற்றவருடைய மொழியைப் பயில்வது ஒரு சிறிய காரியமே யாகும். கொரானைப்பற்றியும் நபிகள் நாயகத்தைப்பற்றியும் பக்தி சிரத்தையுள்ள முஸல்மான் கள், பல நல்ல புத்தகங்களை, உருதுவில் எழுதியிருக்கிறார் கள். அவற்றை ஹிந்துக்கள் படித் தறிந்துகொள்வது நல்லதில்லையா? அதே போல, கிருஷ்ணனைப்பற்றியும் கீதையைப்பற்றியும் ஹிந்துக்கள் பல நூல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றை முஸல்மான்கள் தெரிந்து-கொள்ளுவதும் நல்லதாக மாட்டாதா? ஒருவர் பிறருடைய மதநூல்களைப்பற்றிக் குற்றங் குறைகள் கூறுவது, அவற்றைப்பற்றித் தூண்டிவிடுகிறவர்களைப் பின்பற்று வது, மதவெறியும் அறியாமையுங்கொண்டு அலைவது, இவற்றை நோக்கமாகக்கொண்டவர்களைப் பின்பற்றுவது ஆகியவற்றைவிட, இது எவ்வளவோ மேலானதில்லையா?

# இரு நல்ல தீர்மானங்கள்

*"பல்வேறு லிபிகளைக் கற்று, அனாவசியமாக நமது பிற்கால சந்ததியார் வருந்தும்படி நாம் செய்தல் கூடாது……..ஒவ்வொரு மொழிக்கும், தனித்தனியாக வெவ்வேறு வகையான லிபிகள் இருப்பதால், இன்று, மற்ற மாகாண மொழிகளைக் கற்றுக்கொள்வதும், மற்ற மாகாணத்தார் ஹிந்தி கற்றுக்கொள்வதும், அனாவசியமாக அதிக சிரமம் தருவதாய் இருக்கிறது."*

ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தார், சமீபத்தில் இந்தூரில் கூடி, பயனுள்ள சில தீர்மானங்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றில், ஒரு தீர்மானத்தின்மூலம், ஹிந்தி மொழி எது என்பதை வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். மற்றொன்றில், சம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்த, அல்லது அதனால் வளர்ச்சி யடைந்த மொழிகளைத் தேவநாகரி லிபியினால் எழுதுவது நல்லது என்று, தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

மற்ற மாகாண மொழிகளை ஒழிக்க முயலாது என்றும், அந்தந்த மாகாண மொழிகள் வளம்பெற ஹிந்தி துணைபுரியும் என்றும், ஹிந்தி கற்ற ஒருவரால் அகில இந்தியாவுக்கும் சேவை செய்ய முடியும் என்றும், முதலாவது தீர்மானம் வற்புறுத்திக் கூறுகிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் புரிந்துகொள்ளத்தக்க முறையில், உருது லிபியினால் எழுதுவதும் ஹிந்தியே யாகும் என்று, அந்தத் தீர்மானம் ஒப்புக்கொண் டிருக்கிறது. ஹிந்தி இயக்கம், உருது லிபியை அழித்துவிடுமோ என்கிற சந்தேகத்தை இது நிவர்த்திக்கிற தெனலாம். இருந்த போதிலும், சம்மேளனத்தின் அதிகாரம்பெற்ற லிபி தேவநாகரி லிபியாகவே இருந்து வரும். பஞ்சாபிலுள்ள ஹிந்துக்களிடையும் இதர இடங்களிலும் ஹிந்தியைப் பரப்புவதற்கு, வேலைகள் இனிமேலும் தொடர்ந்து நடைபெறும். இந்தத் தீர்மானத்தால் தேவநாகரி லிபியின் மதிப்பு எந்த விதத்திலும் குறையவில்லை எனலாம். இதுவரை எழுதிவந்ததைப் போலவே, உருது லிபியில் எழுதுவதற்கு முஸ்லிம்களுக்கு உரிமையுண்டு என்பதை அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்கிறது.

இரண்டாவது தீர்மானத்தை நடைமுறையில் கொணர்வதற்கு, சாதக பாதகமாக உள்ள நிலைமைகளை ஆராய, காகா சாஹெப் கலேல்கார் அவர்களைத் தலைவராகவும் கன்வீனராகவும் கொண்ட ஒரு கமிட்டியை நிறுவி இருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்து, ஹிந்தி லிபியில் தேவைப்படும் மாற்றங்களையும் சேர்க்கைகளையும் செய்யும்பொருட்டும், இப்போது இருப்பதைவிட எழுதுவதற்கு எளிதானதாகவும் பூரணத்துவ முடையதாகவும் ஹிந்தி லிபியைச் செய்யும் பொருட்டும், இல்லாத ஒலிகளுக்கு வரிவடிவு உண்டாக்கும் பொருட்டும் இந்தக் கமிட்டியை நிறுவி இருக்கிறார்கள்.

மாகாணங்களுக்கிடையே இருந்து வரும் தொடர்பு அதிகரிப்பதற்கும், மாகாணங்களுக்கிடையே ஹிந்தி மொழியே பொது மொழியாக இருப்பதற்கும், இத்தகைய மாற்றங்கள் அவசிய மாகும். ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தின் கொள்கையை ஆதரிக்கிற அனைவரும், சென்ற இருப்த்தைந்து ஆண்டுகளாக, தேவநாகரி லிபிதான் பொது லிபியாக இருக்க முடியும் என்பதை ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள். இருந்தும், லிபியைப்பற்றிய விவகாரம் இன்னும் தீர்ந்தபாடாக இல்லை. அதைத் தீர்த்துவைப்பதற்கு, சிரத்தையோடு கூடிய முயற்சி எதுவும் இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஹிந்தி பொது மொழியாவதற்கும், லிபிக்கும் இயற்கையான ஒருவித பின்னக்கம் இருந்து வருகிறது போலும். எனவே, தேவநாகரி லிபியினால் எழுதினால்தான் மற்ற மாகாண மொழிகளைக் கற்றுக்கொள்வது நம்ப முடியாத அளவுக்கு அவ்வளவு எளிதாகிவிடும். வங்காள லிபியில் எழுதப்பெற்ற கீதாஞ்சலி வங்காளிகளைத் தவிர வேறு யாருக்கும் விளங்காது; தேவநாகரி லிபியில் எழுதிவிட்டாலோ, ஏறக்குறைய எல்லோருக்குமே அது விளங்கும். கீதாஞ்சலியில் சம்ஸ்கிருதச் சொற்கள் நிறைய இருக்கின்றன; பிற மாகாணத்தாருக்குச் சம்ஸ்கிருதச் சொற்கள் எளிதாக விளங்கும். நான் சொல்வதின் உண்மையை யாருமே பரிசோதனை செய்து பார்க்கலாம். பல்வேறு லிபிகளைக் கற்று, அனாவசியமாக, நமது பிற்கால சந்ததியார் வருந்தும்படி நாம் செய்தல் கூடாது. தமிழ்,

தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, வங்காளம் முதலிய மொழிகளைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிற ஒருவர், தேவநாகரி லிபியைத் தவிர்த்து, மேற்கொண்டு ஆறு லிபிகளைக் கற்றுக்கொண்டுதான் தீரவேண்டுமென்பது கொடுமையாகும். அது மட்டுமல்ல. முஸ்லிம் சகோதரர்கள் என்ன செய்கிறார்கள், என்ன சொல்லுகிறார்கள், என்பதைத் தெரிந்துகொள்வதற்கு அவர் உருது லிபி வேறு கற்றுக்கொண்டாக வேண்டும்! தேசத்தினிடமும் மனித சமுதாயத்தினிடமும், பரிவு காட்டுகிறவர்களுக்கு நான் ஒரு பேராசையான திட்டத்தை வகுத்துக்காட்டவில்லை. ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியாக வெவ்வேறு வகையான லிபிகள் இருப்பதால், இன்று, மற்ற மாகாண மொழிகளைக் கற்றுக்கொள்வதும், மற்ற மாகாணத்தார் ஹிந்தியைக் கற்றுக்கொள்வதும் அதிக சிரமம் தருவதாய் இருக்கிறது. காகா சாஹேப்பைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஒருபுறத்தில் சீர்திருத்தத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்லி, அதற்குச் சாதகமாகப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்ட முயல வேண்டும். ஹிந்தியையும் மற்ற மாகாண மொழிகளையும் தேவநாகரி லிபியின்மூலம் பயில்வதால், நேரமும் முயற்சியும் எவ்வளவு மீதப்படுகின்றன என்பதை, நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்ட முயல வேண்டும். இந்தச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தால், மாகாண மொழிகளின் முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று ஒருவரும் அஞ்ச வேண்டாம். பொது லிபியை அமைத்துக்கொண்டதனால் ஐரோப்பிய மொழிகள் எவ்வளவோ வளமடைந்திருக்கின்றன; அதோடு-கூட மாகாணத் தொடர்புகளும் அதிகரித்திருக்கின்றன. ஒரு பொது லிபியை ஏற்படுத்திக்கொள்ளுவோமே யானால் அத்தகைய நன்மைகளை நாமும் பெறுவது திண்ணம்.

# ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி - க -

" நமது காலத்தில் இந்தியப் பண்பாடு உருவாகிக்கொண்டு வருகிறது. இன்று, ஒன்றோடொன்று மோதிக்கொண் டிருக்கும் பண்பாடுகளை நம்மில் அனேகர் ஒன்றுசேர்த்து, ஐக்கியப்படுத்தி, ஒரு பண்பாடாகச் செய்ய முயன்று வருகிறார்கள். அடியோடு ஒதுங்கி நிற்கும் எந்தப் பண்பாடும் நீடித்தகாலம் நிலைத்து இருக்காது."

'அகில பாரதீய சாஹித்ய பரிஷத்' எனும் ஸ்தாபனத்தை நிறுவும் பொருட்டு, சமீபத்தில் நாகபுரியில் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் மேற் கண்ட பெயருடன் ஸ்தாபனத்தைத் தொடங்கி வைத்தார்கள். மிகவும் மதிக்கத் தகுந்த நண்பர் ஒருவரிடமிருந்து, ஒரு கடிதம் வந்திருந்தது. பிரதிநிதிகளிடம் அதைப் படித்துக் காட்டினார்கள். ஆழ்ந்த உணர்ச்சிகள் நிறைந்த அந்தக் கடிதத்தை, வேறொரு இடத்தில் வாசகர்கள் காணலாம். வேறொரு முஸ்லிம் நண்பரும் அதேபோல ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதோடு, சென்ற ஏப்ரல் 27-ல் பாம்பே கிரானிகள் இது சம்பந்தமாய் எழுதியிருக்கும் தலையங் கத்தையும் கூட அனுப்பி யிருக்கிறார். இந்த இரண்டு கடிதங் களும் பாம்பே கிரானிகள் பத்திரிகையின் தலையங்கமும் மாகாணப் பொது மொழி சம்பந்தமாக நான் கொண்டுள்ள கருத்துக்களைப் பொதுப்படையாகத் தெரிவித்துள்ளன. எனினும், அவற்றில் சில மாறுபாடுகள் காணப்படுவதால், அவர்களோடு ஓரளவிற்குத்தான் என்னால் உடன்பட முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாய் இருக்கிறேன். நண்பர்கள் கொண்டுள்ள எண்ணங்கள் நிறைவேறும் பொருட்டே, எனது கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சில முஸ்லிம் நண்பர்கள் மிகவும் சந்தேகம் கொள்கிறார் கள். அதைப்பற்றி ஆரம்பத்தில் நான் ஆராய விரும்ப வில்லை. நமது சூழ்நிலை முற்றுமே சந்தேகத்தில் மூழ்கிக் கிடக்கிறது. சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட சொல்லோ, செயலோ இல்லவே இல்லை. வெறியுணர்ச்சியில் ஈடுபட்டு அங்குமிங்கும் அலையவிடாமல், மனத்தை நிதானமாக வைத் துக்கொண்டு, சந்தேகத்திற்கு இடம்தராத முறையில், சமூக

ஒற்றுமையில் நாட்டம் உள்ளவர்கள் செயல்முறையில் ஈடு படுவதே சாலச் சிறந்த வழி என்று, நான் அபிப்பிராயப் படுகிறேன். சிறப்பாக, 'பரிஷத்' போன்ற இடங்களில் வெறியுணர்ச்சிக்கு இடமில்லை. இந்திய மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்கள் அனைத்தையும் ஒருவழிப்படுத்தி, இந்திய மக்கள் பெரும்பாலோர் படித்து அனுபவிக்கும் வகையில், பெரும்பாலோருக்குப் புரியக்கூடிய மொழியில், ஏற்பாடு செய்வதே 'பரிஷத்தின்' தலையாய நோக்க மாகும். சந்தேகத்திற்கு இடமின்றி, அனேக இந்திய மொழிகளில் உருதுவும் ஒன்றுதான். அதில் இலக்கியச் செல்வங்களும் நிறைய உண்டு. அவற்றைப் பொதுச் சொத்தாகப் பாவித்து, அகில இந்தியாவும் படித்தனுபவிக்குமாறு செய்ய வேண்டும். முஸ்லிம்களின் மனத்தை அறிந்துகொள்ளவோ, அல்லது இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி இந்திய மொழியில் வந்துள்ளவற்றைத் தெரிந்துகொள்ளவோ விரும்பும் எந்த இந்தியனும் உருது இலக்கியத்தை அலட்சியம் செய்ய முடியாது. நவீன உருது மொழியில் காணப்படும் இலக்கியச் செல்வங்களை அகில இந்தியாவும் படித்துணரும் வகையில், இப்போது நிறுவப் பெற்றுள்ள 'பரிஷத்' ஏற்பாடு செய்யாவிட்டால், அதனுடைய நோக்கமே பழுதுபட்டு விடும்; அது தனது கடமையைச் செய்யத் தவறியது மாகும்.

எனக்குக் கடிதம் எழுதியுள்ள நிருபர் ஒரு தவறு செய்கிறார். அதைத் திருத்திக்கொண்டு, மேலே செல்வோம். நண்பர் எண்ணுகிறபடி, தாண்டன் ஜி காசியில் பேசவில்லை; அலஹாபாத்தில்தான் பேசினார். அவர் பேசிய பேச்சு முற்றும் நண்பரிடம் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. ஹிந்தி பேசும் மக்கள் இருபத்திரண்டு கோடி இருப்பதாக, தாண்டன் ஜி குறிப்பிட்டிருக்கிறார். இப்படிச் சொல்லும்போது, நவீன செயற்கை ஹிந்தி எழுத்தாளர்களையும் மனத்தில் வைத்துக் கொண்டே, இப்படி, தாண்டன் ஜி குறிப்பிடுகிறார் என்று இந்த முஸ்லிம் நண்பர் தவறாக எண்ணுகிறார். தாண்டன் ஜி பேசிய பேச்சின் முழு விபரமும் அவர் கைவசம் இருந்திருப்பின், இந்தப் பெருந் தவறை, அந்த நண்பர் செய்திருக்கமாட்டார். விந்திய மலைக்கு

வடக்கே வாழும் மக்களில் பெரும்பாலோர் பேசுகிற பாஷையையே ஹிந்தி என்று தாம் குறிப்பிடுவதாயும், தாம் குறிப்பிடுகிற ஜனத்தொகையில் முஸல்மான்களின் எண்ணிக்கை ஏழு கோடி அடங்கி இருப்பதாயும், அந்த பாஷை விரஜ பாஷையிலிருந்து தோன்றியதென்றும், இலக்கணம் விரஜ பாஷையையே ஒட்டி இருக்கிறது என்றும் தாண்டன்ஜி தெளிவுபடுத்திச்சொல்லி இருக்கிறார். ஹிந்தி என்பது அசலான பெயரன்று. இந்தப் பெயர் முஸ்லிம்களாலேயே அந்த மொழிக்கு இடப்பட்டதாகும். வடக்கே வாழும் மக்களுக்காக, தாங்கள் எழுதியவற்றைத் தனியே பிரித்துக்காட்டுவதற்காக, முஸ்லிம் எழுத்தாளர்கள் அதை ஹிந்தி என்ற பெயரால் அழைத்தார்கள். அவர்கள் எழுதியவை ஏறக்குறைய, சந்தேகத்திற்கு இடமின்றி, ஹிந்து சகோதரர்கள் எழுதியவற்றை ஒத்திருந்தன. பிறகே, வேற்றுமை தோன்றுவதாயிற்று. தேவநாகரி லிபியில் எழுதிய ஹிந்தி ஹிந்துக்களுக்கு உரியதென்றும், அராபி அல்லது பாரசீக லிபியில் எழுதிய ஹிந்தி முஸ்லிம்களுக்கு உரியதென்றும் வழங்குவதாயிற்று. இந்தியாவில் வசிக்கும் முஸ்லிம்கள் அனைவருக்குமே உருது தெரியும் என்று சொல்வது சரியன்று, உண்மையுமன்று. நானும் அலி சகோதரர்களும் மலையாளத்தில் வசிக்கும் மாப்பிள்ளை-மார்களோடு உருதுவில் பேசினோம். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு, மலையாள மொழிபெயர்ப்பாளரை வைத்துக்கொண்டுதான் பேசவேண்டியிருந்தது. கிழக்கு வங்காளத்திலும், இதேபோன்ற சங்கடம் அநேக முஸ்லிம்களுக் கிடையில் இருப்பதைக் கண்டோம். ஹிந்தி என்ற பதத்தை உபயோகிக்கும்போது இதே கருத்துப் படவே, தாண்டன்ஜியும் பாபு ராஜேந்திர பிரசாத்தும் உபயோகித்து இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் எனது நண்பர்கள் என்ற முறையில், நான் இதைச் சொல்கிறேன். 'ஹிந்துஸ்தானி' என்ற வார்த்தையை உபயோகிப்பதனால் மட்டும் நிலைமை தெளிவுபட்டு விடாது.

வடக்கேயுள்ள எழுத்தாளர்கள் எழுதுகிற பாஷையை 'ஹிந்தி' என்று சொல்கிறார்கள். வடக்கே யுள்ளவர்களிலேயே பெரும்பாலோருக்கு இந்த 'ஹிந்தி' புரியாது

என்று, கடிதம் எழுதியிருப்பவர் அழுத்தமாய்க் குற்றம் சாட்டுகிறார். இந்த முயற்சி, ஆர்ப்பாட்டமான பேச்சைப் போல, வெற்றி பெறாது என்பது திண்ணம்.

ஏன், 'ஹிந்தி' அல்லது 'ஹிந்துஸ்தானி' என்று வற்புறுத்திச் சொல்லுகிறீர்கள்? 'ஹிந்துஸ்தானி' என்று மட்டும் சொன்னால் போதாதா? என்று இந்த நண்பர் கேட்கலாம். இந்தச் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகளாக வேலை செய்து வருகிறது. என்னைப்போல, புதிதாக வந்து கலந்து கொண்டுள்ள ஒருவன், அதனுடைய பெயரை மாற்றிக் கொள்ளும்படி சொல்வது சரியன்று. மேலும், பெயர் மாற்ற வேண்டும் என்பதற்குக் கூறும் காரணங்களும் ஏற்றுக் கொள்ளத் தக்கவனவாக இல்லை. பழைய சங்கத்திலிருந்து புதிய 'பரிஷத்' இப்போது தோன்றி இருக்கிறது. ஒரு மொழியைத் தாய்மொழியாகக்கொண்டுள்ள, வடக்கே வாழுகிற ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்த ஸ்தாபனம் பணி செய்ய முன்வந்திருக்கிறது. எனவே, இருவருக்குமே பொதுப்பண்டையாக இருந்துவரும் தாய் மொழியை 'ஹிந்தி' என்றும் சொல்லலாம்; 'ஹிந்துஸ்தானி என்றும் சொல்லலாம். இதில் அதிக வேற்றுமை யில்லை. என்னைப் பொறுத்த வரையில், இந்த இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தான் குறிக்கின்றன. நான் பேசுகிற பேச்சு, அதே பேச்சாக இருக்கும்போது, அந்தப் பேச்சைக் குறிப்பிடுவதற்கு 'ஹிந்தி' என்ற சொல்லை உபயோகித்தால், அதற்காக நான் அவர்களோடு சண்டை போடமாட்டேன்.

'அகில பாரதீய' என்ற சொற்களை உபயோகிப்பதையும் இந்த நிருபர் மறுத்துரைக்கிறார். அப்படி மறுத்துரைப்பதன் பொருள் எனக்கு விளங்க வில்லை. இந்த இரு சொற்களின் பொருளை இந்தியாவி லுள்ள ஹிந்துக்கள் அனைவருமே அறிவர். வடக்கே வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையோருக்கு இவற்றின் பொருள் நன்கு தெரியும் என்று நான் துணிந்து கூறுவேன். நமது காலத்தில் இந்தியப் பண்பாடு உருவாகிக்கொண்டு வருகிறது. இன்று, ஒன்றோடு ஒன்று மோதிக்கொண் டிருக்கும் பண்பாடுகளை நம்மில் அனேகர் ஒன்றுசேர்த்து, ஐக்கியப்படுத்தி, ஒரு பண்பாடாகச்

செய்ய முயன்று வருகிறார்கள். அடியோடு ஒதுங்கி நிற்கும் எந்தப் பண்பாடும் நீடித்த காலம் நிலைத்திருக்காது. கலப்பற்ற ஆரியப் பண்பாடு என்பது இன்று இந்தியாவில் இல்லவே இல்லை; ஆரியர் என்போர் இந்த நாட்டைச் சேர்ந்தவர்களா அல்லது அன்னியரா என்பதைப் பற்றி நான் அதிக அக்கறை கொள்ளவில்லை. நமது முன்னோர்கள் மிகுந்த சுதந்திர உணர்ச்சியோடு கலந்து பழகினார்கள். அந்தக் கலப்பின் பயனாகவே, தற்காலத் தலைமுறையாகிய நாம் தோன்றி இருக்கிறோம். இந்தக் கலப்பிலேயே நான் அதிக அக்கறை காட்ட விரும்புகிறேன். நாம் பிறந்து வளர்ந்த நாட்டுக்கும், நம்மைத் தாங்கிப் போஷிக்கும் பூமிக்கும், நன்மை செய்கிறோமா? அல்லது வெறும் சுமையாகவே இருக்கிறோமா? என்பதை எதிர் காலமே முடிவுகட்டக் கூடும். என்னைப் பொறுத்தவரையில், புதிய 'பரிஷத்'தும் 'ஹிந்தி சாஹித்ய சம்மேளன'மும் பொது நலத்தை நோக்கமாகக்கொண்டு, இந்திய மொழிகளில் காணப்படும் சிறப்புகள் அனைத்தையும் திரட்டி, ஒன்றுபடுத்தும் என்றே நம்புகிறேன். இவ்வாறு செய்யாவிட்டால், அந்த இரண்டு ஸ்தாபனங்களும் நசித்துப் போவது திண்ணம். ஆரிய வாடை வீசுகிறது என்பதற்காக எதையும் ஒதுக்கிவிடக் கூடாது. அதேபோல, ஆங்கில வாடை வீசுகிறது, அராபிய வாடை வீசுகிறது என்பதற்காகவும் நாம் எதையும் புறக்கணித்துத் தள்ளுதல் கூடாது.

விவாதத்தை நான் அதிகமாக இந்த வாரம் வளர்க்க விரும்பவில்லை. இன்னும் சில முக்கியமான விஷயங்களை ஆராய வேண்டியதிருப்பதால், அவற்றை அடுத்த வாரம் கவனிப்போம்.

* * *

கட்டுரையில், காந்திஜி, குறிப்பிட்டுள்ள கடிதம் இதுதான்:

'ஹிந்துஸ்தானிக்கு மட்டுமே' இடமுண்டு.

"இந்தக் கடிதத்தை எழுதுவதற்குப் பதிலாக, நான் நாகபுரிக்கே சென்றிருந்தால், நலமெனத் தோன்றுகிறது. 'சாஹித்ய பரிஷத்'தின் கூட்டங்களில் கலந்துகொள்ள நான் மிகவும் ஆசைப்பட்டேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதனுடைய போக்கில் எனக்குக்

கொஞ்சமும் உடன்பாடில்லை; அந்தப் போக்கு என்னை மிகவும் வருந்தச் செய்கிறது. மாறுபட்ட அபிப்பிராய முடையவர்களையும் அவர்களுடைய எண்ணங்களையும் கண்ணியமாக மதித்து, பெருந்தன்மையோடு நடந்துகொள்ளும் தன்மையுடையவர்கள், தங்களைத் தவிர, வேறு யாருமே இந்த நாட்டில் இல்லை. தங்கள் தங்கள் மனம்போனவாறு விஷயங்களை முடிவுகட்டுகிறவர்களுக்கு, நான் தங்களிடம் தெரிவித்துக்கொள்ளும் விஷயங்கள் அகம்பாவமானவையாய்த் தோன்றுவிட்டாலும் பொருத்தமற்றனவாய்த் தோன்றினும் தோன்றலாம். எதிர்ப்பவர்கள், ஆதரிப்பவர்கள் என்ற வேற்றுமை பாராட்டாது, எல்லோரையுமே தாங்கள் சமமாகப் பாவிக்கிறீர்கள். இத்தகைய சினேக மனப்பாங்கு தங்களிடம் இருப்பதைக் கண்டே, நான் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதத் துணிந்தேன். நாம் முடிவுகட்ட வேண்டிய விஷயம் அரசியல் விஷய மன்று. அப்படி இருந்திருப்பின், அதை முடிவுகட்ட வேண்டிய இடம் வேறு. ஆனால், இப்போது விவாதத்தில் உள்ள விஷயமோ, முக்கியமாக இலக்கிய சம்பந்தமானது; பண்பாட்டை ஒட்டியது. எனக்கு உடன்பாடு இல்லாத பல விஷயங்கள் இதில் கலந்திருப்பதால், அவற்றைத் தங்களிடம் தெரிவித்துக்கொள்ள வேண்டியது எனது கடமை யாகும் என்று எண்ணியே, இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதலானேன். தங்களுக்கு விருப்பமாயுள்ள லட்சியத்திலும் போக்கிலும் ஈடுபட்டுள்ள ஒரு தொண்டரை,—பொது ஜனங்களின் உண்மையான தொண்டராக இன்று விளங்கும் ஒருவரை — ஒதுக்கிவைப்பதால் பெருங் கேடுதான் விளையும் என்று நான் நினைக்கிறேன். பிறர் எப்படி நினைத்தாலும் நினைக்கட்டும். உடன்பாட்டைப் பெறுவிட்டாலும், அனுதாபத்தையாவது பெற வேண்டு மென்ற நோக்கோடு, என் மனதில் உள்ளவற்றையெல்லாம், தங்களிடம் நான் அப்படியே கொட்டிவிட எண்ணுகிறேன்.

"ஆரம்பத்தி லிருந்தே தொடங்குகிறேன். பொதுவான அரசியல் அபிலாஷைக்குப் பொது மொழி ஒன்று இருப்பது அவசியம் என்று, சென்ற பல ஆண்டுகளாக, காங்கிரஸ் மகாசபை சொல்லிவந்திருக்கிறது. இலக்கியக் கண்கொண்டு பார்க்கும்போது, இந்த ஏற்பாட்டினுல் மேடைப் பிரசங்கிகளிடையே, பல பிழைகளும் தவறுகளும் நேர்ந்து விடுகின்றன. ஆனால், உருது இலக்கிய உலகிலோ, இதனுல் முன்பு இல்லாத அளவு எளிமையும் அழகும் ஏற்பட்டு இருக்கின்றன. இதை நான் அறிவேன். அராபிப் புத்தகங்களைப் படித்துப் படித்து, தம் வாழ்நாள் முழுவதையும் கழித்த வரும், அராபியச் சொற்களைச் சிறிது, மாற்றினும், அவற்றின் கண்ணியமும் மதிப்பும் குறைந்துவிடும் என்று கருதியவருமான மௌலானா சையத் சுலைமான் நாத்வி போன்ற எழுத்தாளர்கள்கூட, பொது மொழி மீதுள்ள பற்றுதல் காரணமாக, எளிய முறையிலும் இந்திய முறையைப் பின்பற்றியும் ஆர்வத்தோடு எழுதத் தலைபட்டுவிட்டார்கள்.

"இந்தப் பொது மொழியைக் காங்கிரஸ் வட்டாரங்களில் 'ஹிந்துஸ்தானி' என்று அழைக்கிறார்கள். 'ஹிந்தி' பேசுகிறவர்களையோ அல்லது 'உருது' பேசுகிறவர்களையோ கலந்து, ஆலோசித்து, ஒரு திட்டமான முடிவிற்கு வந்து, காங்கிரஸ் மகாசபை இந்தப் பெயரைப் பொது மொழிக்கு இடவில்லை. தொடர்பு காரணமாகப் பெயர்களுக்கு அரசியல், சமூக

சம்பந்தமான சிறப்புகள் ஏற்பட்டுவிடுகின்றன என்பது தங்களுக்குத் தெரிந்ததுதான். எனவே, நமது பொது மொழிக்கு இடுகிற பெயரும் மிக மிக முக்கியமான தொன்ருகும். உருது மொழி ஒன்றுதான் மாகாண எல்லேக்கு உட்பட்டோ, அல்லது, ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டும் உரித்தானதாகவோ இல்லை. இந்தியாவிலுள்ள முஸல்மான்கள் அனைவருக்கும் உருது பேசவரும். முஸ்லிம்களைவிட, உருது பேசத் தெரிந்த ஹிந்துக்களின் எண்ணிக்கை வடக்கே அதிகம். நமது பொது மொழியை உருது என்று அழைக்காவிட்டாலும், முஸல்மான்கள் அதற்கு ஆற்றியுள்ள பணியைக் குறிப்பிட்டுக்காட்டும் வகையிலாவது, அந்தப் பெயர் பொதுவானதாக இருக்க வேண்டு மென நான் எண்ணுகிறேன். இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு 'ஹிந்துஸ்தானி' என்ற சொல் பொருத்தமுடையதாய் இருக்கிறது. ஹிந்தி என்ற பெயர் பொருந்தவே பொருந்தாது. சென்ற காலத்தில், ஹிந்தி மொழியை முஸல்மான்கள் படித்திருக்கிருர்கள். இலக்கிய உலகில் அதை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்த பெருமை ஹிந்து சகோதரர்களுக்கு எவ்வளவு உண்டோ, அவ்வளவு முஸல்மான்களுக்கும் உண்டு. அதோடுகூட, ஹிந்தி மொழி மத இயல்பும், பண்பாட்டு இயல்பும் உடையதா யிருக்கிறது. மொத்தமாகப் பார்க்கும் போது, இந்த இயல்புகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள, முஸல்மான்கள் விரும்பமாட்டார்கள். மேலும், அதனுடைய சொற்களின் அமைப்புகளும் தனிப்பட்ட முறையில் மாற்றம் அடைந்துகொண்டு வருகின்றன. உருது மட்டும் தெரிந்தவர்களுக்கு, இனிமேல் ஹிந்தி புரியமாட்டாது.

"உருது - ஹிந்துஸ்தானி என்று அழைப்பதில் குழப்பம் இல்லை. ஹிந்தி - ஹிந்துஸ்தானி என்று அழைப்பதில் ஒரு அளவு குழப்பம் இருக்கவே செய்கிறது. இல்லாவிட்டால், இதை அழுத்தமாகச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. சென்ற வருஷம், தாங்கள் இந்தூரில் பேசிய போது, ஹிந்தியும் ஹிந்துஸ்தானியும் ஒன்றுதான் என்பதைத் திட்டமாகத் தெரிவித்திருக்கிறீர்கள்; ஹன்ஸ் பத்திரிகையின் முதல் இதழுக்கு எழுதிய முன்னுரையிலும், இரண்டும் ஒரேமொழிதான் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். பொது ஜனங்கள் பேசுகிற, பொது ஜனங்கள் கல்விகற்க ஏற்றதான், பொது ஜனங்களுக்கு உரித்தான ஒரு பாஷையையே, தாங்கள் 'ஹிந்தி' என்ற பெயரால் அழைப்பதாக எண்ணுகிறேன். ஆனல், 'ஹிந்தி'யைப் பரப்பும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களோ அவ்வாறு கருதவில்லை. ஹிந்துஸ்தானி என்ற சொல்லுக்குப் பதிலாக, ஹிந்தி என்ற சொல்லை உபயோகிக்கும்போது, சொல்லமைப்பு, சுவை, அரசியல் தொடர்பு, மதத் தொடர்பு ஆகிய யாவற்றையுமே அவர்கள் மாற்றி விடுகிருர்கள். பாரதீய சாஹித்ய சம்மேளனமும் இந்தப் போக்குக்கு இரையாவதைக் கண்டு வருந்தியே, அந்தப் போக்கை எதிர்த்து, இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு விடுத்துள்ளேன்.

"பொது மொழி ஏற்படுவதற்கு ஏற்ற, திட்டமான, ஒரு அடிப்படையைத் தோற்றுவிக்கும் என்ற நம்பிக்கையுடன், பரிஷத்தை நிறுவிய காலத்தில் மகிழ்ச்சி அடைந்தவர்களில் நானும் ஒருவன். ஹன்ஸ் பத்திரிகை வெளியிடுவதையும் நான் வரவேற்றேன். பரிஷத்தின் மற்ற

போக்குகளைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வரவில்லை. அதனுடைய போக்கையும் மனநிலையையும் **ஹன்ஸ்** பத்திரிகையின் இதழ்கள் தெரிவிக்கின்றன என்றால், அதனால் ஏற்பட்ட விளைவு வருந்தத்தக்க ஒரு பெரிய ஏமாற்றமேயாகும். நம் நாட்டினரிலே, இன்று, முன்ஷி பிரேம் சந்த் அவர்கள் மிகவும் சிறந்த ஒரு இலக்கிய எழுத்தாளராக விளங்குகிறார். இலக்கியம் என்றால், உணர்ச்சியை வெளியிடுதலும் சேவையும் கலந்தது என்று, எண்ணுகிற அரிய மனப்பாங்கு படைத்தவர் அவர். ஹிந்தி, உருது இரண்டிலுமே அவரை நிபுணர் என்று சொல்லலாம். ஹிந்து – முஸ்லிம் பண்பாட்டில் காணப்படும் இலக்கிய சம்பிரதாயங்கள், சமூக சம்பிரதாயங்கள் அனைத்திலுமுள்ள சிறந்த அம்சங்களை யெல்லாம் நாம் அவரிடம் காணலாம். முன்ஷி பிரேம் சந்த் எந்தச் சம்பிரதாயத்துக்குப் பிரதிநிதியாக விளங்கினாரோ, எத்தகைய நடையில் எழுதிவந்தாரோ அதே நடையையும், அதே சம்பிரதாயத்தையும் **ஹன்ஸ்** பத்திரிகை பின்பற்றி இருக்கவேண்டும். ஆனால், அது அவ்விதம் செய்யத் தவறிவிட்டது. நான் வருந்துவதற்குரிய காரணமும் அதுதான். படித்துப் பார்த்தால், **ஹன்ஸ்** பத்திரிகை, குறிப்பிட்ட ஒரு பகுதினருக்கு மட்டும் நடந்துவரும் பத்திரிகை போலத் தோன்றுகிறது. மற்ற ஹிந்திப் பத்திரிகைகளைவிட, அதிகமான சம்ஸ்கிருதச் சொற்களை, **ஹன்ஸ்** கையாளுகிறது. அது கையாளும் பாஷையை, ஆங்கிலம் எனச் சொன்னால் எவ்வாறு பொருந்தாதோ, அப்படியே ஹிந்துஸ்தானி எனச் சொல்வதும் பொருந்தாது. ஒரு பண்பாட்டைத் தவிர வேறு பண்பாடுகள் இந்தியாவில் உண்டு என்பதைக் காட்டுவதற்கோ, அல்லது இந்திய சமுதாயம் பல சமூகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதற்கோ உரிய அறிகுறிகள் எதுவும் **ஹன்ஸ்** பத்திரிகையில் காண முடியவில்லை. அதனுடைய போக்கும், கட்டுரைகளின் தொகுப்பும் அவ்வாறு இருக்கின்றன. இந்தப் போக்கு, ஐக்கிய உணர்ச்சியைக் காட்டவில்லை; அதிகார உணர்ச்சியைத்தான் காட்டுகிறது.

" இன்னும் சிறியதான ஒரு விஷயத்தை உதாரணமாகக் காட்டி, எனது கருத்தை விளக்குகிறேன். 'ஹிந்துஸ்தானி சாஹித்ய பரிஷத்' என்று அழையாமல், 'பாரதீய சாஹித்ய பரிஷத்' என்று அழைப்பதன் நோக்கம் எனக்கு விளங்கவில்லை. 'பரத்' என்ற சொல்லுக்கு ஏதாவது பொருள் இருக்குமாயின், ஆரிய இந்தியா என்றே பொருள்படும். இது, முஸல்மான்களையும், முஸல்மான்கள் இந்திய வாழ்க்கைக்குச் செய்துள்ள சேவையையும் புறக்கணிப்பதாயிருக்கிறது. அதோடுகூட, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட அபிவிருத்திக்கும் மாற்றங்களுக்கும் இடமில்லாமலும் செய்து விடுகிறது. புறக்கணித்து ஒதுக்குகிற மனப்பாங்கையும் பிற்போக்கான தன்மையையும் இது காட்டவில்லையா? மேலும், எங்களுக்கு வருகிற சுற்றறிக்கைகளைக் கவனிக்கும்போது, நடைமுறைச் சொற்கள் இரண்டு மூன்றுக்கு அதிகமாக அவற்றில் காணவில்லை. கலப்பற்ற சம்ஸ்கிருதச் சொற்களையே கையாளுகிறார்கள். **" நீச்சே லிக்கே ஹுயே "** என்று சாதாரண ஹிந்தியில் எழுதுவதற்குப் பதிலாக, **" நிமன் லிக்கித் "** போன்ற சம்ஸ்கிருதச் சொற்களையே கையாளுகிறார்கள்.

தேவநாகரி லிபியை நன்கு அறிந்துள்ள எனக்கு, அவர்கள் இப்படி எழுதுவதன் பொருள் யாதென விளங்க வில்லை.

" அராமி மொழியிலும் சம்ஸ்கிருத மொழியிலும் கலைச் சொற்கள் நிறைய உண்டு. சொற்களுக்காக, இந்த இரண்டு மொழிகளைமட்டும் இந்தியப் பொதுமொழி நம்பி யிருத்தல் கூடாது. அராபிய மொழியை அன்னிய மொழி எனச் சொல்லி, ஒதுக்குவோமே யானால், சம்ஸ்கிருதத்தையும் நாம் ஒதுக்க வேண்டியே ஏற்படும். ஏனெனில், சம்ஸ்கிருத மொழி எப்போதுமே இந்தியாவில் பேச்சு வழக்கில் இருந்ததில்லை. பேச்சு வழக்கில் உள்ள ஹிந்தியை யாராவது ஆராய்ந்து பார்ப்பார்களானால், அதில் காணப்படும் சம்ஸ்கிருதச் சொற்கள் அனைத்தும், நாளடைவில் உருமாறி இருப்பது புலப்படும். ஏனெனில், சம்ஸ்கிருதச் சொற்களை உச்சரிப்பது கஷ்டமாய் இருக்கிறது. முஸல்மான்களுக்கு மட்டு மல்ல. இந்திய ஜனங்கள் அனைவருக்குமே கஷ்டமாய் இருக்கிறது. 'க்ராம்', 'வர்ஷ்' போன்ற சிறிய சொற்கள்கூட 'காம்,' 'பரஸ்' என்று உருமாறிவிட்டன. ஹிந்திக்குப் பரிந்துபேசுகிறவர்களில், அனேகர் இவற்றை யெல்லாம் மறந்துவிடுகிறார்கள். காரணம், இவற்றுக்கும் இவைபோன்ற வேறு சொற்களுக்கும் மூலச் சம்ஸ்கிருதச் சொற்களையே இவர்கள் கையாண்டு வருகிறார்கள். இதற்குக் காரணம் அறியாமையா ? அல்லது, பகைமை யுணர்ச்சியா ? கல்விச் செருக்கா ? ஒன்றும் விளங்கவில்லை. உருது மொழியிலோ, பேச்சு வழக்கிலுள்ள சொற்களே கையாளப்படுகிறது. இதை, யெல்லோருமே அறிவர்; நான் சொல்லித்தான் தெரிய வேண்டு மென்ப தில்லை. இதிலிருந்து ஹிந்தி மொழியைப் பரப்ப விரும்புகிறவர்கள், உயிருள்ள, பேச்சு வழக்கிலுள்ள பாஷையைப் பரப்ப முயலாது, இந்திய வாழ்வை ஆரிய மயமாக்குவதிலேயே நேரடியாக முனைந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஹிந்துக்கள் தங்களுக்குள்ளே சீர்திருத்தம் செய்துகொள்வதைப்பற்றியோ, அல்லது எதிர்மாறான காரியங்களில் ஈடுபடுவதைப்பற்றியோ முஸல்மான்கள் கவலைகொள்ளவில்லை. ஆனால், பொதுமொழிப் பிரசினையில், மொழி சம்பந்தமான காரியங்களைத் தவிர, வேறு இயக்கங்களுக்குக் கண்டிப்பாக இடங் கொடுத்தல் கூடாது. பொதுஜன நேர்மை என்பது, இப்படிப்பட்ட போக்கை எதிர்க்கும்படி தூண்டுகிறது.

" அப்துல் சாஹெப்பிற்கு எழுதிய கடிதத்தில், ஸ்ரீ கே. எம். முன்ஷி 'குஜராத்தியர்களும், மராட்டியர்களும், மலையாளிகளும், வங்காளிகளும் சுத்தமான உருதுக் கலப்பின்றியே தங்களது தாய் மொழிகளை வளர்த்து வந்திருக்கிறார்கள். நாங்கள் ஹிந்தியில் எழுத விரும்பினால் சம்ஸ்கிருதம் கலந்த ஹிந்திதான் எங்களுக்கு எழுத வரும்' எனச் சொல்லுகிறார். குஜராத்தி, மராத்தி, வங்காளி முதலிய மொழிகளில் கூடிய அளவு பாரசீகச் சொற்கள் கலந்திருப்பதை நான் அறிவேன். முஸல்மான்களோடும், பிறரோடும் கலந்து நெருங்கிப் பழகுவதற்கு, சம்ஸ்கிருதம் கலந்த பாஷையே, வங்காள ஹிந்துக்களுக்கும் கூர்ஜர ஹிந்துக்களுக்கும் எளிதாய் இருக்கும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், நாம் இப்போது பேசுவது சுத்தமான உருதுச் சொற்களைப்பற்றி யன்று. வட இந்தியாவில் பேச்சு வழக்கிலுள்ள பாஷை எது என்பதையே ஆராய்கிறோம்.

பொதுமொழிக்கு ஏற்படும் அடிப்படை, பேச்சு வழக்கிலுள்ள பாஷையாக இருக்குமானால், முஸ்லிம்கள் மனங்கலந்து ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறார்கள். அப்படியின்றி, மீண்டும் சம்ஸ்கிருதத்திற்குள்ளேயே புகுந்து-கொள்கிற காரியமாய் இருக்கும் பட்சத்தில், முஸ்லிம்களையும், முஸ்லிம்கள் சென்ற காலத்தில் வங்காளி, மராட்டி, குஜராத்தி மொழிகளுக்குச் செய்துள்ள தொண்டையும் அது புறக்கணிப்பதாக ஆகிறது. இந்த விதமான நிலைகளில் எங்களது ஒத்துழைப்பை நாடுவது, எங்களையே நாங்கள் தற்கொலை செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்பதையே ஒக்கும்.

"இந்த மாதம் முதல் வாரத்தில், காசியில் ஹிந்தி மியூஸியத்தை திறந்துவைத்து, ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தி யிருக்கிறார். அதைப் படித்துப்பார்த்தால் ஹிந்தி – உருது விவாதம் ஒரு அபாயகரமான நெருக்கடியை உண்டுபண்ணி, வகுப்புப் பிரசினையில் கொண்டுபோய்த் தள்ளிவிடும் என்பது நிச்சயம். சீன மொழிக்கு அடுத்தபடியாக, அதிகமான ஜனங்கள் பேசும் பாஷை ஹிந்திதான் என்று தாண்டன் சொல்லுகிறார். இப்படிச் சொல்லுவதன் மூலம், பொது மொழிப் பிரசினையே தீர்ந்துவிட்டது என்று இவர் கருது-கிறார்போலும். பெரும்பான்மையான இந்தியர்கள் ஹிந்தி பேசுகிறபடியால், ஹிந்திதான் பொது மொழியாக வரமுடியுமென்று கருதுகிறார். தாண்டன் சொல்லுகிற எண்ணிக்கை, ஹிந்துஸ்தானி வேண்டுமென்று கூச்சல் போடுகிறவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாய் இருப்பதால், இதைப்பற்றி அக்கரை கொள்ளவேண்டியதில்லை என்று ஆகிறது. மண்டையை உடைப்பதனால் மட்டும் எப்படி ஒரு பிரசினை தீர்ந்துவிடாதோ, அதேபோல, மண்டையை எண்ணுவதால் மட்டும் எந்தப் பிரசினையும் தீர்ந்து விடாது. மிஸ்டர் தாண்டன் கொண்டுள்ள அபிப்பிராயம் எதுவாய் இருந்தாலும் சரி, இந்த எண்ணம், இன்னொரு கேவலமான வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு அடிகோலுவதாக இருக்கிறது.

"தங்களுடைய செல்வாக்கினால் தூண்டப்பட்ட கண்ணியமும், மன உறுதியுமே எங்களை உதவி செய்து காப்பாற்ற முடியும். நான் கீழே சில குறிப்புகள் தந்திருக்கிறேன். எனது தாழ்மையான அபிப்பிராயத்தில் இந்தக் குறிப்புகள் அறிவுக்குப் பொருந்தியவையாயும், பொது மொழியை உருவாக்குவதற்கு நியாயமான அடிப்படையைக்கொண்டவையாயும் இருக்கின்றன. இவற்றைப் படித்து, நன்கு சிந்தித்து, தங்கள் மனத்திற்கு இவை உவந்தவையாக இருப்பின், நோக்கத்திற்கும் லட்சியத்திற்கும் பயன்படுவனவாய் இருப்பின், இவற்றைப் பிறருக்கும் தாங்கள் அறிவிக்கலாம். தாங்கள் வெளிப்படையாகவே சொல்லக்கூடிய அளவிற்கு, இந்தக் குறிப்புகள் அடிப்படையாய் அமையும் என்று நான் இப்போது கனவு கண்டுகொண்டு இருக்கிறேன்.

குறிப்புகள் :

1. நமது பொது மொழியை 'ஹிந்தி' என்று அழைத்தல் கூடாது. 'ஹிந்துஸ்தானி' என்றே அழைக்க வேண்டும்.

2. எந்தச் சமூகத்துடனும் ஹிந்துஸ்தானி மொழிக்கு மத சம்பந்தமான தொடர்புகள் இருப்பதாகக் கருதக் கூடாது.

3. தேசச் சொற்களா, அன்னிய மொழிச் சொற்களா என்று சொற்களை ஆராயாது, பேச்சு வழக்கிலுள்ள சொற்களையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

4. 'உருது' எழுதும்போது, ஹிந்துக்கள் வழங்கியுள்ள சொற்களையும், 'ஹிந்தி' எழுதும்போது முஸ்லிம்கள் வழங்கியுள்ள சொற்களையும் நடைமுறைப் பேச்சு வழக்கில் உள்ள சொற்களாகக்கொள்ளுதல் கூடாது. பகுதி பகுதியாக ஹிந்தியோ, உருதுவோ வழங்கும்போது அது கணக்கில் சேராது.

5. கலைச் சொற்களை, சிறப்பாக அரசியல் சொற்களை, உபயோகிக்கும்போது, சம்ஸ்கிருதச் சொற்களுக்கு அதிகச் சலுகை காட்டக் கூடாது. நடைமுறையில், இயல்பாகவே பேச்சு வழக்கிலுள்ள, சம்ஸ்கிருத, ஹிந்தி, உருதுச் சொற்களுக்கே சலுகை காட்ட வேண்டும்.

6. அராபி லிபி, தேவநாகரி லிபி இரண்டையும் நடைமுறையில் உள்ளனவாயும் அரசாங்க லிபிகளாகவும் கருத வேண்டும். உத்தியோக தோரணையில், ஹிந்துஸ்தானியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த இரண்டு லிபிகள் மூலமாகவும் எழுதுவதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டும்.

"சில நண்பர்களுக்கு இவை முஸ்லிம் கோரிக்கைகள் போலத் தோன்றலாம். இவை முஸ்லிம் கோரிக்கைகள் அன்று. தாங்களும் 'பரிஷத்' தும் பொது மொழி சம்பந்தமாக, மேற்கண்டவை போன்ற உறுதி மொழி ஏதாவது கூறிவிட்டால், பொது மொழி வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பைப் பெற முடியாது என்பதை நான் அறிவேன். எனது கருத்துக்களைத் தங்களிடம் தெரிவித்து விட்டேன். எனது கோரிக்கைகள் அதிகமாய் இருப்பின், மன்னித்துவிடுங்கள். நியாயத்திற்குப் புறம்பானவையாய் இருப்பின், அவை உங்களுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணாது என நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், எனது கடமையை நிறைவேற்றும் பொருட்டே இதை எழுதி இருக்கிறேன். நீதியிலும் பொறுமையிலும் தங்களுக்கு மிகுந்த பற்றுதலுண்டு; அதனால், தங்களிடமும், தங்களின் தீர்ப்பினிடமும் அளவிலாத நம்பிக்கை வைத்தே, இந்த வேண்டுகோளைச் சமர்ப்பித்து இருக்கிறேன்" — 'எம்'

# ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி -உ-

''கார்ன்வால், மிடில்செக்ஸ், லங்காஷயர் முதலிய இடங்களில் வழங்கும் பேச்சுகள் வெவ்வேறா யிருப்பினும், எப்படி அவை யாவும் ஒரே பாஷையைச் சேர்ந்தனவோ, அதேபோல ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது ஆகிய மூன்று பெயர்களும் ஒரே மொழியைக் குறிப்பன வாகும். புது மொழி ஒன்றைச் சிருஷ்டிப்பது நமது நோக்க மன்று. மூன்று பெயரினாலும் வழங்கி வருகின்றவற்றை ஒன்றுபடுத்தி, ஒரு மொழியாக்கி, மாகாணங் களுக் கிடையே, அதை ஒரு பொது மொழியாகவும் ஆக்கவே, நாம் முயன்று வருகிறோம்.''

ஹிந்தி என்ற சொல்லும் ஹிந்துஸ்தானி என்ற சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கின்ற சொற்கள் என்பதற்குரிய காரணங்களையும், 'ஹிந்தி' என்ற சொல்லை ஏன் உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்குரிய காரணத்தையும் ஏற்கனவே எழுதியுள்ள கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

ஹிந்தி என்ற சொல்லை உபயோகப்படுத்துவதை மறுத்து, எழுதியிருந்த கடிதத்தின் பகுதியை, சென்ற வார இதழில் காணலாம். அது வருமாறு :

''சென்ற காலத்தில், ஹிந்தி மொழியை முஸல்மான்கள் படித்திருக்கிறார்கள். இலக்கிய உலகில் அதை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்த பெருமை, ஹிந்து சகோதரர்களுக்கு எவ்வளவு உண்டோ, அவ்வளவு முஸல்மான்களுக்கும் உண்டு. அதோடுகூட, ஹிந்தி மொழி மத இயல்பும் பண்பாட்டு இயல்பும் உடையதா யிருக்கிறது. மொத்தமாகப் பார்க்கும்போது, இந்த இயல்புகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள, முஸல்மான்கள் விரும்பமாட்டார்கள். மேலும், அதனுடைய சொற்களின் அமைப்புகளும் தனிப்பட்ட முறையில் மாற்றம் அடைந்துகொண்டு வருகின்றன. உருது மட்டும் தெரிந்தவர்களுக்கு, இனிமேல் 'ஹிந்தி' புரியமாட்டாது.''

சென்ற காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஹிந்தியைப் படித்தும், அதை வளம்படுத்தியும் வந்திருப்பின், இந்தத் தலைமுறையைச் சேர்ந்த முஸ்லிம்கள் அவ்விதம் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இன்று, நடைமுறையிலிருக்கும் நவீன ஹிந்தியைக் காட்டிலும் ஆதி காலத்தில் ஹிந்தி மொழிக்கு, பண்பாட்டுத் தொடர்பும், மதத் தொடர்பும் அதிகமிருந்தது உண்மைதான். மதத் தொடர்பும் பண்-

பாட்டுத் தொடர்பும் இருப்பதற்காக ஒரு மொழியை வேண்டாமென்று புறக்கணித்து விடலாமா? மதத் தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் இருப்பதற்காகப் பாரசீக மொழியையும், அராபிய மொழியையும் நான் ஒதுக்குவது நியாயமாகுமா? அவற்றின்மீது எனக்கு வெறுப்பு இருந்தாலோ, அல்லது, வெறுக்க விரும்பினாலோ அன்றி, மதத் தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் என்னை வந்து பாதிக்க மாட்டா. ரத்தக் கலப்புள்ள சகோதரர்களாகிய நாம், ரத்தக் கலப்புள்ள சகோதரர்களாகவே வாழ விரும்பினால், ஒருவருடைய பண்பாட்டை ஒருவர் கேவலமாகப் பேசுவதும்; சண்டையிடுதலும் கூடாது. சம்ஸ்கிருதச் சொற்களை ஹிந்தியில் அதிகமாக உபயோகிப்பதற்காக அந்தப் பாஷை மீதே நாம் கோபங்கொள்ளலாமா? சண்டையிட்டுக்கொள்கிற அளவுக்கு வெறுப்புணர்ச்சி காட்டலாமா? நடைமுறையிலிருக்கிற எளிய சொற்களுக்குப் பதிலாக, சம்ஸ்கிருதச் சொற்களை இயற்கைக்கு மாறுபட்ட முறையில் உபயோகிப்பதையோ, அல்லது சம்ஸ்கிருதத்திலிருந்து மருவிவந்த சொற்களுக்குச் சம்ஸ்கிருத மூலச்சொற்களை உபயோகிப்பதையோ, சந்தேகத்திற்கு இடமின்றிக் கண்டிக்க வேண்டியதுதான். அப்படி உபயோகிப்பதனால், ஒரு பாஷையின் அழகே, இனிமையே குன்றிவிடும். சிறப்பான முறையில், விருப்பு வெறுப்பின்றி, ஒரு மொழியை, சம்ஸ்கிருதம் மட்டும் தெரிந்த ஹிந்துக்கள் எழுதுவார்களே யானால், சில சம்ஸ்கிருதச் சொற்கள் இயல்பாகவே வந்து விழுந்துவிடும். அதே பாஷையை, அராபி மட்டும் தெரிந்த முஸ்லிம்கள் எழுதுவார்களாயின், சில அராபியச் சொற்கள் இயல்பாகவே வந்து விழுந்துவிடும். சமுதாயம் விரிவு அடைய அடைய, இந்த நிலை தவிர்க்க முடியாத ஒரு நிலையாகும். படித்த முஸல்மான்களும், ஹிந்துக்களும் இந்த இரு துறைகளையும் — அதாவது இரு மொழிகளின் சொல் வடிவங்களையும்—தெரிந்துகொள்வது அவசிய மாகும். வளருகிற மொழிகள் அனைத்திற்குமே இது பொருந்துகிற உண்மையல்லவா? Sympathy Fellow feeling Fatherly - Paternal Yearly Annual என்ற இருவிதச் சொற்களை, படித்த ஆங்கிலேயர் அனைவ

ருமே அறிவர். நமக்குள் இன்னும் சரியானபடி இதய ஒற்றுமை ஏற்படவில்லை. இரு தரப்பிலும் சிறந்து விளங்கு பவர்களைக்கூட, சந்தேகப் பேய் பிடித்து ஆட்டுகிறது. இது-தான் இப்போதுள்ள சங்கடமான நிலை.

கார்ன்வால், மிடில்செக்ஸ், லங்காஷயர் முதலிய இடங்களில் வழங்கும் பேச்சுகள் வெவ்வேறாயிருப்பினும், எப்படி அவை யாவும் ஒரே பாஷையைச் சேர்ந்தனவோ, அதேபோல ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது ஆகிய மூன்று பெயர்களும் ஒரே மொழியைக் குறிப்பன வாகும். புது மொழி ஒன்றைச் சிருஷ்டிப்பது நமது நோக்க மன்று. மூன்று பெயரினாலும் வழங்கி வருகின்றவற்றை ஒன்று படுத்தி, ஒரு மொழியாக்கி, மாகாணங்களுக்கிடையே, அதை ஒரு பொது மொழியாகவும் ஆக்கவே, நாம் முயன்று வரு கிறோம். ஹன்ஸ் பத்திரிகையில் கையாளப்படும் நடையை, ஸ்ரீ முன்ஷி ஆதரித்துப் பேசியிருப்பது சரி என்றே நான் நம்புகிறேன். தமிழ் அல்லது தெலுங்குப் பாட்டை ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானியில் மொழிபெயர்ப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது, சம்ஸ்கிருதச் சொற்களை உபயோகிக்க வேண்டிய நிலை கட்டாயம் ஏற்படும். எப்படி அராபியிலிருந்து ஒரு பாட்டை ஹிந்தி, அல்லது ஹிந்துஸ்தானியில் மொழிபெயர்த்தால், அராபியச் சொற்களைத் தவிர்க்க முடியாதோ, அதேபோலத்தான் இதுவும். வங்க மொழியில் சம்ஸ்கிருதச் சொற்கள் அதிகம். தாகூர் எழுதியுள்ள கீதாஞ்சலியை வங்க மொழியிலிருந்து ஹிந்தி-ஹிந்துஸ்தானியில் மொழிபெயர்க்கும்போது, நாம் வேண்டுமென்றே சம்ஸ்கிருதச் சொற்களை நீக்கிவிடுவோமாயின், அதனுடைய இனிமை குன்றிவிடும். மௌல்வி அப்துல் ஹக் அல்லது அஃவில் சாஹெப் போன்ற முஸல்மான்கள் தங்களாலானவரை முயன்று, பொதுமொழியில் எழுதமுன்-வர வேண்டும்; ஹிந்துக்கள் மட்டும் பேசக் கூடிய பாஷையாக அதை விட்டுவிடக் கூடாது. ஹிந்தியை ஹிந்துக்கள் பேசும் பாஷையாகவும், உருதுவை முஸ்லிம்கள் பேசும் பாஷையாகவும் எண்ணுதவாறும், அந்த எண்ணத்தை இரு தரப்பினரும் மறந்துவிடும்படியும் எடுத்துச்சொல்ல

என்றால் ஆனவரை முயல்வேன். கைவிடாதபடி இந்த எண்ணத்தை அவர்கள் இருவரும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்வார்களேயானால், வட இந்தியாவில் வாழும் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பொது மொழி என்பதே இல்லாது போய்விடும். எந்தப் பெயர்கொண்டு அழைப்பினும் சரியே, பொது மொழி என்பது இருக்கவே இருக்காது. இந்த எண்ணத்தோடு பார்த்தால், பெயரைப்பற்றி சண்டையிட்டுக்கொள்ள வேண்டிய அவசியமே இராது. மனப்பூர்வமாக நீங்கள் உபயோகிக்கும் சொல், பொது மொழி என்பதையே குறிப்பிடுவதாயின், அதை நீங்கள் எப் பெயர்கொண்டு அழைப்பினும் பாதகமில்லை.

லிபிப் பிரசினை பாக்கியாக நிற்கிறது. தற்சமயத்தில் முஸல்மான்களைத் தேவநாகரி லிபியைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்துவது சரி யன்று. அதேபோல, பெரும்பான்மையாகவுள்ள ஹிந்துக்களை உருது லிபியைக் கையாளும்படி வற்புறுத்துவதும் தகுதியாக மாட்டாது. தேவநாகரி லிபியிலாவது, அல்லது உருது லிபியிலாவது எழுதி, வடக்கே வாழும் முஸல்மான்களும், ஹிந்துக்களும் புரிந்துகொள்ளக் கூடிய பாஷையையே பொதுப்படையாக ஹிந்தி - ஹிந்துஸ்தானி என வியாக்கியானம் செய்திருக்கிறேன். இதற்குப் பல எதிர்ப்புகள் இருப்பினும், இந்த வியாக்கியானமே சரி யென்று நான் எண்ணுகிறேன். சந்தேகத்திற்கு இடமின்றி, எனக்கும் தேவநாகரி லிபி இயக்கத்திற்கும் தொடர்புண்டு. அந்த இயக்கத்தில் நான் மனப்பூர்வமாக ஈடுபட்டு வருகிறேன். பல பல மாகாணங்களில், பேச்சு வழக்கில் இருக்கிற பாஷைகள் யாவற்றிற்கும் தேவநாகரி லிபியைப் பொது லிபியாகக் கொள்ள வேண்டுமென்பது என் கருத்து. சிறப்பாக, எந்த மொழியில் சம்ஸ்கிருதச் சொற்கள் நிறைய இருக்கின்றனவோ, அந்த மொழியைத் தேவநாகரி லிபியில் எழுதுவது நல்லது. எது எப்படியாயினும் சரி, இந்திய மொழிகள் அனைத்திலுமுள்ள சிறந்த இலக்கியச் செல்வங்களை, தேவநாகரி லிபியில் லிபிமாற்றம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன.

# சில வெளிப்படையான காரணங்கள்

" வடக்கே ஸ்ரீநகரிலிருந்து தெற்கே கன்னியா குமரிவரையிலும், மேற்கே கராச்சியிலிருந்து கிழக்கே திப்ருகார் வரையிலும் பரந்துள்ள இந்தியாவை மனசால் ஒருசேரச் சிறிது நேரம் எண்ணிப்பாருங்கள். இந்தியர் என்ற முறையிலே இவ்வாறு எண்ணுவது அவசியமல்லவா? அப்படி எண்ணும்போது, ஹிந்தி பாஷை எவ்வளவு அவசியமென்பதை உணர்ந்துகொள்வீர்கள். இவ்வாறு சேர்த்தெண்ணுவதற்கு, ஹிந்தி மொழியொன்றே துணைசெய்யும் என்பதையும், அதைக் கற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கண்டுகொள்வீர்கள்."

பெங்களூரில் நடந்த கர்னுடக ஹிந்தி பட்டமளிப்பு விழாவில், காந்திஜி பின்வருமாறு பேசினர் :

'ஹிந்தி' அல்லது 'ஹிந்துஸ்தானி'தான் தேசிய பாஷையாக இருக்க முடியும் என்பதைச் சில வெளிப்படையான காரணங்களைக்கொண்டு, நான் இப்போது விளக்கிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, கன்னட தேசத்தின் எல்லைக்குள்ளே இருந்துகொண்டு, வெளியே நடக்கிற விஷயங்களில் நீங்கள் சிரத்தைகொள்ளாதிருக்கிறவரையில், உங்களுக்குக் கன்னட பாஷை மட்டும் தெரிந்தால் போதுமானதாகும். ஆனல், கன்னட தேசத்திலுள்ள ஒரு கிராமத்திலே இன்று நடப்பவைகளைக் கவனித்துப் பாருங்கள். மக்களுடைய எண்ணங்கள் கன்னட தேசம் என்ற அளவோடு நின்றுவிடவில்லை. இந்தியா முழுவதையுமே ஒன்றுசேர்த்துப் பார்க்கிற மனநிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கன்னட தேசத்திற்கு வெளியே நடக்கிற காரியங்களோடும் நீங்கள் தொடர்பு பூண்டிருக்கிறீர்கள். அந்தத் தொடர்பை, செயல்முறையில் பயன்பெறச் செய்வதற்கு, பொது மொழி ஒன்று அவசியம் இருந்தாக வேண்டும். சிந்து மாகாணத்திலிருந்தும், ஐக்கிய மாகாணத்திலிருந்தும் வருபவர்களோடு, கன்னடம் பேசுகிற ஒருவர் பொது மொழி ஒன்றில்லாமல் எப்படித் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும்? "ஆங்கிலத்தைப் பொது மொழியாக வைத்துக்கொண்

டால் போகிறது" என்று நம்மவர்களில் சிலர் சொல்லக் கூடும். ஏதோ சில ஆயிரம்பேர்தான் நம்மவர்களில் ஆங்கிலம் படித்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலமே பொது மொழியாய் இருந்தால் போதுமானதாகும். ஆனால், இந்த ஏற்பாடு உங்களுக்குத் திருப்தி அளிக்காதென்பது நிச்சயம். இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பல மாகாணங்களில் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; நீங்களும் அப்படியே விரும்புவீர்கள். இன்னும் பல தலைமுறைகள் நாம் படித்தாலுமே, எல்லோருக்கும் பொது மொழியாக ஆங்கிலத்தை ஆக்கிக்கொள்ளலாம் என்பது முடியாத காரியம். எல்லோருமே ஆங்கிலத்தைப் படிக்க வேண்டிய ஆவசியம், என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அப்படியே படிப்பதாக வைத்துக்கொண்டாலும், சம்பாத்தியம் செய்ய ஆங்கிலம் உதவும் என்ற நிச்சயமாவது உண்டா? ஆங்கிலம் படிப்பதால் சம்பாத்தியம் செய்ய முடியும் என்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படியே சம்பாதிக்க முடியும் என்று வைத்துக்கொண்டாலும், ஆங்கிலத்தை எல்லோருமே படித்துவிட்டால், அதற்குள்ள மதிப்புக் குறைந்துவிடாதா? தவிர, ஆங்கிலம் படிப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன; ஆனால், 'ஹிந்தி' 'ஹிந்துஸ்தானி' படிப்பதில் அவ்வளவு சிரமம் இல்லை. ஆங்கிலம் படிப்பதற்கு நீண்ட காலம் ஆவதுபோல, ஹிந்தி படிப்பதற்கு ஆகாது. 'ஹிந்தி' 'ஹிந்துஸ்தானி' பேசுகிறவர்கள், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து இருபது கோடிக்கு மேல் இருக்கிறார்கள். கன்னடம் பேசுகிறவர்கள், ஆண்களும் பெண்களுமாக இப்போது, ஒரு கோடிக்குச் சற்று அதிகமாக 110 லட்சம் பேர் இருக்கிறார்கள். சகோதர சகோதரிகளாயுள்ள இருபது கோடி மக்கள் பேசுகிற பாஷையைக் கற்க வேண்டும் என்கிற ஆசை, கன்னட தேச மக்களுக்கு இல்லாமலா போய்விடும்? மேலும், ஹிந்தி மிக எளிதாகக் கற்றுக் கொள்ளக் கூடியதுதானே? லேடி ராமன் (ஸர். சி. வி. ராமன் மனைவியார்) பேசிய ஹிந்திப் பேச்சை ஒருவர் கன்

னடத்தில் மொழிபெயர்த்துச்சொல்ல நீங்கள் இப்போது கேட்டீர்கள். மொழிபெயர்ப்பாளர் அநேக ஹிந்திச் சொற்களை அப்படியே உபயோகித்தார். **பிரேமா, பிரேமி, சங்கம், அத்தியக்ஷர், பாதம், ஆனந்தம், பக்தி, ஸ்வாகதம், அத்தியக்ஷதம், சம்மேளனம்** போன்ற சொற்கள் கன்னடத்திற்கும் ஹிந்திக்கும் பொதுவாகவே இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். லேடி ராமன் பேசியதை ஒருவர் இப்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்வதனால், மேலே சொன்ன சொற்களை யெல்லாம் அப்படியே அவர் கையாண்டிருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. இந்தச் சொற்களுக்கு நேரான ஆங்கிலச் சொற்கள் கேட்பவர்களுக்கு, என்றும் கேளாத புதிய சொற்களாகவே இருக்கும். இதையெல்லாம் பார்க்கும்போது, ஹிந்தி பாஷையை எளிதாய்க் கற்றுக்கொண்டுவிடலாம் என்று தோன்றவில்லையா? 'ஹிந்தி' கற்பது கஷ்டமானது என்று கன்னட சகோதரர்கள் சொல்லும்போது, எனக்குக் கோபமும் ஆத்திரமும் மட்டும் உண்டாகவில்லை; சிரிப்பும் கூட வருகிறது. தினமும் கொஞ்ச நேரம் பயின்றால், ஒரு மாதத்தில் நிச்சயமாய் ஹிந்தியைக் கற்றுக்கொண்டுவிடலாம். எனக்கு இப்போது வயது 67. நான் இன்னும் அதிகநாள் இருக்கப்போவதில்லை. அப்படி இருந்தும், இந்தக் கன்னட மொழிபெயர்ப்பைக் கேட்டபோது, தினமும் கொஞ்ச நேரம் படித்தால், ஏழெட்டு நாட்களில் கன்னடத்தைக் கற்றுவிடலாம் என்று தோன்றிற்று. கனம் சீனிவாச சாஸ்திரியாரையும் என்னையும் போன்ற சிலர் நீங்கலாக, இங்குள்ள நீங்கள் அனைவரும் இளைஞர்கள். ஹிந்தியைக் கற்றுக்கொள்வதற்கு, ஒரு நாளைக்கு நான்கு மணி வீதம் நீங்கள் ஒரு மாதம் செலவு செய்தால் போதும். இதற்கு வேண்டிய உற்சாகமும், ஊக்கமும் உங்களிடம் இல்லாமலா போய்விட்டது? நமது நாட்டிலிருக்கும் இருபது கோடி மக்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்காகக் கொஞ்ச நேரம் ஒரு பாஷையைக் கற்பது வீணென்று கருதுகிறீர்கள்? இருக்கட்டும். உங்களில் ஆங்கிலம் தெரியாது இருக்கும் சிலர், ஆங்கிலம் கற்க எண்ணுவதாக வைத்துக்கொள்

வோம். நாள் ஒன்றுக்கு நான்கு மணி நேரம் செலவிட்டு, ஒரு மாதத்திலேயே ஆங்கிலத்தைக் கற்று விடலாம் என்ற நம்பிக்கை இங்கிருப்பவர்களில் யாருக்காவது உண்டா? இருக்க முடியாது. தென் இந்தியாவில் உள்ள நான்கு பாஷைகளிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் நிறையக் கலந்திருக்கின்றன; ஆகையால்தான் ஹிந்தியைக் கற்றுக்கொள்வது நமக்கு மிகமிக எளிதாய் இருக்கிறது. பண்டைக் காலத்தில், தென் இந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் இடையே, சம்ஸ்கிருத பாஷை மூலமாகவே சம்பந்தமிருந்து வந்தது என்பதைச் சரித்திர வாயிலாக அறிகிறோம். இன்றைக்கும் தென் நாட்டிலுள்ள சாஸ்திரிகள் வட நாட்டிலுள்ள சாஸ்திரிகளுடனே, சம்ஸ்கிருத பாஷை மூலமாகவே சர்ச்சை செய்கிறார்கள். நம் நாட்டிலுள்ள வெவ்வேறு மொழிகளுக்குள் இருக்கும் வித்தியாசம் எல்லாம் பெரும் பாலும் இலக்கணம் பற்றிய வித்தியாசங்களே. வட இந்திய மொழிகளுக்குள்ளே, இலக்கண அமைப்புங்கூட ஒத்தேயிருக்கிறது. தென் இந்திய மொழிகளிலோ, இலக்கண வித்தியாசம் அதிகம். சம்ஸ்கிருத பாஷையோடு கலப்பு ஏற்படும் முன்னர், அவற்றின் சொற்களிலும் பெருத்த வித்தியாசம் இருந்தது. ஆனல், இப்போது தென் இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவிட்டன. இதனாலே, தென் இந்தியாவில் பிரயாணம் செய்யும்போது, பாஷை சம்மந்தமாக எனக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிறதில்லை. கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் இந்த நான்கு பஷைகளில் ஒன்றில், யாரேனும் பேசினல், பேசியதன் சாராம்சத்தை நான் எளிதில் புரிந்துகொள்கிறேன்.

இனி, நமது முஸ்லிம் நண்பர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டும். அவர்கள் வசித்துவரும் மாகாணத்தில் வழங்கும் பாஷை அவர்களுக்கு இயல்பாகவே தெரிந்திருக்கும். அதோடு உருது பாஷையும் தெரியும். ஹிந்திக்கும் அல்லது உருது - ஹிந்துஸ்தானிக்கும் வித்தியாசமே இல்லை. இலக்கணமோ இரண்டிற்கும் பொது. எழுத்திலேதான் இரண்டிற்கும் வித்தியாசம். பார்க்கப்போனல், இந்தப் பெயர்கள் மூன்றும் ஒரே பஷையைத்தான் குறிப்

பிடுகின்றன. அவற்றின் அகராதிகளைப் புரட்டிப்பார்த்தால், பெரும்பாலான சொற்கள் ஒன்றாகவே இருப்பதைக் காண்போம். ஆகவே, எழுத்தைத் தவிர வேறு ஒரு கஷ்டமும் இருக்கிறதாகத் தெரியவில்லை. அதுவும் காலக்கிரமத்தில், தானே சரிப்பட்டு விடும்.

தொடக்கத்தில், ஹிந்திதான் தேசிய பாஷையாக இருக்க முடியுமென்று சொன்னேன். வடக்கே ஸ்ரீ நகரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையிலும், மேற்கே கராச்சியிலிருந்து கிழக்கே திப்ருகார் வரையிலும் பரந்துள்ள இந்தியாவை மனசால் ஒருசேரச் சிறிது நேரம் எண்ணிப்பாருங்கள். இந்தியர் என்ற முறையிலே இவ்வாறு எண்ணுவது அவசியம் அல்லவா? அப்படி எண்ணும்போது, ஹிந்தி பாஷை எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்துகொள்வீர்கள். இவ்வாறு சேர்த்தெண்ணுவதற்கு, ஹிந்தி மொழி யொன்றே துணைசெய்யும் என்பதையும், அதைக் கற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கண்டுகொள்வீர்கள். இந் நாட்டுப் பொதுமொழியாக ஆங்கிலம் இருக்க முடியாது என்பதையும் உங்களுக்கு எடுத்துக்காட்டினேன். ஆங்கில பாஷைமீது எனக்கு வெறுப்பில்லை. சில அறிவாளிகளுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்தான். எல்லா நாடுகளோடும் தொடர்பு வைத்துக்கொள்ளவும், மேலை நாட்டு சயன்ஸ் ஆராய்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும், ஆங்கிலப் பயிற்சி இன்றியமையாததுதான். அளவிற்கு மிஞ்சி ஆங்கிலத்திற்குப் பிரதானம் கொடுக்கச் சிலர் முயல்வதைக் கண்டே, எனக்கு மிகவும் வருத்தமுண்டாகிறது. இம்முயற்சி தோல்வியுறும் என்பதில் சந்தேகமில்லை. அததற்குத் தகுந்த இடத்திலேதான், அதது சோபிக்க முடியும்.

ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொடுப்பதனால், கன்னட பாஷையின் வளர்ச்சி குன்றிப்போகும் என்றும், கன்னட பாஷைக்கு உரிய ஸ்தானத்தில் 'ஹிந்தி' வந்து அமர்ந்து கொள்ளும் என்றும் சிலர் அஞ்சுகிறார்கள். இதை வீண் கலவரம் என்றே சொல்லுவேன். பிறமொழிகளின் ஸ்தானத்தில் 'ஹிந்தி' அமர்ந்துவிடும் என்பதற்கு மாறாக, ஹிந்தி

யால் நன்மையே ஏற்படும் என்று சொல்லவேண்டும். ஹிந்தியைப் பரப்பப் பரப்ப, மற்ற மொழிகள் வளரவும் சக்தி பெறவும் நாம் உதவி செய்தவர்களாகிறோம். நான் பல மாகாணங்களிலிருந்து பெற்ற சொந்த அநுபவத்திலிருந்தே இதைச் சொல்லுகிறேன்.

எழுத்தைப்பற்றி ஒருவார்த்தை. நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்திலேயே, சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த மொழிகள் யாவற்றையும், தேவநாகரி லிபியைக்கொண்டே எழுதுவது நல்லது என்ற முடிவிற்கு வந்தேன். திராவிட பாஷைகளையுங்கூட, தேவநாகரி லிபியின்மூலமாகவே எளிதாய்க் கற்றுக்கொண்டு விடலாம் என்பது என் நம்பிக்கை. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், முதலியவற்றை அந்தந்த மொழிக்குரிய லிபியைக்கொண்டே நான் சில நாள் படித்துவந்தேன். லிபிகள் நான்கையும் தனித்தனியே கற்பது எனக்கு மிகவும் சிரமத்தைத் தந்தது. நான்கு மொழிகளுக்கும் லிபி ஒன்றாயிருந்திருக்குமானால், எவ்வளவோ குறுகிய காலத்திற்குள், அவற்றை நான் படித்திருக்க முடியும். இந்தப் பாஷைகளைப் படிக்க என்னைப் போல் ஆவலுள்ளவர்களுக்கு லிபியினால் ஏற்படுகிற கஷ்டம் கொஞ்ச நஞ்சம் அல்ல. தென் இந்தியாவில் இப்போது நான்கு பஷைகள் இருக்கின்றன. இவை நான்கிற்கும் தேவநாகரி லிபியைக் கையாண்டால், ஒரு பாஷை தெரிந்தவர்கள், மற்ற மூன்று பாஷைகளையும் அந்த லிபியைக் கொண்டே, மிக எளிதாகக் கற்றுக்கொண்டு விடலாம். ஹிந்தியைத் தேசிய பாஷையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற விஷயத்தையும், எல்லாப் பாஷைகளுக்கும் லிபி பொதுவாயிருக்கலாம் என்ற விஷயத்தையும் சேர்த்துக் குழப்ப வேண்டாம். இந்திய மொழிகள் யாவற்றையும் கற்க ஆசைப்படுகிறவர்களுக்கு, ஏற்படும் கஷ்டத்தை விளக்கிக் காட்டுவதற்காக இதை இங்கே குறிப்பிட்டேனேயன்றி வேறில்லை.

# தப்பெண்ணத்தால் வந்த சிக்கல்

''பொது ஜனங்களுக்குப் புரியாத பாஷைக்கு, ஆயுட்காலம் வெகு சொற்பம்.''

சமீபத்தில் நிறுவப்பெற்றுள்ள பாரதீய சாஹித்ய பரிஷத்தின் நடபடிக்கைகளைப்பற்றியும் அதில் கலந்துகொண்ட என்னையும், ஜவாஹர்லால் நேரு, பாபு ராஜேந்திர பிரசாத், பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் ஆகியோரைப்பற்றியும் பல உருதுப் பத்திரிகைகள் கடுமையாகத் தாக்கி, மனக்கசப்போடு எழுதியிருக்கின்றன. அந்தப் பகுதிகளைக் கத்தரித்து வைத்திருக்கிறேன். அங்கு நடந்த நடபடிக்கைகளில், ஏதோ உள்கருத்தும் சூழ்ச்சியும் இருக்கின்றன என்று சொல்லி, அந்தப் பத்திரிகைகள் எங்கள்மீது குற்றம் சாட்டுகின்றன. எந்தவிதமான உள்கருத்தும் சூழ்ச்சியும் எங்களிட மில்லை. பரிஷத்தில் நாங்கள் என்ன சொன்னோம், என்ன செய்தோம் என்பதைக்கூட அவை அறிந்துகொள்ள முயலவில்லை. பரிஷத்தை நிறுவியதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்றும், உருது மொழியைப் புறக்கணித்துவிட்டு, ஹிந்தியை முன்னுக்குக்கொண்டுவரும் நோக்கத்தோடு-தான் பரிஷத்தை நிறுவியுள்ளதாகவும் அவை நினைக்கின்றன. சம்ஸ்கிருதமயமாக்கிவிட்டால், ஹிந்தியை முஸல்மான்கள் புரிந்துகொள்ள முடியாது என்ற எண்ணத்துடனேயே நாங்கள் இந்தப் பரிஷத்தை நிறுவியிருப்பதாகவும் கருதுகின்றன. அலஹாபாத்தில், பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் ஹிந்தி இலக்கியக் கண்காட்சியைத் திறந்து வைத்து, ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அப்போது, இந்திய மக்களில் இருபத்து மூன்று கோடி மக்கள் ஹிந்தி பேசுகிறார்கள் என்றும், அல்லது இருபத்து மூன்று கோடி மக்களுக்கு ஹிந்தியைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உண்டென்றும் சொன்னார். இந்தப் பேச்சை மனதில் வைத்துக்கொண்டு, உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள் என்றும், உருது மொழியை நசுக்கப் பார்க்கிறார்கள் என்றும் அந்தப் பத்திரிகைகள் கருதுகின்றன. ஜாடையாகப் பல விஷயங்

களைப்பற்றியும் எழுதியிருக்கின்றன. அவற்றைக் கவனியாது, ஜாடையாக எழுதுவதற்குக் காரணமாக இருந்த தப்பெண்ணங்களுக்குப் பதில் சொல்லி, அவற்றைப் போக்க முயல்வதுதான், நான் இப்போது செய்ய வேண்டிய காரியமாகும்.

கடைசியாகச் சொல்லியுள்ள விஷயத்தை முதலில் கவனிப்போம். உருது பேசும் ஹிந்துக்களையும் முஸல்மான்களையும் கணக்கில் சேர்த்தே, இருபத்து மூன்று கோடி மக்கள் என்று, தாண்டன்ஜி கணக்கிட்டு இருக்கிறார். அவர் பேசிய பேச்சு முழுவதும் கைவசம் இருப்பின், உருதுப் பத்திரிகையில் எழுதியிருப்பவர்கள் அதைப் படித்துப் பார்க்கட்டும். பார்த்தால், ஹிந்தி என்று சொல்லும்போது, உருதுவையும் சேர்த்தே அவர் சொல்லி யிருக்கிறார் என்பது தெரியவரும். உருது லிபியில் எழுதினாலும் சரி, அல்லது தேவநாகரி லிபியில் எழுதினாலும் சரி, வடக்கே வாழும் ஹிந்துக்களும் முஸல்மான்களும் பேசுகிற பாஷையே ஹிந்தி என்ற சொல் குறிப்பிடும். 1935-ம் வருஷம் இந்தூரில் நடந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்; அதை நிறைவேற்றிவைப்பதில், தாண்டன்ஜியும் பங்கெடுத்துக்கொண்டார். இதை மனத்தில்கொண்டால், நிலைமை தெளிவுபட்டுவிடும். இப்படி வியாக்கியானம் செய்தது உருது எழுத்தாளர்களுக்குத் தெரிந்திருப்பின், ஹிந்தி என்ற பெயர் கூடவே கூடாது என்று மறுத்தாலன்றி, வேறு வகையில் அவர்களால் குற்றம் சொல்ல முடியாது. ஹிந்தி என்ற சொல்லை வேண்டா மென்பார்களாயின், அது மிகவும் பரிதபிக்கத்தக்கதாகும். வடக்கே வழங்கிய மொழிக்கு ஆரம்பத்தில் இருந்த அசலான பெயர் ஹிந்தி யாகும். சிறப்பான ஒரு காரணத்தை யொட்டி, உருது என்ற பெயரினாலும் அந்த மொழியை அழைத்தார்கள். இதை எல்லோருமே நன்கு அறிவர். முஸ்லிம் அரசர்களோடு தொடர்புகொள்வதற்கு வசதியாக, உருது லிபியை உபயோகப்படுத்திவந்தார்கள். சரித்திரம் கூறும் உண்மை இதுவாயின், ஹிந்தி என்ற சொல்லுக்கு உருது என்றும் பொருள்கொண்டுவிட்டால்,

அப்போது மறுப்புக்கு இடமில்லை. பொருள் வேற்றுமை சிறிது இருப்பின், காலக்கிரமத்தில் அதுவும் தானே மறைந்துவிடும். எந்த வார்த்தையை உபயோகப்படுத்தினாலும், காலம் செல்லச் செல்ல, ஒரே பொருளைக் குறிப்பிடக் கூடிய நிலை, அந்தச் சொல்லுக்கு ஏற்பட்டு விடும்.

அனாவசியமாகச் சம்ஸ்கிருதச் சொற்களை வலிந்து புகுத்துவதை, ஹிந்தி எழுத்தாளர்களில் சிலர் விரும்புகிறார்கள் என்று குற்றம் கூறுவதில், சிறிது நியாயம் இருப்பதாகச் சொல்லலாம். இதே குற்றச்சாட்டை, நாம் உருது எழுத்தாளர்கள் மீதும் சுமத்த முடியும். உருது எழுதும் போது, அனாவசியமாகப் பாரசீக, அராபியச் சொற்களை அவர்கள் வலிந்து புகுத்துகிறார்கள். இதைவிட மோசம் என்னவென்றால், பாஷையின் இலக்கணத்தையே அவர்கள் மாற்றி விடுகிறார்கள். தீவிரமான இந்தப் போக்குகள் காலக்கிரமத்தில் தாமே மறைந்துவிடும். ஏனெனில், பொது ஜனங்கள் இவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பொது ஜனங்களுக்குப் புரியாத பாஷைக்கு, ஆயுட்காலம் வெகு சொற்பம்.

பாரதீய சாஹித்ய பரிஷத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய நோக்கம் இதுவாகும்: மேலே தந்துள்ள வியாக்கியானப்படி, ஹிந்தி மொழியில், பிற மாகாணங்களிலிருக்கும் சிறந்த இலக்கியங்களை யெல்லாம் ஒன்றுதிரட்டி, அகில இந்தியாவிற்கும் வழங்க அந்த ஸ்தாபனம் முன் வந்துள்ளது. சில உருதுப் பத்திரிகைகள் கருதுகிறபடி, கள்ளங் கபடமோ, வகுப்புணர்ச்சிபற்றிய விஷயங்களோ இதில் எதுவும் இல்லை.

நான் சொன்னதைக் கேட்டே, 'ஹிந்தி-ஹிந்துஸ்தானி' என்ற பெயரை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஹிந்தி என்ற சொல்லுக்குச் செய்யும் வியாக்கியானத்தின் உட்பொருளை அறிந்துகொள்ளும் பொருட்டே, இந்த இரண்டு சொற்களையும் பிணைத்து உபயோகித்தோம். ஹிந்தி-ஹிந்துஸ்தானி என்பதற்குப் பதிலாக, ஹிந்துஸ்தானி என்றாவது, அல்லது, ஹிந்தி - உருது என்றாவது இருக்கலாம்

என்று, மௌல்வி அப்துல் காதர் சாஹெப் தெரிவித்தார். என்னைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு பெயர்களில் எதை வைத்துக்கொண்டாலும் ஆட்சேபம் இல்லை. ஆனால், பாரதீய சாஹித்ய பரிஷத், தமது தோற்றத்திற்கே அடிப் படையாக நிலவும் காரணத்தை விட்டுக்கொடுக்கச் சம்மதி யாது. இந்தமாதிரி ஒரு சாஹித்ய பரிஷத்தைத் தோற்று விக்கவேண்டு மென்ற எண்ணம் இந்தூரில் நடைபெற்ற ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தில் உதித்தது. அந்த எண்ணம் திட்டமான முறையில் உருவடைந்தது நாகபுரி மகாநாட்டில் ஆகும். இவற்றை யெல்லாம் ஆலோசனை செய்யும்போது, 'ஹிந்தி' என்ற சொல்லை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது. ஏற்கனவே சொல்லிய காரணங்களைக்கொண்டு பார்த்தால், உருது என்ற பதத்தை உபயோகிப்பது சரியன்று. ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது என்ற மூன்று சொற்களும் ஒரே மொழியைக் குறிப்பிடுகின்ற சொற்களே யாகும் என்று காட்ட, நான் பெரிதும் முயன்றிருக்கிறேன்.

# இன்னும் சில சிக்கல்கள்

''ஒரு மாகாணத்திலுள்ள மக்கள் மற்றொரு மாகாண மொழியைக் கற்றுக்கொள்வதற்கு, வெவ்வேறு விதமான லிபிகள், அனாவசியமான பெருந்தடைகளாகவே நிற்கின்றன. ஐரோப்பிய மக்கள் அனைவரும் ஒரே தேசியஇனத்தை சேர்ந்தவர்க ளன்று. அப்படியிருந்தும், அங்கே பொதுப்படையாக ஒரே லிபியைத்தான் கையாளுகிறார்கள். இந்தியா, தன்னை ஒரே தேசியஇனத்தைச் சேர்ந்த நாடு என்று உரிமை பாராட்டிக்கொள்கிறது; உண்மையும் அதுதான். அப்படியிருக்கும்போது, நாம் ஏன் ஒரு பொது லிபியை மேற்கொள்ளக் கூடாது?''

உண்மையை நாடுவதில் ஈடுபட்டுள்ள ஒருவர், பிறரை மகிழ்விக்கும் நோக்கோடு எழுதவும் மாட்டார்; பேசவும் மாட்டார். நீண்ட காலமாக, நான் உண்மையை நாடுவதில் ஈடுபட்டு வந்திருக்கிறேன்; வாழ்க்கைப் போக்கில் குறுக்கிட்ட பல விஷயங்களைப்பற்றி, அவற்றின் உண்மையான தன்மைகளைப்பற்றி, நான் ஆராய முயன்றிருக்கிறேன். அவற்றில் ஹிந்தி மொழிப் பிரசினையும் ஒன்று. ஹிந்தி சம்பந்தமாக நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களே சரியானவை என்று எடுத்துக்காட்டி, எல்லோரையும் என்னால் திருப்திபடுத்த முடியவில்லை; இதை நான் அறிவேன். ஹிந்தியைப் பொது மொழியாக்க வேண்டுமென்ற பிரசாரத்தினால், அனேக முஸ்லிம் நண்பர்களின் மனத்தாங்கல்களுக்கு நான் ஆளாகி இருக்கிறேன். ஹிந்து நண்பர்கள் என்னிடம் காட்டும் அதிருப்தியும் அதற்குக் குறைவானதன்று. குறைகூறுகிறவர்கள் எனக்குத் திருப்தி ஏற்படும் வகையில், தகுந்த காரணங்களை எடுத்துக்காட்டி, எனது தவறை நிரூபிக்காத வரையில், நான் எனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. அவர்களின் விருப்பத்திற்காக, நான் எனது எண்ணத்தை மாற்றிக்கொள்வது சரியன்று. தங்கள் தங்கள் விருப்பங்களைத் தெரிவித்துப் பலர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். தர்க்க ரீதியாகவும் சரித்திர பூர்வமாகவும் பார்த்தால், நான் சொல்வதுதான் சரி என்றும், ஆனால், முஸ்லிம் விமர்சகர்களைத் திருப்தி செய்யும் பொருட்டாகவாவது, அவர்கள் விருப்பம்போல் 'ஹிந்தி - உருது' அல்லது 'உருது' என்ற பெயரினால்

பொது மொழியை அழைப்பதற்கு நான் இணங்க வேண்டும் என்றும், ஒருநிருபர் எழுதி இருக்கிறார். இதுவரை குறிப்பிட்டு வந்திருக்கிற, வருகிற பெயரைப் பொறுத்த அளவிலே தான் தகராறேயன்றி, மொழியைப் பொறுத்த அளவில் தகராறு எதுவும் இல்லை என்று குறிப்பிடுகிறார். சமீபத்தில், பெங்களூரில் நடந்த ஹிந்திப் பிரசார பட்டமளிப்பு விழாவில், நான் நிகழ்த்திய பேச்சை அடிப்படையாகக் கொண்டு, வேறு ஒரு துறையில் நின்று, ஒருவர் என்னோடு சண்டையிட்டுக் கடிதம் எழுதி இருக்கிறார். அது மிகவும் நீளமான கடிதம். அதிலிருந்து முக்கியமான பகுதிகளைக் கீழே தருகிறேன்:

" இந்தியாவில் ஏனைய பகுதிகளில் வசிக்கும் மக்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் பொருட்டு, கன்னட தேசத்தில் வாழும் 110 லக்ஷம் மக்களை - ஆடவரையும் பெண்டிரையும் - ஹிந்தி கற்றுக் கொள்ளும்படியாக, பெங்களூரில் நிகழ்த்திய பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தில், தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கனவே, தாய் மொழி படித்திருப்பவர்களுக்கு மட்டும் தாங்கள் இந்த வேண்டுகோளை விடுக்கவில்லை. எல்லோருமே தாய் மொழியைக் கற்றிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படி இருந்தபோதிலும், எல்லோருமே ஹிந்தி படிப்பது சாத்தியமன்று. ஒருகால் சாத்தியமாயினும், எல்லோரும் படிக்க வேண்டுமென்பதும் சரியன்று. தாய் மொழியைத் தவிர, வேறு மொழியைப் படிக்க வேண்டுமென்று பொது ஜனங்களிடம் சொல்வது, இயற்கைக்கு மாறுபட்ட போக்காகும். அகில இந்திய தேசியத் தொண்டரோ, வியாபாரியோ, அல்லது மற்றவர்களோ, -வடக்கே வாழும் மக்களோடு நாள்தோறும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியவர்கள் - ஹிந்தி கற்றுக்கொள்ள வேண்டியது அவசியந்தான். அப்படிப்பட்டவர்கள், அவசியத்தை உணர்ந்து, ஹிந்தி கற்றுக்கொள்ளவே செய்வார்கள். யாதொருவிதமான பிரசாரத்திற்கும் இடமின்றியே, தேவை என்பது அவர்களை ஹிந்தி படிக்கும்படி செய்துவிடும்.

" ஹிந்தி மொழி, மாகாண மொழிகளைப் புறக்கணித்து ஒதுக்கிவிடாதென்றும், அவற்றிற்கு உதவிபுரிந்து அவற்றை வளரச் செய்யும் என்றும் தாங்கள் சொல்கிறீர்கள். ஆனால், விளைந்துள்ள பலனோ அப்படி இல்லை. தமிழ் நாட்டில் உள்ள அறிவாளிகளில் பெரும்பாலோர், இன்று தமிழ் மொழிமூலம் சிந்திப்பதில்லை; உணர்வதில்லை. அவர்களுடைய சிந்தனை யெல்லாம் ஆங்கில மொழிமூலமே நடைபெறுகிறது. அலட்சியம் செய்து, தமிழை முற்றுமே புறக்கணித்து விட்டார்கள். தமிழில் தங்களுக்கு நல்லமுறையில் எழுதவும் பேசவும் வராதென்றும், ஆனால், ஆங்கில மொழிமூலம் திறமையாக எழுதவும் பேசவும் முடியுமென்றும், பொதுக்கூட்டங்களிலும் வேறு பல இடங்களிலும் பெருமை

பாராட்டிக்கொள்கிறார்கள். பண்பாட்டு நிலையில் எவ்வளவுதூரம் கீழே இழிந்து, கேவலமான அடிமைப் படுகுழியில் அவர்கள் வீழ்ந்துவிட்டார்கள் என்பதைத் தாங்கள் இதிலிருந்து நன்கு தெரிந்துகொள்ளலாம். தமிழின் துணைகொண்டு கற்காமல், ஆங்கில மொழியின் துணைகொண்டு இப்போது இவர்கள் ஹிந்தி கற்று வருகிறார்கள். அதே பழைய கதைதான் இதனால் ஏற்படும் விளைவும். ஆங்கில மொழிமூலம் சிந்தனை செய்வதை விட்டுவிட்டு, இனிமேல் அவர்கள் ஹிந்தி மொழிமூலம் சிந்தனை செய்வார்கள். குஜராத்தியில் எழுதுவதைவிட, ஹிந்தி மொழியில் மிகவும் அழகாகநான் கட்டுரை எழுதுவேன் என்று, ஒரு குஜராத்திக்காரர் தங்களிடம் சொன்னால், அதைக் கேட்டுத் தாங்கள் வருத்தம் அடைவதோடு, நம் நாடு பரிபூர்ண சுயராஜ்யத்தை அடையத் தகுதியற்ற நிலையில் இருக்கிறதே என்ற ஏக்கமும் தங்களுக்கு ஏற்படும். ஆனால், தமிழ் நாட்டின் நிலைமை அப்படியில்லை. இங்குள்ளவர்களோ, தமிழைவிடத் தங்களுக்கு ஹிந்தி நன்கு தெரியும் என்று சொல்ல, இப்பொழுதே தலைப்பட்டுவிட்டார்கள்.

"கடவுளுடைய மொழியாய் இருப்பினும் சரியே, அது தனது தாய் மொழிக்கு ஊறு விளைவிப்பதாய் இருப்பின், அதை ஒருவருமே படிக்கக் கூடாது. ஹிந்தி மொழிமீது வெறிபிடித்து அலைபவர்களிடம், நான் தங்களை உதாரணமாக எடுத்துக்காட்டுவது வழக்கம். இந்தியாவின் பொது மொழி ஹிந்திதான் என்று தாங்கள் கூறியபோதிலும், தங்களுடைய சுய சரிதத்தையோ, அல்லது தென் ஆப்பிரிக்கச் சத்தியாக்கிரகத்தையோ, தாங்கள் ஹிந்தியில் எழுதவில்லை. குஜராத்தி மொழியிலேதான் எழுதி இருக்கிறீர்கள். ஹிந்தியிலேயே தாங்கள் எழுதி இருந்தால் அதிகப்படியான மக்கள் ஹிந்திமூலமாகவே அவற்றைப் படித்து அனுபவிக்க முடியும். ஆனால், தாங்களோ குஜராத்தியில் எழுதுவதையே அதிகமாக விரும்பி, குஜராத்தியில் அவற்றை எழுதி இருக்கிறீர்கள். தங்களின் நடைமுறைப்போக்கும் போதனையும் இந்த விஷயத்தில் முரண்பட்டு நிற்கின்றன. இவற்றில், தங்களின் நடைமுறைப்போக்கே சரியானது, நேர்மையானது என்பது என் கருத்து. எனவே, தாங்கள் சொல்வதைப் பின்பற்றாமல், தாங்கள் செய்வதை மக்கள் பின்பற்ற வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

"ஒரு பாஷை பேசுகிறவர்கள்மீது இன்னொரு பாஷையைத் திணிப்பது சுயராஜ்யமல்ல. தாய்மொழிக்கே முதன்மையான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்தியாவின் பொது மொழியான ஹிந்திக்கு இரண்டாவது முக்கியத்துவம்தான் கொடுக்க வேண்டும். உண்மையான உள்ளுணர்ச்சியும் மேம்பட்ட பண்புகளும் தாய் மொழிமூலமாகவே தோன்ற முடியும்.

"இனி, லிபி சம்பந்தமான பிரசினைக்கு வருகிறேன். இந்தூரில் நடந்த ஹிந்தி சாஹித்ய சம்மேளனம், பல தீர்மானங்களைச் செய்திருக்கிறது. அவற்றைப்பற்றி, 1935-ம் வருஷம் மே மாதம் 4உ வெளியான ஹரிஜன் பத்திரிகையில் தாங்கள் எழுதி இருக்கிறீர்கள். உருது லிபி சம்பந்தப்பட்டவரையில், தாங்கள் ஒருதலைச்சார்பாகவே நடந்துகொண்டு வருவதாகச் சொல்லலாம். ஏன், தாங்கள் இப்படி நடந்துகொள்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. பெங்களூரில் நடந்த பட்டமளிப்பு விழாப்

பேச்சிலும் உருது லிபியைப்பற்றித் தாங்கள் ஒருதலைச்சார்பாகவே பேசியிருக்கிறீர்கள். சம்ஸ்கிருதமொழியினால் வளம்பெற்ற, அல்லது சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய மொழிகளுக்கு உரித்தான லிபிகளையெல்லாம் அழித்துவிட வேண்டும் என்றும், அவற்றுக்குப் பதிலாக, பல மொழிகளைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு, தேவநாகரி லிபியை உபயோகிக்க வேண்டுமென்றும் கூறுகிறீர்கள். ஆனால், ஒரு மொழிக்கு-அதாவது 'ஹிந்திக்கு' இரண்டு லிபிகளை, அதாவது உருது, தேவநாகரி ஆகிய லிபிகளை, - ஒன்று ஹிந்துக்களுக்கும், மற்றொன்று முஸ்லிம்களுக்குமாக வைத்துக்கொள்ள இசைகிறீர்கள். வேறு பாஷைகளைப் பேசுகிற அதிர்ஷ்டஹீனமான மக்களும் கோடிக்கணக்காக இந்த நாட்டில் இருக்கிறார்கள். அவர்களின் சொந்த லிபிகளை அழித்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக தேவநாகரி லிபியை உபயோகிக்க வேண்டுமென்பது தங்கள் விருப்பம். ஏழு கோடி முஸல்மான்களுடனும், பதின்மூன்று கோடி ஹிந்துக்களுடனும் தொடர்பு வைத்துக்கொள்வதற்காக 'ஹிந்தி – ஹிந்துஸ்தானியை' தேவநாகரி, உருது ஆகிய இரண்டு லிபிகளோடு கற்றுக்கொள்ள வேண்டுமெனச் சொல்லுகிறீர்கள். இது நகைப்பிற்கிடமாயிருப்பதுடன், கொடுமைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகவுமில்லையா? தர்க்க ரீதியாகப் பார்க்கப்போனால், இறுதியில் ஹிந்தி மொழி ஒன்று மட்டுமே, அதனுடைய இரண்டு லிபிகளுடன் நிலைத்து நிற்குமே ஒழிய, பிற மொழிகள் அனைத்தும் அழிந்து போவதே நிச்சயம். ஏனெனில், சகல பாஷைகளுக்குமே தேவநாகரி லிபியே கையாளப்படும். அனைவரும் ஹிந்தி கற்றுக்கொண்டுவிடுவார்கள். தாய் மொழியிலுள்ள முக்கியமான இலக்கியங்கள் யாவும் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுவிடும். எனவே, மற்ற மொழிகள் வளர இடம் இல்லாமல், அவை யாவும் நசித்தொழிவது நிச்சயம். நம் எல்லோருக்கும் பொதுவானதும், பிறப்பிடமானதுமான இந்தியாவுக்கு - அதனுடைய நலனுக்கு - இந்தவிதமான போக்கு நல்லதா என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன். ஒரே பாஷைக்கு தேவநாகரி லிபியையும், உருது லிபியையும் தாங்கள் கையாளலாம் என்று சொல்கிறீர்கள். மற்ற பாஷைகளின் லிபிகளை ஒழித்துவிடுவதற்கு முனைந்து நிற்கும் தாங்கள், ஒரே பாஷைக்கு இரண்டு லிபிகளை மேற்கொள்ளாமல் ஒன்றை நீக்கிவிடுவதற்கு ஏன் முயற்சி செய்யவில்லை? ஒரே பாஷையைப் பேசிவருகிறவர்களான ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வெவ்வேறு விதமான லிபி இருக்க வேண்டிய அவசியம் என்ன?"

கன்னட தேசத்திலுள்ள 110 லட்சம் மக்கள், ஆடவர் பெண்டிர் அனைவருமே, 'ஹிந்தி - ஹிந்துஸ்தானி' கற்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வடநாட்டு மக்களோடு தொடர்புகொண்டுள்ளவர்கள் ஹிந்தி கற்றுக்கொண்டுவிட்டால் எனக்குத் திருப்திதான். ஆனால், ஹிந்தி

பேசாத மாகாணங்களில் வசிப்பவர்கள், ஹிந்தி கற்றுக் கொள்வதை நான் வரவேற்கிறேன். பிற மாகாணங்களில் வசிப்பவர்கள் அனைவருமே ஹிந்தி படிக்க வேண்டுமென்பதை நான் கண்டிக்க வேண்டுமென்று இந்த நிருபர் விரும்புகிருர். அதற்கு மாருக, பிற மாகாணங்களில் வசிப்பவர்கள் அனைவருமேஹிந்தி கற்பதை நான் வரவேற்கிறேன். தங்கள் தங்கள் மாகாண பாஷையோடு, ஒரு அகில இந்திய மொழியையும் கற்றுக்கொள்வது விரும்பத்தகுந்த, நல்ல, இயல்பான காரிய மில்லையா? படித்த ஒரு சிலருக்கு மட்டுந்தானு இந்த உரிமை இருக்க வேண்டும்? பொது ஜனங்களுக்கும் அகில இந்திய பாஷையைக் கற்றுக் கொள்ள உரிமை வேண்டாமா? இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களுக்கும் இரண்டு மொழிகள் எழுதப் படிக்கத் தெரியு மென்ருல், இது நிச்சயமாகச் சமூகம் மிகவும் உயர்ந்த பண்பாட்டை அடைந்துள்ளது என்பதைக் காட்டும் ஒரு நல்ல அறிகுறி யாகும். இப்படி ஒரு காரியம் நிகழுவது சாத்திய மில்லை என்பது துரதிர்ஷ்டவசமாக முற்றும் உண்மையாகவே இருக்கிறது.

வேருெரு மொழியைக் கற்க ஆசைப்பட்டு, தாய் மொழியை அலட்சியம் செய்வது எந்த மாகாணத்திற்கும் நன்மை யன்று. அப்படிச் சென்றுகொண் டிருக்கிற மாகாணத்தை மிகவும் துரதிர்ஷ்டம் பிடித்த மாகாணம் என்றே சொல்ல வேண்டும். தமிழ் நாடு மேற்சொன்ன போக்கிலே தான் இன்று சென்றுகொண் டிருக்கிறதாக இந்த நிருபர் குறைகூறுகிருர். அடிக்கடி நான் தமிழ் நாட்டில் செய்த சுற்றுப்பிரயாணம், நிருபரின் குற்றச்சாட்டு உண்மைதான் என்பதை உறுதிப்படுத்துவதாகவேயிருக்கிறது. ஆனல், வர வர இந்த நிலை மாறி, அந்த மாகாணம் திருந்த ஆரம்பித்திருக்கிறது என்பதையும் பின்னர் கண்டேன். ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள படிப்பாளிகள், தங்கள் தங்கள் மாகாண பொதுஜனங்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதன்படி தொடர்புகொள்ளக் கொள்ள, மாகாண மொழிகள் யாதொரு முயற்சியு

யின்றி வளரத் தொடங்கிவிடும். பொதுஜனங்களும் பிற மொழிகளைவிடத், தாய் மொழியையே அதிகமாக விரும்புவார்கள்.

ஆங்கிலம், ஹிந்தி - ஹிந்துஸ்தானி ஆகிய இரு மொழிகளுக் கிடையிலும், எது பொது மொழி என்பதில், சாஸ்வதமான போட்டி இருக்கு மென்று இந்த நிருபர் குறிப்பாகச் சொல்லுகிறார். வடக்கேயுள்ள கோடிக்கணக்கான ஹிந்துக்களும் முஸல்மான்களும் ஹிந்தி, அதாவது ஹிந்துஸ்தானி தான் பேசுகிறார்கள். எனவே, இந்த மொழிதான் அகில இந்தியப் பொதுமொழியாக இருக்க முடியுமே யன்றி, ஆங்கிலம் பொது மொழியாக இருக்க முடியா தென்றும், இருக்கக் கூடா தென்றும், பொதுவாழ்வில் ஈடுபட்ட நாள்முதலே எனக்கு ஒரு திட்டமான அபிப்பிராயம் உண்டு. இதை நான் வெளிப்படையாகவும் சொல்லியிருக்கிறேன். ஆங்கிலத்தைப் பொது மொழியாக்க முயல்வது, ஆங்கிலம் படித்த வர்க்கத்தாருக்கும், பொது ஜனங்களுக்கு மிடையில் நிரந்தரமான ஒரு பிளவை உண்டாக்கிவிடும். அதனால், தேசம் தனது லட்சியத்தை நோக்கி முன்னேறுவது தடைப்பட நேரும். ஆங்கில மொழிக்கு, ஒரு திட்டமான இடம் நமது பண்பாட்டில் இருக்கவே செய்யும் என்பதை, நான் அடிக்கடி விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். மேலை நாட்டினரையும், நம்மை ஆள்வோரையும் நன்கு தெரிந்து கொள்வதற்காகவும், மேலை நாட்டுக் கலைச் செல்வங்களை நாம் துய்ப்பதற்காகவும், மேலை நாடுகளிலே பெரும்பாலோருக்குத் தெரிந்த ஆங்கில மொழி, நம்மில் சிலருக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமே. ஆனால், பாமர மக்களுக்கும் படித்த வகுப்பாருக்கும் இடையில் ஐக்கிய பாவம் வளர்வதற்கு, இந்தியர்கள் ஹிந்தி - ஹிந்துஸ்தானியைத் தெரிந்துகொள்ள வேண்டுவது, ஆங்கிலம் கற்பதை விட ஆயிரம் மடங்கு அதிக அவசிய மாகும்.

மாகாண மொழிகளுக்குக் காட்டும் சலுகையை விட, ஹிந்தி மொழிக்கே நான் அதிக சலுகை காட்டுவதாகவும் அதையே ஆதரிக்க வேண்டு மென்று சொல்லுவதாகவும்,

எண்ணிக்கொண்டு, இந்த நிருபர் என்மீது குறைகூறு கிறார்; அது தவறு. என்னுடைய அபிப்பிராயத்தை அவர் இன்னும் நன்கு அறிந்துகொள்ள வில்லை என்பதைத்தான் இது புலப்படுத்துகிறது. பொது மொழி சம்பந்தப்பட்டவரை யில், எனது கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில், அதிக வேற்றுமை இருப்பதாக இந்த நிருபர் சொல்லுகிறார். அந்தவிதமான வேற்றுமை எதுவும் என்னிடம் இல்லை. முதலாவது முக்கியத்துவம் தாய்மொழிகளுக்கே கொடுக்க வேண்டுமென்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

லிபி சம்பந்தப்பட்ட வரையில், நிருபர் கொண்டுள்ள பயம் நியாயமானதே. இருப்பினும், லிபி சம்பந்தமாக நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களுக்காக நான் வருந்தப்போவ தில்லை. சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய, அல்லது அதோடு நெருங்கிய தொடர்புள்ள மொழிக்களுக் கெல்லாம் ஒரு லிபி தான் இருக்க வேண்டும்; அந்த லிபியும் தேவநாகரி லிபியா கத்தான் இருக்க முடியும் என்பது நிச்சயம். ஒரு மாகாணத் திலிலுள்ள மக்கள் மற்றொரு மாகாண மொழியைக் கற்றுக் கொள்வதற்கு, வெவ்வேறு விதமான லிபிகள், அனாவசிய மான பெருந்தடைகளாகவே நிற்கின்றன. ஐரோப்பிய மக் கள் அனைவரும் ஒரே தேசியஇனத்தைச் சேர்ந்தவர்க ளன்று; அப்படியிருந்தும், அங்கே பொதுப் படையாக ஒரே லிபியைத்தான் கையாளுகிறார்கள். இந்தியா, தன்னை ஒரே தேசியஇனத்தைச் சேர்ந்த நாடு என்று உரிமை பாராட்டிக் கொள்கிறது; உண்மையும் அதுதான். அப்படியிருக்கும் போது நாம் ஏன் ஒரு பொது லிபியை மேற்கொள்ளக் கூடாது? ஒரே மொழிக்கு, தேவநாகரி லிபியையும் உருது லிபியையும் கையாளலா மென்று சொல்வதும், அதை சகித்துக்கொண் டிருப்பதும் பொருத்தமற்ற காரியந்தான். இதை நான் அறிவேன். பொருத்தமில்லையானாலும், முட் டாள்த்தனமாக நான் இதைச் சொல்லவில்லை. இப்போது, ஹிந்து-முஸ்லிம்களுக் கிடையில் அதிகப்படியான பிணக்கு இருக்கிறது. எனவே, படித்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் கூடுமானவரை மரியாதையாக நடந்துகொள்வ

தும், பொறுமையோடு குற்றங்களைச் சகித்துக்கொள்வதும் அவசியமாகும்; புத்திசாலித்தனமுமாகும். இதனுலேதான் தேவநாகரி லிபி, உருது லிபி ஆகிய இரண்டில், ஏதாவது ஒன்றைக் கையாளலாமென்று சொல்லுகிறோம். அதிர்ஷ்ட வசமாக, மாகாணங்களுக்கிடையில் எந்தவிதமான பிணக்குகளும் இல்லை. எனவேதான், லிபி சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்பதையும் ஆதரித்துப் பேசுகிறோம். இந்தச் சீர்திருத்தத்தால் மாகாணங்களுக்கிடையில் பல வழிகளில் நெருங்கிய தொடர்பு ஏற்படும். பெரும்பாலான மக்கள் கல்வி வாசனையற்றவர்களாகவே இன்னும் இருக்கிறார்கள். இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சிந்தனை செய்யச் சோம்பிக்கொண்டும், தவருன உணர்ச்சிகளை மனதில் கொண்டும், பல்வேறு லிபிகளைப் பொதுமக்கள்மீது சுமத்துவது, தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்.

# பொது லிபியின் அவசியம்

"தாய் நாட்டின் சேவைக்காக, என் வாழ்க்கை முழுவதையும் நான் அர்ப்பணம் செய்திருக்கிறேன். இந்தச் சேவை இல்லாவிட்டால், வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத ஒரு பெரும் தொல்லையாகி விடும். நமது மக்களுக்கு அநாவசியமான சுமையாக இருந்துவரும் தொந்திரவுகளை யெல்லாம் நீக்கிவிட நாம் முயல வேண்டு மென்பதே, இந்த சேவையிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடமாகும். பலபல விதமான லிபிகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று இருப்பது, தேவையற்ற ஒரு சுமையாகும். இந்தச் சுமையை நீக்கிவிடுவது மிகவும் எளிது."

சென்னையில் நடைபெற்ற பாரதீய சாஹித்ய பரிஷத்தில், தலைமை வகித்துப் பேசியபோது, காந்திஜி சொன்னதாவது :

மகாமகோபாத்தியாயர் டாக்டர் சுவாமிநாத அய்யர் அவர்களுடைய பேச்சு, தமிழ்ப் படிக்க எனக்குள்ள ஆவலை அதிகப்படுத்தி இருக்கிறது. வயதோ, அல்லது ஆசையோ எனக்குத் தடைகளாக இல்லை; போதிய அவகாசமின்மைதான் சங்கடம் தருவதாய் இருக்கிறது. அந்தந்த மாகாண இலக்கியங்களில் உள்ள சிறந்த இலக்கியச் செல்வங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, அவற்றை ஹிந்தியில் வெளியிடுவதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்வதே இந்த மகாநாட்டின் நோக்கமாகும். அதற்காக, உங்களை நான் ஒன்று வேண்டிக்கொள்கிறேன். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தாய் மொழியை நன்கு பயில வேண்டும்; மற்ற இந்திய மொழிகளில் காணப்படும் சிறந்த இலக்கியச் செல்வங்களை ஹிந்திமூலமாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த மகாநாட்டின் நோக்கம் அது மட்டுமல்ல; அதோடுகூட வேறொரு காரணமும் உண்டு. ஒரு மாகாணத்தவர் மற்ற மாகாண மொழிகளைக் கற்கும்படி தூண்டுவதும் இந்த மகாநாட்டின் நோக்கமாகும். அதாவது, குஜராத்திகளுக்குத் தமிழ் தெரிய வேண்டும்; வங்காளிகளுக்குக் குஜராத்தி தெரிய வேண்டும். இப்படியே மற்றவரும் பிற மொழிகளைக் கற்க வேண்டும். இந்திய பாஷைகளைக் கற்றுக்கொள்வது சிரமமான காரிய

மன்று என நான் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். இந்த லட்சியம் கைகூடி வர, ஒரு பொதுவான லிபி மிகவும் அவசிய மாகும். தமிழ் நாட்டில், பொது லிபியைப் பரப்புவது கஷ்டமான காரிய மன்று. இந்த எளிய உண்மையைச் சிறிது கூர்ந்து கவனியுங்கள். நமது ஜனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்டவர்கள் கல்விவாசனை யற்றவர் களாய் இருக்கிறார்கள். எந்த லிபியையுமே அவர்கள் அறி யார். எனவே, பொது லிபியைக்கொண்டே அவர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினல் என்ன? ஐரோப்பாவில், பொது லிபியைக் கையாண்டுபார்த்து, அதில் சிறந்த முறை யில் வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். அங்கே கையாளப் படும் ரோமன் லிபியை நாமும் கையாள வேண்டும் என்று சொல்கிற அளவுக்குச் சிலர் வந்து விட்டார்கள். இது சம் பந்தமாக விவாதம் பலமாக நடைபெற்றது. கடைசியாக, தேவநாகரி லிபியைத் தவிர வேறு எதுவுமே பொது லிபி யாக வர முடியா தென்ற பொதுப் படையான முடிவிற்கு வந்திருக்கிறார்கள். உருது லிபியால் போட்டியிட முடியு மென்று சொல்லலாம். தேவநாகரிக்கு இருப்பதைப்போல, பூரணத்துவமும், உச்சரிப்பு ஆக்கமும் உருது லிபி ரோமன் லிபி ஆகிய இரண்டினிடமும் இல்லை என்றே நான் அபிப் பிராயப்படுகிறேன். உங்கள் மொழிகளுக்கு விரோதி என்று தயவு செய்து என்னை எண்ணிவிடாதீர்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் அழிந்து போகா; நிச்சயமாக அவை இருந்தே தீரும். தென் இந்தியாவில் வாழும் கல்விவாசனை யற்ற மக்களுக்கு, அவரவர் தாய் மொழிகளைத் தேவநாகரி லிபியின் மூலம் சொல்லிக்கொடுத்தால் என்ன? தேசிய ஐக்கியம் ஏற்பட வேணு மென்று நாம் ஆவலோடு துடித்துக் கொண் டிருக் கிறோம். அதற்கு, தேவநாகரி லிபியைப் பொது லிபியாகக் கொள்வது, உற்ற துணையாக இருந்து உதவும். மாகாணப் பற்றையும் குறுகிய மனப்பாங்கையும் போக்கிவிடுவதற்கு, இதுவே சிறந்த சாதனமு மாகும்; இது கஷ்டமான காரிய மன்று. உருது லிபியையோ, அல்லது தமிழ் லிபி

யையோ நான் வேண்டாமென்று சொல்லவில்லை. இந்த இரண்டு லிபிகளையும் நான் கற்றிருக்கிறேன். தாய் நாட்டின் சேவைக்காக, என் வாழ்க்கை முழுவதையும் நான் அர்ப்பணம் செய்திருக்கிறேன். இந்தச் சேவை இல்லாவிட்டால், வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத ஒரு பெரும் தொல்லையாகி விடும். நமது மக்களுக்கு அனாவசியமான சுமையாக இருந்துவரும் தொந்திரவுகளை யெல்லாம் நீக்கிவிட நாம் முயல வேண்டுமென்பதே, இந்தச் சேவையிலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடமாகும். பலபல விதமான லிபிகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று இருப்பது, தேவையற்ற ஒரு சுமையாகும். இந்தச் சுமையை நீக்கிவிடுவது மிகவும் எளிது. எனவே, அந்தந்த மாகாணங்களில் வசிக்கும் கல்வி கற்ற பெரியார்களை நான் ஒன்று வேண்டிக்கொள்கிறேன். லிபி சம்பந்தமாகக் கொண்டுள்ள வேற்றுமைகளை எல்லாம் மறந்து விடுவதுடன், முக்கியமான இந்த விஷயத்தில், மனமொத்த ஒரு முடிவிற்கு அவர்கள் வந்து விடவேண்டும். அப்புறம், அதன் பிறகேதான், பாரதீய சாஹித்ய பரிஷத் வெற்றிகரமான ஒரு ஸ்தாபனமாக விளங்க முடியும்.

# புதியதொரு சகாப்தத்தைத் தோற்றுவிக்கவல்ல தீர்மானம்

*"மாகாண ஸ்தாபனங்கள் தங்கள் தங்கள் மாகாண மொழியிலும், அகில இந்திய காங்கிரஸ் ஹிந்தி மொழியிலும் விவகாரங்களை நடத்த முற்பட்டு விடவேண்டும். அப்படியில்லா விட்டால் பொது ஜனங்களுடன் உண்மையான தொடர்பு ஏற்பட முடியாது; ஏற்படுத்திக்கொண்டாலும், அந்தத் தொடர்பு ஸ்திரமானதாயிராது."*

*சென்னையில் நடைபெற்ற பாரதீய சாஹித்ய பரிஷத்தில், ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தார் நிறைவேற்றி யிருக்கும் ஒரு தீர்மானத்தைப் பற்றி,*காந்திஜி, தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துப் பேசியதாவது:*

ஹிந்தி பொது மொழியாக வேண்டு மென்பதை ஆதரித்து நாம் எவ்வளவுதான் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண் டிருந்தபோதிலும், காங்கிரஸ் தனது பழைய பத்ததியிலேயே சென்றுகொண் டிருக்குமாயின், நமது வேலை மிகவும் வருந்தத் தக்க முறையில் அசமந்தமாகவே இருக்குமென்பது நிச்சயம். இப்பொழுது மாகாணங்களுக் கிடையில் ஆங்கில மொழிமூலமே தொடர்பு இருந்துவருகிறது. இந்த நிலை மாறுவதற்குரிய வழிகளை மேற்கொள்ள வேண்டு மென்று காங்கிரஸ் மகா சபையை இந்தத் தீர்மானம் கேட்டுக்கொள்

* "இனிமேல் நடைபெறும் காங்கிரஸிலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், காரியக் கமிட்டியிலும் ஆங்கிலத்தை உபயோகப்படுத்தாது, அதற்குப் பதிலாக, ஹிந்தி-ஹிந்துஸ்தானியை உபயோகிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யும்படியாக, இந்த மகாநாடு இந்திய தேசிய காங்கிரஸ் காரியக் கமிட்டியை வேண்டிக்கொள்கிறது. தங்களுடைய கருத்தை ஹிந்தி-ஹிந்துஸ்தானியில் நன்கு வெளியிட முடியாதவர்கள் மட்டுமே ஆங்கில மொழியை உபயோகிக்கலாம். ஹிந்தி-ஹிந்துஸ்தானியில் தங்களுடைய கருத்துக்களை அறிவிக்கமுடியாத உறுப்பினர்கள், தங்கள் தங்கள் மாகாண பாஷையில் பேசலாம். அவ்விதம் பேச விரும்பின், அவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும். கொடுத்து, அவர்கள் பேசுகிற பேச்சை, ஹிந்தி-ஹிந்துஸ்தானியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்விதம் செய்யும்படி காங்கிரஸ் காரியக் கமிட்டியை, இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

"கூட்டத்திற்கு வந்திருப்பவர்களில், ஏதாவது ஒரு பகுதியினருக்குப் புரியும்படி ஆங்கிலத்தில் பேச விரும்பின், அப்படிப் பேசவிரும்புகிறவர், தலைவருடைய அனுமதி பெற்றுப் பேசலாம்."

கிறது. மாகாண மொழிகளின் ஸ்தானத்தையோ, அல்லது ஹிந்தியின் ஸ்தானத்தையோ அபகரித்துக்கொள்ளும் முறையில், ஆங்கில மொழிக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று, இந்தத் தீர்மானம் கூறுகிறது. ஆங்கில மொழி, பொது ஜனங்களுக்குரிய, பொது ஜனங்கள் பேசிவருகிற பாஷைகளின் ஸ்தானத்தை அபகரித்துக்கொண் டிராவிட்டால், மாகாண மொழிகள், இன்று அதிசயிக்கத்தக்க முறையில், எவ்வளவோ வளம்பெற்றிருக்கும். இங்கிலாந்து, பிரஞ்சு மொழியை ஏற்றுக்கொண்டு, அந்த மொழியையே தனது தேசிய விவகாரங்களுக் கெல்லாம் பயன்படுத்தி வந்திருக்குமாயின், இன்று ஆங்கில மொழிக்குப் பெருமை தந்து கொண் டிருக்கும் இலக்கியச் செல்வங்கள் ஆங்கில மொழியில் தோன்றுமலே போயிருக்கும். நார்மன் படையெடுப்பிற்குப் பிறகு, இங்கிலாந்தில் பிரஞ்சு மொழிதான் அரசியல் மொழியாக இருந்து வந்தது. பின்னர் 'தூய ஆங்கில மொழி'யே வேண்டுமென்ற உணர்ச்சி மேலோங்கி எழுவதாயிற்று. இன்று ஆங்கில மொழியில் காணும் சிறந்த இலக்கியங்களெல்லாம், இந்த உணர்ச்சியின் காரணமாக விளைந்த பயனேயாகும். இதை நாம் அறிவோம். முஸ்லிம்களின் தொடர்பு நமது இலக்கியத்திலும், பண்பாட்டிலும், நாகரிகத்திலும், பேரளவிற்கு ஆதிக்கம் பெற்றிருந்ததெனயார்கூடப் ஹாஸன் ஸார்ஹெப் சொன்னர். அவர் சொன்னது முற்றும் உண்மை. பார்ஸி, அராபி இரண்டிலும் பாண்டித்தியமும் தேர்ச்சியுமுள்ள காலஞ்சென்ற பண்டிதர் அயோத்தியா நாத்தைப் போன்றவர்கள் நம்மிடையே தோன்றலாயினர். அராபி, பார்ஸி மொழிகளில் காலத்தைச் செலவிடாமல், தாய்மொழி கற்பதில் அவர்கள் தங்கள் காலத்தைச் செலவிட்டிருப்பார்களேயானல், தாய் மொழி எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கும். பிறகு, ஆங்கில மொழி வந்து சேர்ந்தது. இன்றுவரை, இயற்கைக்கு விரோதமான ஒரு ஸ்தானத்தை வகித்துக்கொண்டு, ஆங்கில மொழி அதிகாரம் செலுத்தி வருகிறது. சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் வெகு

தடபுடலாகப் பேசக் கூடுமாயினும், தங்களுடைய சிந்தனை களைத் தங்கள் தங்கள் தாய் மொழியில் நன்கு வெளியிட அவர்களால் முடியவில்லை. சர். சி. வி. ராமன் செய்துள்ள ஆராய்ச்சிகள் யாவும் ஆங்கில மொழியிலேயே இருக்கின் றன. ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு அவற்ருல் யாதொரு பயனும் இல்லை. ரஷ்யாவின் நிலைமையைச் சிறிது கவனித்துப் பாருங்கள். புரட்சி ஏற்படுவதற்கு முன்னரே அங்கு சகல பாடப் புத்தகங்களையும் - சயன்ஸ் பாடப் புத்தகங்கள் உள் பட அனைத்தையும் - ரஷ்ய மொழிமூலமே கற்பித்தார்கள். லெனின் செய்த புரட்சிக்கு வழிகோலிவிட்டது, உண்மை யில், தாய் மொழிமூலம் கல்வி கற்பித்ததே யாகும். மாகாண ஸ்தாபனங்கள் தங்கள் தங்கள் மாகாண மொழி யிலும், அகில இந்திய காங்கிரஸ் ஹிந்தி மொழியிலும் விவ- காரங்களை நடத்த முற்பட்டுவிட வேண்டும். அப்படியில்லா விட்டால், பொது ஜனங்களுடன் உண்மையான தொடர்பு ஏற்பட முடியாது; ஏற்படுத்திக்கொண்டாலும், அந்தத் தொடர்பு ஸ்திரமான தாயிராது.

சம்மேளனத்தாரைப் போலவே, பாரதீய பரிஷத்தைச் சேர்ந்தவர்களும் இந்தத் தீர்மானத்தை நடைமுறையில் கொண்டு வர முயல வேண்டும். ஏனெனில், பாரதீய பரிஷத் மாகாண மொழிகளின் முன்னேற்றம் கருதி எழுந்துள்ள ஒரு ஸ்தாபனமாகும். அகில இந்திய காங்கிரஸும் இந்தத் தீர்மானத்தை நடைமுறையில் கொணர முயலாவிட்டால், அதுவரை, அதனுடைய லட்சியம் கைகூடி வராமல் ஏமாற்றமடையவே நேரிடும்.

ஒரு பாஷையைச் சிறப்பித்துப் பேச வேண்டுமென்- பதற்காக நான் இவ்வாறு பேசவில்லை. சத்தியத்தையும் அஹிம்சையும் பலிகொடுத்துவிட்டு, அதனுல் வரும் சுய - ராஜ்யத்தை நான் எவ்வாறு ஏற்றுக்கொள்ள மாட்டேனே, அதேபோல, தாய் மொழியைப் புறக்கணித்துவிட்டு வரும் சுயராஜ்யத்தையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனல், நான் ஏன் ஒரு பொது மொழி வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தி வருகிறேன் என்ருல், பொது மொழி

யானது தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த வலிமையுள்ள கருவியாக நின்று உதவுகிறது. பொது மொழி எவ்வளவுக்கு எவ்வளவு நாட்டில் உரம் பெற்றிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு நமது ஐக்கியமும் ஸ்திரம் பெற்றிருக்கும்.

தாய்மொழி, பிறிதொரு மாகாண மொழி, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளையும், ஒவ்வொருவரும் படிக்க வேண்டுமென்று நான் சொல்வதைக் கேட்டு, ஒருவரும் திகில் அடையவேண்டாம். மொழிகளைக் கற்றுக்கொள்வது எளிது. மாக்ஸ் முல்லருக்குப் பதினொன்கு மொழிகள் தெரியும். ஐந்து வருஷத்திற்குமுன், இங்கு ஒரு ஜர்மானியப் பெண் வந்திருந்தாள்; அவளுக்கு அப்போது பதினொரு பாஷைகள் தெரியும். இப்போது, அவள் இரண்டு மூன்று இந்திய மொழிகளையும் கற்றுக்கொண்டுவிட்டாள். ஏதோ ஒரு சங்கடத்தைக் கற்பித்துக்கொண்டு, உங்கள் மனம் வெருண்டுபோய் இருக்கிறது. ஹிந்தி மொழிமூலம் தங்கள் தங்கள் கருத்தைச் செம்மையாக வெளியிட முடியாது என்று, சிலர் நினைத்தாலும் நினைக்கக்கூடும். காங்கிரஸ் சட்ட திட்டத்தில் ஹிந்துஸ்தானியை உத்தியோக பாஷையாக ஏற்றுக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியும், அந்தத் துறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மனம் இன்னும் சோர்வுற்ற நிலையில்தான் இருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

பொது மொழியை ஹிந்துஸ்தானி என்ற பெயரால் அழைக்காமல், அப்படி அழைப்பதில் திருப்தி கொள்ளாமல், ஹிந்தி - ஹிந்துஸ்தானி என்ற பெயரால் அழைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துவதன் நோக்கம் யாதென்று யாகூப் ஹாஸன் ஸாஹெப் கேட்கிறார். இதன் ஆரம்ப விபரம் முழுவதையும் விளக்கமாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்துக்கு 1918ல் நான் தலைவனாயிருந்தேன். அப்போது, தலைவன் என்ற முறையில், ஹிந்திபேசுபவர்களிடம் 'ஹிந்தி' என்ற சொல்லில் உருது மொழியும் அடங்கும் என, விரிந்த முறையில் வியாக்கியானம் செய்யும்படி

நான் கூறினேன். மீண்டும் ஒருமுறை 1935-ம் ஆண்டில் சம்மேளனத்துக்குத் தலைமை வகித்தபோது, ஹிந்தி என்ற சொல்லுக்கு, உருது அல்லது தேவநாகரி லிபியால் எழுதப் பெற்று, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் புரிந்துகொள்கிற பாஷையையே ஹிந்திஎன்றுசொல்லுகிறோம்என்பதாகஒரு திட்டமான வியாக்கியானத்தையும் செய்தோம். மௌலானா ஷிபிலி பேசுகிற உயர்தரமான உருதுவையும், பண்டித ஷியாம் சுந்தர தாஸ் பேசுகிற உயர்தரமான ஹிந்தியையும் சேர்த்து ஒன்றாக்குவதே என் நோக்கம். பிறகு, சம்மேளனத்திலிருந்து, பாரதீய சாஹித்ய பரிஷத் என்ற ஸ்தாபனம் தோன்றுவதாயிற்று. நான் சொல்லியதன் பேரில், ஹிந்தி என்பதற்குப் பதிலாக ஹிந்தி - ஹிந்துஸ்தானி என்ற சொல்லை உபயோகிக்க ஒப்புக்கொண்டார்கள். அப்துல் ஹேக் ஸாஹெப் என்னை அங்கு மிகவும் பலமாக எதிர்த்தார். அவர் சொல்லியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தார் தான் 'ஹிந்தி' என்ற சொல்லை உபயோகப்படுத்தினார்கள். பின்னர், நான் சொன்னதன்பேரில், 'ஹிந்தி' என்ற சொல்லில் உருதுவும் அடங்கும் என்று ஏற்றுக்கொண்டார்கள். அப்படியிருக்கும்போது, 'ஹிந்தி' என்ற சொல்லை எடுத்துவிடும்படி சொல்லுவது முறையாகாது. இது என்னையும் சம்மேளனத்தாரையும் பலவந்தப்படுத்துவதாகும். 'ஹிந்தி' என்ற சொல், ஹிந்துக்கள் சிருஷ்டித்த சொல் அன்று என்பதை, நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டிற்கு வந்த பிறகு, வடக்கே வாழும் ஹிந்துக்கள் பேசுகிற, படிக்கிற மொழியைக் குறிப்பிடுவதற்கு, முஸ்லிம்கள் ஹிந்தி என்ற சொல்லை உபயோகித்தார்கள். எனவே, ஹிந்தி என்ற சொல்லை சிருஷ்டித்தவர்கள் முஸ்லிம்கள்தாம். பெயர்பெற்ற சில முஸ்லிம் எழுத்தாளர்கள், தங்கள் தாய் மொழி ஹிந்தி என்று சொல்லி வந்திருக்கிறார்கள். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எழுதப் படிக்க வருகிற ஒரு பாஷையைத்தான், ஹிந்தி என்ற சொல் குறிப்பிடுகிறதென்றால், வார்த்தைகளைப்பற்றி, நாம் ஏன் இப்போது சண்டையிட்டுக்கொண்டிருக்க வேண்டும்?

இதைவிட இன்னொரு விஷயமும் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. தென் இந்தியாவைப் பொறுத்தவரையில், அதிகப்படியான சம்ஸ்கிருதச் சொற்கள் கலந்துள்ள ஹிந்தி மொழிதான் அவர்களுக்குப் பிடிக்கும். ஏனெனில், தெற்கே வாழுகிறவர்களுக்குச் சில சம்ஸ்கிருதச் சொற்களும், அவற்றின் உச்சரிப்புகளும் ஏறகனவே தெரியும். இந்த இரண்டு மொழிகளும் ஹிந்தியும்-ஹிந்துஸ்தானி அல்லது உருதுவும் ஒன்ருய்க்கலந்து, உண்மையான அகில இந்திய மொழியாக மாறிவிடுமேயானல், மாகாண பாஷைச் சொற்களும் வந்து தினம் தினம் கலந்து, ஏராளமான சொற்களைக் கொண்டதாகி, நமது பொது மொழி மகத்தான ஒரு மொழியாக வளம்பெற்று விளங்கும். ஏன், ஆங்கில மொழியைக் காட்டிலும் ஏராளமான சொற்களைத் தன்னகத்தே கொண்டதாக, நமது பொது மொழி விளங்கும். ஹிந்தி-ஹிந்துஸ்தானி என்று நான் ஏன் வற்புறுத்துகிறேன் என்பதன் உண்மை உங்களுக்குப் புரிந்திருக்குமென நம்புகிறேன்.

ஹிந்தி - ஹிந்துஸ்தானி காங்கிரஸின் உத்தியோக மொழியாக வந்துவிடப் போவதைக் கண்டு பயப்படுகிறவர்களுக்கு, நான் ஒரு சிறு ஆலோசனை கூற விரும்புகிறேன். ஏதாவது ஒரு ஹிந்தி தினசரியையாவது, அல்லது நல்ல ஒரு ஹிந்திப் புத்தகத்தையாவது நாள்தோறும் தவருது ஐந்து நிமிஷமாவது வாய்விட்டுப் படியுங்கள்; ஹிந்தியிலுள்ள சிறந்த இலக்கியப் பகுதிகளையும் பேச்சுக்களையும் பொறுக்கி எடுத்து, அவற்றை மீண்டும் மீண்டும் உச்சரியுங்கள்; படியுங்கள். இதனல், சரியானபடி உங்களால் ஹிந்தி பாஷையை உச்சரிக்க முடியும். ஒவ்வொரு நாளும் புதிய சில ஹிந்திச் சொற்களைக் கற்றுக்கொள்ள முயலுங்கள். இப்படி நீங்கள் நாள்தோறும் செய்துவருகிற பழக்கத்தால், 'ஹிந்தி-ஹிந்துஸ்தானி' உங்களுக்கு நிச்சயமாய் ஆறு மாதத்திற்குள் வந்துவிடும்; எண்ணியதை எண்ணியவாறு உங்களால் நன்கு வெளியிட முடியும் என்று நான் உறுதி கூறுகிறேன். இதற்காக உங்கள் நினைவாற்றலை நீங்கள் அதிகப்படியாக வருத்த வேண்டிய அவசியமிராது.

# ஹிந்தி - உருதுப் போட்டி

> "முடிவில், நமக்குள் இதய ஒற்றுமை ஏற்பட்டு, மாகாண வேற்றுமைகளை யெல்லாம் மறந்து, நாம் இந்தியாவைத் தாய் நாடாக எண்ணிப் பெருமை கொள்கிற காலம் வரும். அப்போது ஒரே மரத்தில் பழுத்த பழங்கள் எல்லாம் ஓரேவிதமான சுவை உடையனவாய் இருப்பதைப் போல, மதங்கள் பலவாய் இருப்பினும், அவை யாவும் ஒரே பொது அடிப்படையிலிருந்து தோன்றினவைதாம் என்பதை அறிந்துகொள்வோம்; அதன்படி நடக்கவும் முயலுவோம். இந்த மனநிலை ஏற்படுகிறபோது, ஒரு பொது மொழிக்கு ஒரு பொது லிபிதான் இருக்க முடியும் என்பதை உணர்ந்து ஒரு முடிவுக்கு வந்துவிடுவோம். மாகாண மொழிகளைத் தங்கள் தங்கள் மாகாணத்திற்கு உதவும்படியாக விட்டுவிடுவோம்."

உருது சம்பந்தமாக நான் கொண்டுள்ள அபிப்பிராயத்தைப் பலமாக எதிர்த்து, உருது பத்திரிகைகள் எழுதி வருகின்றன என்று, ஒரு நிருபர் எனக்கு தெரிவித்துள்ளார். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுவதை நான் விரும்பிய போதிலும், ஹிந்துக்களுக்குள்ளே எனக்குத்தான் அதிக வகுப்புவாத உணர்ச்சி இருக்கிறது என்று கூறுகிற அளவிற்கு, அந்தப் பத்திரிகைகள் என்னைத் தாக்கி எழுதுகிறதாக மேற்படி நிருபர் கூறுகிறார்.

இந்த நிருபர் சொல்லை ஆதாரமாகக்கொண்டு, என்னை எதிர்ப்பவர்களுடன் நான் வாதாட விரும்பவில்லை; ஆனால், ஹிந்து - முஸ்லிம் பிரசினை சம்பந்தமாக நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களை எனது வாழ்க்கையே சான்றாக விளங்கி, மெய்ப்பித்துக் காட்டும்.

ஹிந்தி - உருது பிரசினை இன்னும் முடிவு காணப்பெறாமலே இருந்து வருகிறது. இதைப்பற்றி எனது கருத்துக்கள் யாவை என்பதை நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். மீண்டும் அவற்றையே திரும்பத் திரும்பச் சொல்லுவதனால், குற்றமில்லை. எனக்குள்ள நம்பிக்கையைத் தர்க்க ரீதியாக விவகாரம் செய்து விளக்காமல், எனது கொள்கையை மட்டும் எடுத்துரைக்கிறேன்:

1. ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உருது ஆகிய மூன்று சொற்களும் வட இந்தியாவில் வசிக்கும் ஹிந்துக்களும்

முஸ்லிம்களும் பேசுகிற ஒரே பாஷையைத்தான் குறிப்பிடு கின்றன. இந்த மொழியைப் பாரசீக லிபியிலேனும், தேவ-நாகரி லிபியிலேனும் எழுதலாம்.

2. உருது என்ற சொல் புழக்கத்திற்கு வருமுன்னரே, இந்தப் பாஷையைக் குறிப்பிடுவதற்கு ஹிந்தி என்ற சொல் லைத்தான், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

3. அதே மொழியைக் குறிப்பதற்கு, ஹிந்துஸ்தானி என்ற சொல்லை பின்னர்தான் உபயோகப்படுத்தி இருக்-கிறார்கள். (உபயோகப்படுத்திய சரியான காலம் தெரிய வில்லை.)

4. வடக்கேவாழும் மக்களில் பெரும்பான்மையோருக்-குப் புரிகிற பாஷையையே, ஹிந்து-முஸ்லிம் ஆகிய இரு சாரரும் பேச முயல வேண்டும்.

5. அப்படியே பேசிவந்தபோதிலும், சம்ஸ்கிருதச் சொற்களை அதிகமாகவும், அல்லது சம்ஸ்கிருதச் சொற்களை மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்று ஹிந்துக்கள் வற் புறுத்தக்கூடும். பாரசீக, அல்லது அராபியச் சொற்களை அதிகமாகவும், அல்லது அராபிய, பாரசீகச் சொற்களை மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்று முஸ்லிம்கள் வற்புறுத்தக்கூடும். பரஸ்பர அவநம்பிக்கையும், தனித்தே விலகிநிற்கும் மனப்பாங்கும் இருக்கிறவரை, நாம் இவற் றைப் பொறுத்துக்கொண்டுதான் போக வேண்டும். முஸ்-லிம்களின் சிந்தனையைப்பற்றி ஆராய்ந்தறிய விரும்புகிற ஹிந்துக்கள், பாரசீக லிபியில் எழுதப்பட்ட உருதுவைப் படிக்க வேண்டும். ஹிந்துக்களின் சிந்தனையை ஆராய்ந்து அறிய விருப்பமுள்ள முஸ்லிம்கள், தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட ஹிந்தியைக் கற்க வேண்டும்.

6. முடிவில் நமக்குள் இதயஒற்றுமை ஏற்பட்டு, மாகாண வேற்றுமைகளையெல்லாம் மறந்து, நாம் இந்தியா வைத் தாய் நாடாக எண்ணிப் பெருமை கொள்கிற காலம் வரும். அப்போது, ஒரே மரத்தில் பழுத்த பழங்களெல்லாம் ஒரேவிதமான சுவையுடையனவாய் இருப்பதைப்போல,

மதங்கள் பலவாய் இருப்பினும், அவையாவும் ஒரே பொது அடிப்படையிலிருந்து தோன்றியவைதாம் என்பதை அறிந்துகொள்வோம்; அதன்படி நடக்கவும் முயலுவோம். இந்த மனநிலை ஏற்படுகிறபோது, ஒரு பொது மொழிக்கு ஒரு பொது லிபிதான் இருக்க முடியும் என்பதை உணர்ந்து ஒரு முடிவிற்கு வந்து விடுவோம். மாகாண மொழிகளைத் தங்கள் தங்கள் மாகாணத்திற்கு உதவும்படியாக விட்டுவிடுவோம்.

7. ஒரு லிபியையோ, அல்லது ஒரு சார்பான ஹிந்தியை மட்டுமோ பலவந்தமாக எந்த மாகாணத்திலும், அல்லது எந்த ஜில்லாவிலும், அல்லது எந்த மக்கட் கூட்டத்தினிடையும் புகுத்த முயல்வது, தேச நலனுக்குப் பெருத்த குந்தகம் விளைவிப்ப தாகும்.

8. மதவேற்றுமைகளை மறந்துவிட்டே, நாம் பொது மொழிப் பிரசினையை ஆராய முயல வேண்டும்.

9. இந்தியாவின் பொது லிபியாக ரோமன் லிபி வர முடியாது; வரவும் கூடாது. பாரசீக, தேவநாகரி லிபிகளுக் கிடையில் மட்டுமே போட்டி இருக்க முடியும். உள்ளீடான மதிப்பை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலுங்கூட, தேவநாகரி லிபிதான் இந்தியாவின் பொது லிபியாக விளங்க முடியும். ஏனெனில், பெரும்பாலான மாகாண லிபிகள், தேவநாகரி லிபியிலிருந்தே தோன்றியிருக்கின்றன. எனவே, பிற மாகாணத்தவர்கள் பொது மொழியைத் தேவநாகரி லிபியைக்கொண்டே கற்றுக்கொள்வது மிகவும் எளிது. இருந்தபோதிலும், தேவநாகரி லிபியை முஸ்லிம்களிடம் தந்திரமாகப் புகுத்திவிட, எந்த விதத்திலும் முயலக் கூடாது. சொல்லப்போனல், இவ் விஷயத்தில் பரிச்சயமில்லாதவர்களுடன் விவாதம் செய்வதே கூடாது.

10. ஹிந்தி மொழியை உருது மொழியிலிருந்து வேறுபடுத்திச் சொல்லியபோதிலும், உருது வளர்ச்சிக்காகவும் நான் சேவை செய்திருக்கிறேன். இந்தூரில் கூடிய ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தில், என்னுடைய ஆலோசனையின் பேரில்தான் மாகாணத் தொடர்புகளுக்காக ஏற்படப் போகும் பொதுப் பாஷையை, ஹிந்தி - ஹிந்துஸ்தானி

என்ற பெயரால் அழைக்க ஒப்புக்கொண்டார்கள். இதன் காரணமாக, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்கள் தங்களால் ஆனவரை முயன்று, ஒற்றுமைப்பட்டு, பொது மொழியை வளர்க்க முற்படுவார்கள். அதன்பயனய், மாகாண பாஷைகளில் காணப்படும் சிறந்த இலக்கியச் செல்வங்களும் அந்தப் பொது பாஷையில் இடம் பெற முடியும்.

# வரவேற்கத்தக்க ஏற்பாடு

***"பாபு ராஜேந்திர பிரசாதும் மௌல்வி அப்துல் ஹேக் சாஹெபும் சேர்ந்து, ஹிந்தி-உருது விவாதம்பற்றி, ஒரு கூட்டறிக்கை விடுத்திருக்கிறார்கள். விவாதம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது என நம்புவதற்கு இந்த அறிக்கை இடமளிப்பதாய் இருக்கிறது. மாகாணங்களுக்கிடையில் பொதுவாக அமையக்கூடிய ஒரு மொழி வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ளவர்கள், அதனுடைய தராதரம் பற்றி விவாதித்து, ஒன்றுபட்டு வேலை செய்வதற்கு வழிகாண, இந்த அறிக்கை உதவியாக இருக்கும்."***

பாபு ராஜேந்திர பிரசாதும் மௌல்வி அப்துல் ஹேக் சாஹெபும் சேர்ந்து. ஹிந்தி-உருது விவாதம்பற்றி, ஒரு கூட்டறிக்கை விடுத்திருக்கிறார்கள். விவாதம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது என நம்புவதற்கு இந்த அறிக்கை இடந் தருகிறது. மாகாணங்களுக்கிடையில், பொதுவாக அமையக் கூடிய மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளவர்கள், அதனுடைய தராதரம்பற்றி விவாதித்து, ஒன்றுபட்டுவேலை செய்வதற்கு வழிகாண, இந்த அறிக்கை உதவியாக இருக்கும்.

அறிக்கை வருமாறு :

"1937-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ந் தேதி பாட்னாவில் நடைபெற்ற 'பீஹார் உருதுக் கமிட்டி' யின் கூட்டத்தின்போது, நாங்கள் இருவரும் சந்தித்துப் பேசச் சந்தர்ப்பம் வாய்த்தது. அப்போது 'ஹிந்துஸ்தானி' மொழிப் பிரசினைபற்றி விவாதிக்க நேர்ந்தது. இது சம்பந்தமாக, அங்கு வந்திருந்த மற்ற சில நண்பர்களுடன் நாங்கள் விவாதித்தோம். நம்மிடையே, உருது - ஹிந்தி - ஹிந்துஸ்தானிபற்றி, துரதிர்ஷ்டவசமாக எழுந்துள்ள தப்பபிப்பிராயங்களைப் போக்க ஆவல் கொண்டோம். இந்தப் பொது மொழிப் பிரசினை சம்பந்தமாக, பல வேறு துறைகளிலும் நின்று விவாதித்ததின் பயனாக, எங்களுக்கிடையில் அடிப்படையில் ஒருமைப்பாடு இருப்பதைக் கண்டோம். ஹிந்துஸ்தானி மொழிதான் இந்தியாவின் பொது மொழியாக முடியும் என்பதை ஏற்றுக்கொண்டோம். உருது லிபி, தேவநாகரி லிபி ஆகிய இரு லிபிகளிலும் அப் பொது மொழியை எழுத வேண்டும் என்றும், கல்வி முறை, உத்தியோக முறை ஆகிய துறைகளில் ஹிந்துஸ்தானியையே பொது மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் நாங்கள் முடிவுக்கு வந்தோம். வட இந்தியாவில் வாழும் பெரும்பாலான மக்கள் புரிந்துகொள்ளும் பாஷையையே, நாங்கள் 'ஹிந்துஸ்தானி' என்று குறிப்பிடுகிறோம். நடைமுறை வழக்கில் இருந்து வரும் சொற்களை

ஆதாரமாகக்கொண்டே, அகராதி தயாரிக்கப்பட வேண்டும் என்பது எங்கள் அபிப்பிராயம். அதோடுகூட, ஹிந்தி மொழிக்கும், உருது மொழிக்கும், இலக்கியச் செல்வங்கள் படைத்த வேறு பல மொழிகளுக்கும் அவை வளம்பெற வேண்டிய பாதுகாப்பும் வசதியும் அளிக்க வேண்டு மென்றும் கருதுகிறோம். ஹிந்தி மொழி, உருது மொழியில் வல்லவர்களின் ஒத்துழைப்பைக்கொண்டு, ஹிந்துஸ்தானிச் சொற்களால் ஆன அடிப்படை அகராதியைத் தொடுக்க வேண்டு மென்றும் ஆலோசனை கூறுகிறோம்.

"அகராதியைத் தொகுப்பதற்கு நடைமுறைக்கேற்ற சில வழிகளைக் காணவும், கலைச் சொற்களைப் பொறுக்கி எடுப்பது போன்ற பல முக்கியமான பிரசினை சம்பந்தமாக ஒரு முடிவு செய்யவும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு சிறு கமிட்டியை, கூடிய சீக்கிரம் நிறுவ வேண்டு மென நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். ஹிந்தி, உருது ஆகிய இரண்டு மொழிகளையும் நெருங்கிய தொடர்புடையதாகச் செய்வதில் விருப்பம் கொண்டவர்களும், ஹிந்தி மொழிக்காகவும் உருது மொழிக்காகவும் பரிந்துபேசும் செல்வாக்குடையவர்களும், ஹிந்துஸ்தானி மொழி வளர்ச்சியில் அக்கரைகொண்டுள்ளவர்களும் அந்தக் கமிட்டியில் அங்கம் வகிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்கள் இந்தக் கமிட்டியில் அங்கம் வகிப்பதனுல் ஹிந்தி, உருது ஆகிய இரு மொழிகளைப் பேசுகிற மக்களிடையில் நல்ல மனேபாவத்தை ஏற்படுத்த முடியும் என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்."

இந்த அறிக்கையை வெளியிட்டுள்ள அன்பர்கள் ஹிந்துஸ்தானிச் சொற்களால் ஆன அடிப்படை அகராதியைத் தயாரிப்பதற்குத் தக்க ஏற்பாடுகளை விரைவில் செய்வார்கள் என்று நம்புவோமாக. இவர்கள் தயாரிக்க விரும்பும் அகராதி சகல கட்சிக்காரர்களாலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவிதத்தில் அமைய வேண்டும். இந்த வேலை நடத்துவதற்காகவும், 'அடிப்படையான சில பிரசினைகளுக்கு முடிவு காண்பதற்காகவும்' சிறிய கமிட்டி ஒன்று விரைவில் நிறுவக் கூடும். திட்டம் விரைவில் நடைபெற்று, காரியம் கைகூடி வர வேண்டுமானல், கமிட்டி மிகவும் சிறியதாக இருப்பது நல்லது என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

# ஹிந்துஸ்தானி, ஹிந்தி, உருது

*"ஹிந்திதான் தேசிய பாஷையாக இருக்க முடியுமென்று சிலரும், உருதுதான் தேசிய பாஷையாக இருக்க முடியுமென்று வேறு சிலரும் கனவு காண்கிறார்கள். இதை நான் அறிவேன், இந்தக் கனவு எப்பொழுதும் கனவாகவேதான் இருக்கும்; மேலும் அது புனிதமற்ற ஒரு கனவே யாகும். ஹிந்து மதத்திற்கென எப்படி ஒரு தனிப்பட்ட பண்பாடு இருக்கிறதோ, அப்படியே இஸ்லாம் மார்க்கத்திற்கும் தனியான ஒரு பண்பாடு இருக்கிறது. எதிர்கால இந்தியாவில் இவ்விரு பண்பாடுகளும் இணைந்து மனோரம்மியமான ஒரு பூரணத்துவத்தை அடையும். அந்தச் சுதினம் தோன்றும் காலத்தில் இவ்விரு சாரரிடையும் ஹிந்துஸ்தானிதான் பொது மொழியாக விளங்கும்."*

ஹிந்தி-உருது பிரசினை சம்பந்தமாக, மனக்கசப்பு ஏற்படும் முறையில் விவாதங்கள் தோன்றி, இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பது, மிக மிக வருந்தத் தக்கதாகும். மாகாணங்கள் ஒன்றோடொன்று தொடர்புகொள்வதற்காக, ஹிந்துஸ்தானியையே அகில இந்தியப் பொது மொழியென நிர்ணயித்து, அதையே தமது அங்கீகரிக்கப்பட்ட உத்தியோக மொழியாக, காங்கிரஸ் மகாசபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஹிந்துஸ்தானி பிற மாகாண மொழிகளைப் புறக்கணித்து ஒதுக்கி விடாது; அவை வளர்வதற்கு உதவியாகவே இருக்கும். காரியக் கமிட்டி சமீபத்தில் செய்துள்ள தீர்மானம் சகல சந்தேகங்களையும் போக்கிவிடக் கூடும். அகில இந்திய சேவையில் ஈடுபடவேண்டிய காங்கிரஸ்காரர்கள் சிறிது முயன்று, ஹிந்துஸ்தானியை இரண்டு லிபிகளிலும் கற்றுக்கொண்டு விடுவார்களே யானால், பொது பாஷைபற்றிய லட்சியத்தை அடைவதற்குப் பல வழிகளிலும் நாம் முன்னேற்ற மடைவது சாத்தியமா யிருக்கும். ஹிந்தி-உருது இரண்டு மொழிகளுக் கிடையில் உண்மையாக இப்போது போட்டி யில்லை. போட்டி யெல்லாம் ஹிந்துஸ்தானி, ஆங்கிலம் இரண்டிற்கும் இடையிலேதான்; இந்தப் போட்டி மிகவும் கடுமையான ஒரு போட்டியே; இதை மிகுந்த அக்கறையோடு கூர்ந்து கவனித்துக்கொண்டு வருகிறேன் நான்.

ஹிந்தி - உருது விவாதம், அடிப்படையற்ற ஒரு விவாத மாகும். காங்கிரஸ் கருதியுள்ள ஹிந்துஸ்தானி இனிமேல் - தான் உருவடைய வேண்டி யிருக்கிறது. காங்கிரஸ் தனது நடபடிக்கைகள் அனைத்தையும் ஹிந்துஸ்தானியிலேயே நடத்தாதவரை, ஹிந்துஸ்தானி உருவடைவது காலங்-கடந்து கொண்டே போகும். காங்கிரஸ்காரர்களின் உப யோகத்திற்கு எந்த எந்த அகராதிகள் ஏற்றவை என் பதைக் காங்கிரஸ் மகாசபை நிர்ணயித்துச் சொல்லவேண் டும். அகராதியில் இல்லாத வார்த்தைகளைத் தொகுத்துக் கொடுப்பதற்குத் தக்கதொரு இலாகாவை நிறுவ வேண்டும். இது ஒரு பெரிய வேலை; செய்யவேண்டிய வேலையுங்கூட. ஜீவனுள்ள, வளர்ச்சி யடைந்து வருகிற, உண்மையான ஒரு அகில இந்திய மொழியை உருவடையச் செய்வதற்கு நாம் இந்த வேலையைச் செய்துதான் ஆக வேண்டும். இப்போது உலவிவரும் இலக்கியங்களில் எதெதை ஹிந்துஸ்தானி யாகக்கொள்ளலாம் என்பதை, அந்த இலாகா தீர்மானிக்க வேண்டும். தேவநாகரி அல்லது உருது லிபியால் எழுதப் பெறும் புத்தகங்கள், மாத, வார, தினசரிப் பத்திரிகைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, எது ஹிந்துஸ்தானி இல்லை என்பதை நிர்த்தாரணம் செய்ய வேண்டும். துருவி ஆராய்ந்து, அரும்பாடுபட்டு, செய்து முடிக்க வேண்டிய காரிய மாகும் இது. அப்போதுதான் நாம் வெற்றி காண முடியும்.

ஹிந்துஸ்தானி உருவடைந்து வளம் பெறுவதற்கு, ஹிந்தி மொழியையும் உருது மொழியையும் தாயகமாகக் கொள்ளலாம். எனவே, காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொரு-வருக்கும் இரண்டு மொழிகளிலும் கூடுமானவரை பயிற்சி இருப்பது அவசியம்.

மாகாண மொழிகளைத் தன்னகத்தேகொண்டு, வளர்ச்சி யடைந்து வருகிற சமுதாயத்திற்குப் பலவிதமான வழி களில் சொற்கள் தேவைப்படும். அதற்குத் தகுந்தபடி ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களையும் ஹிந்துஸ்-தானி மொழி கொடுத்து உதவவேண்டும். வங்காளி

களிடையோ, அல்லது தென் இந்தியர் கூட்டத்திலோ பேசும்போது, இயல்பாகவே, சம்ஸ்கிருதச் சொற்களை அல்லது சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய சொற்களை உபயோகிக்கவேண்டி யிருக்கும். அதே பேச்சை, பாஞ்சாலத்திலே பேச நேர்ந்தால், அப்போது அராபியச் சொற்களும் பாரசீகச் சொற்களும் அதிகமாகக் கலந்துவிடும்; முஸ்லிம்கள் அதிகமாகக் கூடியுள்ள கூட்டத்தில் சம்ஸ்கிருதச் சொற்களால் யாதொரு பயனுமில்லை; அவற்றை அவர்கள் புரிந்துகொள்ளவும் மாட்டார்கள். எனவே, அகில இந்தியாவிற்கும் சொற்பொழிவு நிகழ்த்த விரும்புகிற ஒருவர், ஹிந்திஸ்தானி அகராதியில் நன்கு பயில வேண்டும். அப்போதுதான் தமது சொந்த மாகாணத்தில் பேசுவதைப் போன்ற உணர்ச்சி, இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் அவருக்கு ஏற்படும். இந்த உண்மையை மனதில்வைத்துப் பார்க்கும்போது, பண்டித மாளவியாஜியின் பெயர்தான் முன்னே வந்துநிற்கிறது. ஹிந்தி பேசுகிறவர்களின் மத்தியிலும், உருது பேசுகிறவர்களின் மத்தியிலும் அவர் தங்குதடையின்றிப் பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். பொருத்தமான சொற்களுக்காக, அவர் திண்டாடியதை நான் கண்டதே யில்லை. இதேமாதிரி பாபு பகவான் தாஸையும் சொல்லலாம். அழகு குன்றாமல், ஒரே பொருள் தரும் சொற்களை, பாபு பகவான்தாஸ் கையாளுவார். முஸ்லிம்களைப் பொறுத்தவரை, இதை எழுதும்போது, மௌலானா முகமதலியின் பெயர் நினைவுக்கு வருகிறது. இரண்டு மொழி பேசுகிறவர்களுக்கு வேண்டிய சொற்கள் அவரிட முண்டு. பரோடா அரசாங்க வேலை பார்த்தபோது, அவர் குஜராத்தி மொழி படித்துக்கொண்டார். அது அவருக்கு மிகவும் உதவியா யிருந்தது.

காங்கிரஸிற்கு வெளி வட்டாரங்களிலும் ஹிந்தி மொழியும் உருது மொழியும் வளர்ச்சி யடைந்துகொண்டு வரும். ஹிந்தியை ஹிந்துக்கள் அதிகமாகவும், உருதுவையும் முஸ்லிம்கள் அதிகமாகவும் படித்து வருவார்கள். ஒப்புநோக்கிப் பார்த்தால், ஹிந்தி படித்துள்ள பண்டிதர்கள் முஸ்லிம்

களிடையே அரிது என்று சொல்லிவிடலாம். ஹிந்தி மொழி பேசும் பகுதிகளில் பிறந்து, ஹிந்தியைத் தாய் மொழியாக உடைய முஸ்லிம்களிடையேகூட, ஹிந்தி மொழி யறிந்த பண்டிதர்கள் வெகு சொற்பம் என்று எண்ணுகிறேன். உருது மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஹிந்துக்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். உருது மொழியில் பண்டிதர்கள் என்று சொல்லத்தகுந்த ஹிந்துக்களும் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். பண்டித மோதிலால்ஜிக்கு உருது மிக மிக நன்றாய் வரும். அந்த மொழியில் அவர் ஒரு பண்டிதர். அதேபோல டாக்டர் தெஜ்பகதூர் சப்ரூவையும் சொல்லலாம். இன்னும் எத்தனையோ உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போக முடியும். எனவே, இந்த இரண்டு சகோதர மொழிகளுக்கிடையில் சண்டையோ, நியாயமற்ற முறையில் போட்டியோ இருக்க இடமில்லை. நியாயமான போட்டி எப்போதும் இருக்கத்தான் வேண்டும்.

எனக்குத் தெரிந்தவரையிலும், எனக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக்கொண்டும், உருது மொழி வளர்ச்சிக்காக, உஸ்மானிய சர்வகலாசாலையார் மௌல்வி சாஹெப் அப்துல் ஹேக்கின் சிறந்த தலைமையில், பெரிய சேவை செய்து வருகிறார்கள். அவர்கள் ஒரு பெரிய உருது அகராதியைத் தயாரித்துள்ளார்கள். உருது மொழியிலேயே விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தயாரித்து வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். நேரிய முறையில், அந்தச் சர்வகலாசாலையில் உருதுவும் போதித்து வருகிறார்கள். இந்த முயற்சி வளர வேண்டும். நியாயமற்ற பொறாமைத் தீயின் காரணமாக, இன்று ஹிந்தி பேசும் ஹிந்துக்கள், உஸ்மானிய சர்வகலா-சாலையில் வளர்ந்து வரும் இலக்கியங்களைப் பயிலாது இருப்பார்களே யானால், அது அவர்களுடைய குற்றமே யாகும். பொறாமைகள் யாவும் மடிந்துபோவது திண்ணம். வகுப்புகளுக்கிடையே இப்போது காணப்பெறும் ஒற்றுமைக் குலைவு நோய்போன்றது; அது சாஸ்வதமாக நிலைத்து இருக்கப்போவதும் இல்லை. நல்லதற்கோ, அல்லது கெட்டதற்கோ தெரியவில்லை, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இந்திய

நாட்டில் ஒன்ருய் வாழ வேண்டியவர்களாய் இருக்கிருர்கள்; ஒருவருக்கொருவர் அண்டை வீட்டுக்காரர்களாய் இருக்கிருர்கள்; இந்த நாட்டில் பிறந்து வளரும் மக்களாய் விளங்குகிருர்கள். இந்த நாட்டில் பிறக்க வேண்டுமென விதி அவர்களுக்குக் கட்டளையிட்டதைப்போல, இந்த நாட்டிலேயே அவர்களுடைய அந்திய காலமும் ஏற்படப் போகிறது. தமக்குத் தாமே அவர்கள் ஒன்றுபடாவிட்டால்,வற்புறுத்தி, இயற்கை அவர்களை ஒற்றுமையாக வாழும்படி செய்துவிடும்.

ஹிந்துக்களுக்கு எப்படியோ, அப்படியேதான் முஸ்லிம்களுக்கும். ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தாரும் நாகரி பிரசாரனி சபையாரும் ஆடம்பரமில்லாமல் செய்துள்ள அரிய சேவைகளை முஸ்லிம்கள் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால், அதனுல் முஸ்லிம்களுக்குத்தான் நஷ்டம். தேவநாகரி லிபியிலோ, அல்லது உருது லிபியிலோ எழுதப் பெற்றதும், வடக்கே வாழும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பேசுகிறதுமான மொழிதான் ஹிந்தி என்று சம்மேளனத்தார் வியாக்கியானம் செய்திருக்கிருர்கள். இது, அவர்களைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய காரியமே யாகும்.இப்படித் தீர்மானம் செய்திருப்பதைக் கண்டு பெருமை கொள்ளாமலும் மகிழ்ச்சி யடையாமலும் முஸ்லிம்கள் இருந்துவருகிருர்கள். இது மிகவும் வருந்தத்தக்க தாகும். ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தார் கொடுத்திருக்கும் இந்த வியாக்கியானம், காங்கிரஸ் ஹிந்துஸ்தானிக்குக் கொடுத்திருக்கும் வியாக்கியானத்தைப்போன்றதாகவே இருக்கிறது.

ஹிந்திதான் தேசிய பாஷையாக இருக்க முடியுமென்று சிலரும், உருதுதான் தேசிய பாஷையாக இருக்க முடியுமென்று வேறு சிலரும் கனவு காண்கிருர்கள். இதை நான் அறிவேன். இந்தக் கனவு எப்பொழுதும் கனவாகவே தான் இருக்கும். மேலும், அது புனிதமற்ற ஒரு கனவே யாகும். ஹிந்து மதத்திற்கென எப்படி ஒரு தனிப்பட்ட பண்பாடு இருக்கிறதோ, அப்படியே இஸ்லாம் மார்க்கத்திற்கும் தனியான ஒரு பண்பாடு இருக்கிறது. எதிர்கால இந்தியாவில் இவ்விரு பண்பாடுகளும் இணைந்து மனேரம்மியமான

ஒரு பூர்ணத்துவத்தை அடையும். அந்த சுதினம் தோன்றும் காலத்தில், இவ்விரு சாராரிடையும் ஹிந்துஸ்தானிதான் பொது மொழியாக விளங்கும். அராபிய, பாரசீகச் சொற்களைத் தன்னகத்தே அதிகமாகக்கொண்டு, உருது சிறப்புற்று வளர்ந்தோங்கும். அதிகப்படியான சம்ஸ்கிருதச் சொற்களை ஹிந்தி மொழி தன்னகத்தே கொண்டு, சிறப்புற்று வளர்ந்தோங்கும். சூர்தாஸரும், துளசிதாஸரும் கவிதை புனைந்துள்ள ஹிந்தி மொழி ஒருக்காலும் இறவாது; அதேபோல ஷிபிலி கவிதை புனைந்த உருது மொழியும் இறந்துபோகாது. இரண்டு மொழிகளுமே ஹிந்துஸ்தானி மொழியோடு நல்லுறவு கொண்டு விளங்கும்.

# ரோமன் லிபிக்கும் தேவநாகரி லிபிக்கும் போட்டி

***"ரோமன் லிபியைக் கொண்டுவந்து வேண்டாதபடி புகுத்துவது, சரியன்று; அதனை மக்கள் ஆதரிக்கவும் மாட்டார்கள். பொதுஜனங்களுக்கு உண்மையான விழிப்பு ஏற்படும்போது, வேண்டாதபடி புகுத்தப்பட்டிருக்கும் அனைத்தையும் அவர்கள் உதறித் தள்ளி விடுவார்கள். நமக்குத் தெரிந்துள்ள காரணங்களைக் கொண்டு, நாம் எதிர்பார்ப்பதை விட, நம்மையறியாமலே வேறு-பல காரணங்களால் பொதுஜனங்கள் விரைவாக விழிப்படைந்து வருகிறார்கள்."***

தேவநாகரி லிபிமூலம் போதனை செய்யாது, ரோமன் லிபிமூலமாக, அஸ்ஸாம் பகுதியில் வாழும் சில கூட்டத்தினருக்கு, எழுதப்படிக்கக் கற்றுக்கொடுப்பதாக நான் அறிகிறேன். இப்போது இருக்கிறபடியோ, அல்லது சீர்திருத்தம் செய்யப்பட்டோ, தேவநாகரி லிபிதான் அகில இந்தியப் பொது லிபியாக விளங்கப்போகிறது என்ற எனது கருத்தை நான் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறேன். தேசிய நோக்கோடும் சாஸ்திரிய நோக்கோடும் ஆராய்ந்து பார்த்து, தேவநாகரி லிபியின் மேன்மையைத் தாமே மனமுவந்து முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளாதவரை, உருது லிபிக்கு, அல்லது பாரசீக லிபிக்கு சம அந்தஸ்தும் உரிமையும் இருந்துவரும். ஆனால், இத்தகைய அந்தஸ்தும், உரிமையும் ரோமன் லிபிக்கு இருக்க முடியாது. மேலும், ரோமன் லிபியை இந்தப் பிரசினையில் கொண்டுவந்து புகுத்துவது பொருந்தவே பொருந்தாது. ரோமன் லிபியைப் பரப்ப விரும்புகிறவர்களுக்கு இடமளித்தால், அவர்கள் உருது, தேவநாகரி ஆகிய இரு லிபிகளுக்குமே இடமில்லாது செய்துவிடுவார்கள். மனச்சார்பும், மொழிநூல் மரபும், ரோமன் லிபிக்கு ஒன்றுபோலவே தடைகளாய் நிற்கின்றன. டைப் அடிப்பது, அச்சடிப்பது, ஆகியவற்றுக்கு ரோமன் லிபியால் அதிக சௌகரிய முண்டு. இதுதான்

இந்த லிபிக்கு இருக்கும் சிறப்பு. படிக்கும்போது, கோடிக் கணக்கான மக்களுக்கு உண்டாகும் சிரமத்துடன் இதை ஒப்பிட்டுப்பார்த்தால், இந்தச் சிறப்பு, ஒரு சிறப்பே யாகாது. தேவநாகரி லிபியிலோ, அல்லது, மாகாண லிபி களின் மூலமாகவோ சொந்த இலக்கியங்களைப் படிக்க வேண்டிய நிலையிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு, ரோமன் லிபியால் எத்தகைய சௌகரியமும் இல்லை. கோடிக்கணக்கான ஹிந்துக்களுக்குத் தேவநாகரி லிபி எளிதாக வரும்; முஸ்லிம்களுக்கும் இந்த லிபி எளிதானதே. ஏனெனில், பெரும்பாலான மாகாண லிபிகள் தேவநாகரி லிபியிலிருந்தே தோன்றி உள்ளன. வேண்டுமென்றேதான் நான் முஸ்லிம்களையும் சேர்த்துக் குறிப்பிடுகிறேன். வங்காள முஸ்லிம்களுக்கு வங்காளிதான் தாய் மொழி; தமிழ் முஸ்லிம்களுக்குத் தமிழ்தான் தாய் மொழி. இப்-போது நடைபெற்று வருகிற உருதுப் பிரசார இயக்கத்தி னால், தமது தாய் மொழியோடு சேர்த்து இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவருமே உருதுவும் கற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்கள்; கற்றுக்கொள்ளவும் வேண்டும். எப்படி யிருந்தபோதிலும் சரி, புனிதமான கொரானைக் கற்றுக்-கொள்வதற்கு, முஸ்லிம்களுக்கு அராபி தெரிய வேண்டும். ஆங்கிலம் படிக்க விரும்பினாலன்றி, கோடிக்கணக்கான பேருக்கு ஹிந்துவாயினும் சரி, முஸ்லிம் ஆயினும் சரி, ரோமன் லிபி தெரியவேண்டிய அவசியமே யில்லை. தங்க ளுடைய மதக் கிரந்தங்களில் பயிற்சி பெற விரும்பின், ஹிந்துக்களுக்குத் தேவநாகரி லிபி அவசியம் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்துகொண்டும் வருகிறார்கள். எனவே, தேவநாகரி லிபியைப் பரப்ப முயன்றுவரும் இயக்கமானது, சரியான, பலமான அஸ்திவாரத்தின்மீதே கட்டப்பெற்று வருகிறது எனலாம். ரோமன் லிபியைக் கொண்டுவந்து வேண்டாதபடி புகுத்துவது, சரியன்று; அதனை மக்கள் ஆதரிக்கவும் மாட்டார்கள். பொது ஜனங்களுக்கு உண்மை யான விழிப்பு ஏற்படும்போது, வேண்டாதபடி புகுத்தப்பட் டிருக்கும் அனைத்தையும் அவர்கள் உதறித் தள்ளிவிடுவார்

கள். நமக்குத் தெரிந்துள்ள காரணங்களைக்கொண்டு, நாம் எதிர்பார்ப்பதைவிட, நம்மை யறியாமலே வேறுபல காரணங்களால், பொதுஜனங்கள் விரைவாக விழிப் படைந்து வருகிறார்கள். ஆனால், கோடிக்கணக்கான மக்கள் விழிப்படையக் காலம் செல்லும். அந்த விழிப்பு எப்படி ஏற்படுகிறது, எவ்வாறு ஏற்படுகிறது என்பதை நம்மால் அறிய முடியவில்லை. பொதுஜனங்கள் பெற்றுள்ள மன எழுச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, தேசத் தொண்டர் களால் காரியங்களைச் சிறிது துரிதப்படுத்த முடியும்; அவ்வ ளவுதான்.

# சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றிய மொழிகள் அனைத்திற்கும் ஒரே லிபி

"இந்தத் தேசத்தின் கல்விமான்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, ஆலோசனை செய்து, குறிப்பிட்ட ஒரு லிபிதான் பொது லிபியாக இருக்கத்தகுந்தது என்ற முடிவிற்கு வருவார்களாயின், அந்த லிபியை நடைமுறையில் எங்குமே கையாள்வது எளிதாகிவிடும்."

சம்ஸ்கிருத மொழியிலிருந்து தோன்றிய, அல்லது சம்ஸ்கிருதக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ள இந்திய மொழிகள் அனைத்தையும், ஒரே லிபியினால் எழுதுவது நல்லது என்ற விஷயம், பல ஆண்டுகளுக்கு முன்னரே பொதுஜனங்கள்முன் வைக்கப்பட்டு, முடிவு காணாமல், அது இன்னும் அப்படியே இருந்து வருகிறது. மாகாண வெறி தலைவிரித்தாடும் இந்நாளில், ஒரே லிபியைக் கையாள வேண்டுமென்பது ஒருவேளை அதிகப்பிரசங்கித்தனமாகத் தோன்றினாலும் தோன்றக் கூடும். தேச முழுவதும் தீவிரமாக நடைபெற்று வருகிற இலக்கியப் பிரசாரங்களில், ஒரே லிபிதான் வேண்டும் என்பவர்களின் வாதங்களுக்கும் இடங்கிடைக்கச் செய்து, அதைப் பொதுமக்கள் அறியுமாறு செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரை, பல ஆண்டுகளாகவே, நான் ஒரே லிபி வேண்டுமென்கிற கட்சியைச் சேர்ந்தவன். தென் ஆப்பிரிக்காவில் வசித்த, அந்தக் காலத்திலேயே, இந்தியாவிலுள்ள சில குறிப்பிட்ட குஜராத்தியர்களுக்கு நான் தேவநாகரி லிபியில் கடிதம் எழுதியிருப்பதாக எனக்கு நினைவிருக்கிறது. தேவநாகரி லிபியைக் கையாண்டால், மாகாணத்துக்கு மாகாணம் தொடர்பு அதிகரிக்கும். அதோடுகூட, மற்ற மாகாண மொழிகளைக் கற்றுக்கொள்வதும், இன்று இருப்பதைவிட எவ்வளவோ எளிதாகிவிடும். இந்தத் தேசத்தின் கல்விமான்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, ஆலோசனை செய்து, குறிப்பிட்ட ஒரு லிபிதான் பொது லிபியாக இருக்கத்தகுந்தது என்ற முடிவிற்கு வருவார்களாயின், அந்த லிபியை

நடைமுறையில் எங்குமே கையாள்வது எளிதாகிவிடும். இன்றைய நிலையில் கோடிக்கணக்கான மக்களுக்கு எழுத்தறிவு இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு எந்த லிபி மூலம் கற்பித்தாலும், ஒன்றுதான். லிபியைப்பற்றி அவர்கட்கு அக்கரை யில்லை. இன்பகரமான இந்த முடிவு ஏற்பட்டு விட்டால், இந்தியாவில் இரண்டே இரண்டு லிபிகள்தாம் - தேவநாகரி லிபி, உருது லிபி ஆகிய இரண்டுமே-நிலைத்து நிற்கும். இந்த இரண்டு லிபிகளிலும் தமக்குப் பயிற்சி இருக்க வேண்டும்; இந்தப் பயிற்சி இருப்பது தமது கடமை என்பதாக ஒவ்வொரு தேசியவாதியும் கருதுவார். இந்திய மொழிகள் அனைத்தினிடமும் எனக்கு அன்பு உண்டு. அனேக லிபிகளைக் கற்றுக்கொள்வதற்கு நான் கூடுமான வரை முயன்று இருக்கிறேன். போதுமான அவகாச மட்டும் எனக்குக் கிடைக்குமானல், எழுபது வயது ஆகியும் கூட, இன்னும் அனேக இந்திய மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஊக்கம் என்னிடமிருக்கிறது. விளையாட்டுப் போல, எளிதாக நான் பிற மொழிகளைக் கற்றுவிடுவேன். பல பாஷைகளைப் படிக்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்தும், சகல இந்திய லிபிகளையும் என்னல் கற்றுக் கொள்ள முடியவில்லை. இதை நான் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். சகோதர பாஷைகள் அனைத்துக்கும் ஒரே லிபி இருக்குமே யானல், முக்கியமான மாகாண பாஷைகள் அனைத்தையுமே, நான் சிறிது காலத்திற்குள் போதுமான அளவு கற்றுக்கொண்டு விடுவேன். பொதுப்பண்பு, அழகு இவை இரண்டையும் பொறுத்தவரை, தேவநாகரி லிபிக்கு எவ்விதக் குறைபாடுமில்லை. இலக்கிய இயக்கங்களில் ஈடுபட்டுள்ள அன்பர்கள், நான் சொல்வதற்குச் சிறிது செவிசாய்த்துச் சிந்தனை செய்வார்கள் என்று நம்புகிறேன். தேவநாகரி லிபியை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களே யானல், வருங் கால சந்ததியார்களுக்கு உழைப்பும் நேரமும் கொள்ளை கொள்ளையாக மீதப்படும்; அவர்கள் நம்மை வாழ்த்தவும் செய்வார்கள்.

# ரோமன் லிபியா ?

"ஹிந்தி, உருது லிபிகளுக்குப் பதிலாக ரோமன் லிபிமூலம் கல்வி கற்பிப்பது, மாட்டுக்கு முன்னால் வண்டியைப் பூட்ட முயலுகிற கதைதான்.........தேசிய மொழிச் சிக்கலைத் தீர்த்துவைப்பதற்கு இரண்டு லிபிகள் மூலம் கல்வி கற்பிப்பதே எளிதான வழி; சிறந்த வழியுங்கூட."

வினா: படிப்புவாசனையில்லாத கோடிக்கணக்கான பொது ஜனங்களுக்கு, நாம் ரோமன் லிபியின்மூலம் கல்வி கற்பித்தால் என்ன? ஹிந்திக்கும் உருதுக்கும் இடையில் இருந்துவரும் சச்சரவை இது போக்கிவிடக் கூடுமல்லவா?

விடை: ஹிந்தி, உருது லிபிகளுக்குப் பதிலாக ரோமன் லிபிமூலம் கல்வி கற்பிப்பது, மாட்டுக்கு முன்னால் வண்டியைப் பூட்ட முயலுகிற கதைதான். நமது குழந்தைகளுக்கு முதலில், ஹிந்தி, உருது ஆகிய லிபிகள்மூலம் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். அலட்சியம் செய்து ஒதுக்கிவிடுவதனாலேயோ, அல்லது வேறு எளிய மாற்றங்களைக் குறிப்பிடுவதனாலேயோ, கஷ்டமான பிரசினைகளுக்கு நிவர்த்தி காண முடியாது. பிளவுபட்டிருக்கும் இரண்டு இதயங்களை, ரோமன் லிபியினால் பொருத்திவிட முடியுமா என்பது சந்தேகம்; அது மட்டுமில்லை, ரோமன் லிபியைக் கையாளத் தொடங்குவோமே யானால், அது பிறிதொரு சுமையாகவே முடியும். தேசிய மொழிச் சிக்கலைத் தீர்த்துவைப்பதற்கு உருது, தேவநாகரி ஆகிய இரண்டு லிபிகள்மூலம் கல்வி கற்பிப்பதே எளிதான வழி; சிறந்த வழியுங்கூட. இந்த இரண்டு லிபிகளின்மூலம் கல்வி கற்பிப்பதனால், வருங்கால சந்ததிகளான ஹிந்து முஸ்லிம் சிறுவர் சிறுமியர் அனைவருமே, இந்த இரண்டு பாஷைகளிலுமுள்ள அறிவுக் களஞ்சியங்களை அனுபவிக்க முடியும். நமது சிறுவர் சிறுமியரில், சிலர் ஆங்கிலம் படிப்பார்கள்; நிச்சயமாகப் படித்தே தீருவார்கள். அப்பொழுது, அவர்கள் ரோமன் லிபியைச் சந்தேகத்திற்கு இடமின்றி கற்றுக்கொள்ளவே செய்வார்கள்.

# ஹிந்துஸ்தானி

*"தனக்கே யுரிய சிறப்பியல்புகள் குன்றிவிடாது, தயக்கமின்றிப் பிறமொழிச் சொற்களைக் கையாளத் தயாராய் இருக்கும் எந்த மொழியும் நிச்சயமாக வளம்பெற்று வளரும். தாராளமாகப் பிறமொழிச் சொற்களை எடுத்தாண்டுகொண்டதனாலேயே, இன்று, ஆங்கில மொழி சிறந்து விளங்குகிறது."*

*"(அ) காரியக் கமிட்டி, அ.இ. கா. கமிட்டி, காங்கிரஸ் மகாசபை ஆகியவற்றின் நடவடிக்கைகள் எப்பொழுதும் ஹிந்துஸ்தானியில் நடைபெறும். ஹிந்துஸ்தானி பேசத்தெரியாதவர், அனுமதி கேட்டு, தலைவர் அனுமதி கொடுத்தால், மாகாண மொழியிலோ, அல்லது ஆங்கில மொழியிலோ பேசலாம்.*

*"(ஆ) மாகாணக் காங்கிரஸ் கமிட்டி நடவடிக்கைகள், எப்பொழுதும் அந்தந்த மாகாண மொழியிலே நடைபெறும். வேண்டுமானால், ஹிந்துஸ்தானியையும் உபயோகிக்கலாம்."*

***— காங்கிரஸ் மகாசபை அமைப்பு 25-வது விதி***

இந்தத் தீர்மானத்தைத் திருப்திகரமான அளவுக்குக் காங்கிரஸ் மகாசபை நடைமுறைக்கு கொண்டுவர வில்லை. இதை நினைத்தால் மிகவும் வருத்தமாய் இருக்கிறது. தவறு காங்கிரஸ்காரர்களுடையதே. ஹிந்துஸ்தானியைக் கற்பதனால் ஏற்படும் சிரமத்தை மேற்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. ஆங்கிலப் புலவர் சிகாமணிகளுக்குச் சமதையாக ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற எண்ணி, சாத்தியமில்லாத ஒரு காரியத்தில் இறங்கி, முனைந்துநின்று, தங்கள் முயற்சிகள் அனைத்தையும் அத்துறையிலேயே வீணாக்கிவிட்டார்கள் அவர்கள்; இது நிதர்சனம். இதனால் விளைந்த பலன் மிக மிகத் துக்ககரமானதே; காங்கிரஸ் சொல்லும் அகில இந்திய மொழியான ஹிந்துஸ்தானியைத் துரத்திவிட்டதோடு, மாகாண மொழிகளையும் வளர ஒட்டாமல் இந்த முயற்சி தடைப்படுத்தி விட்டது. ஆங்கிலம் படித்தவர்களையே இப்போது படித்தவர்கள் என்று கருதுகிறார்கள். இவர்கள்தாம் இயல்பாகவே தலைவர்களாகவும் இருக்கும்படி நேர்ந்துவிட்டது. ஆங்கிலம் படித்த இந்தச் சிறிய

கூட்டத்தினருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள பள்ளிக்கூடங்களைத் தவிர, தகுதியான வேறு கல்விநிலையங்கள் இந்த நாட்டில் இல்லை. ஆங்கில மொழியின் ஸ்தானத்தில் ஹிந்துஸ்தானியை புகுத்து வதற்கு, காங்கிரஸ் பகீரதப் பிரயத்தனம் செய்துதான் ஆக வேண்டும். தீர்மானம் நிறைவேற்றிய உடனேயே, இந்த வேலையைச் செய்வதற்குக் காங்கிரஸ் ஒரு குழுவை நியமித்திருக்கலாம். இப்போதும் அதைத்தான் செய்ய வேண்டி யிருக்கிறது. காங்கிரஸ் செய்யாவிட்டால், தனிப் பட்ட காங்கிரஸ்காரர்களும், அகில இந்திய பொதுமொழி ஒன்றை உருவாக்குவதில் சிரத்தை உள்ளவர்களும் அதில் ஈடுபட வேண்டும்.

ஆனால், ஹிந்துஸ்தானி என்பது எது? உருது மொழி, ஹிந்தி மொழியைத் தவிர, ஹிந்துஸ்தானி என்று ஒரு பாஷை இருப்பதாகத் தெரியவில்லை. சில சமயங்களில், உருது மொழியை, ஹிந்துஸ்தானி என்ற பெயரால்அழைக் கிறார்கள். காங்கிரஸ் விதியில் குறிப்பிட்டிருக்கிற ஹிந்துஸ் தானி என்பதற்கு, உருது என்று அர்த்தமா? அதிக வியா- பகமாகவுள்ள ஹிந்தியை அது நீக்கிவிட்டதா? இப்படிப் பொருள்கொள்வது அசம்பாவிதம். சாஸ்திரிய முறையில், ஹிந்தியும் உருதுவும் ஒன்றாய்க்கலப்பதிலிருந்து ஏற்படும் பாஷையையே ஹிந்துஸ்தானி என்று அந்த விதி குறிப்பிடு வதாகவே நாம் கொள்ள வேண்டும். அதைத் தவிர வேறு பொருள் அதற்கு இருக்க முடியாது. அந்த மாதிரி ஒரு பாஷை இப்பொழுது எழுத்துவழக்கில் இல்லை. ஆனாலும், எழுதப்படிக்கத் தெரியாமல் இருந்துவரும் கோடிக்கணக்- கான வட இந்திய ஹிந்து முஸ்லிம்களுக் கிடையில் இது தான் - அதாவது ஹிந்துஸ்தானிதான் - பேச்சுவழக்கில் இருந்து வருகிறது. எழுத்துவழக்கில் இல்லாதபடியால், ஹிந்துஸ்தானி பரிபூர்ணமற்றதாய் இருக்கிறது. எழுத்து- வழக்கில் இருந்துவந்த பாஷையோ, இரு வேறு முறையில் எழுதப்பட்டு, ஒன்றோடொன்று இணையாமல், விலகி,

வேற்றுமையை அதிகரிப்பதா யிருக்கிறது. எனவே, ஹிந்துஸ்தானி என்ற சொல் ஹிந்தியையும் உருதுவையும் குறிக்கும். உருதுச் சொற்களை ஒதுக்கிவிடாமல், அவற்றுக்கு இயற்கையாகவே அமைந்த ஒலி இனிமையையும், அமைப்பையும் சிதைத்துவிடாமல், எவ்வளவு சாத்தியமோ அவ்வளவுக்கு உருதுச் சொற்களை சாஸ்திரிய முறைப்படி, தனதாக்கிக்கொண்டுவிடுமானால், ஹிந்தியும் தன்னை ஹிந்துஸ்தானி என்று சொல்லிக்கொள்ளலாம். உருது மொழியும் ஹிந்தியை அவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம். ஒன்றைக் கண்டு ஒன்று விலகி ஓடுவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஹிந்தி, உருது மொழிகளின் போக்குகளை, ஒருவழிப்படுத்த ஹிந்துஸ்தானி மொழிக்கு வேறு ஒரு தனியான ஸ்தாபன மில்லை.

இந்தச் சிறந்த காரியத்தை 'ஹிந்தி சாஹித்ய சம்மேளனமும் ' அஞ்சுமான் - இ - தாராக்கி - க- உருது'வும் சேர்ந்து செய்யலாம். ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தார் 1917ம் ஆண்டில் என்னைத் தலைமை வகிக்க அழைத்தார்கள். அதிலிருந்து அந்த ஸ்தாபனத்தோடு எனக்குத் தொடர்பு உண்டு. அகில இந்திய மொழி சம்பந்தமாக நான் கொண்டுள்ள கருத்துக்களை நான் அவர்களிடம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். பின்னர், 1935ம் ஆண்டில் மீண்டும் ஒரு முறை தலைமை வகித்தேன். அப்போது, வட இந்தியாவில் வாழும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பேசுகிறதும், தேவநாகரி லிபி, அல்லது பாரசீக லிபியில் எழுதப்படுகிறதுமான ஒரு பாஷையே ஹிந்தி யாகும் என, வியாக்கியானம் செய்யும்படியாகச் சொல்லி, சம்மேளனத்தாரை நான் ஏற்றுக்கொள்ளவும் செய்தேன். இந்த வியாக்கியானப்படி சம்மேளனத்தார் ஹிந்தியை எங்கும் பரவச் செய்து, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் படிக்கத்தகுந்த முறையில், இலக்கியங்களை உற்பத்தி செய்து வந்திருக்க வேண்டும். இதுதான் அவர்கள் இயல்பாகச் செய்திருக்க வேண்டிய காரியம். இதன்படி பார்த்தால் சம்மேளன அங்கத்தினர்கள் பாரசீக லிபியைக் கற்றுக்கொண்டிருக்க

வேண்டும். பெருமை தரத்தக்க இந்த சிறப்புரிமை தங்களுக்கு இல்லாதவாறு செய்துகொண்டுவிட்டார்கள் அவர்கள். செய்யாமலே விட்டுவிடுவதைப் பார்க்கிலும், காலதாமதம் செய்வது குற்றமில்லை. இனியாவது அவர்கள் உணர்ச்சி பெற்று எழுவார்களா? அஞ்சுமான் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் செய்யட்டுமே என்று, சம்மேளனத்தார் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அஞ்சுமான் இந்தக் காரியத்தில் ஈடுபடுமானால், அதை ஒரு மகத்தான காரியம் என்றே சொல்ல வேண்டும். ஒன்றோடொன்று இணைந்து வேலை செய்தால், இரண்டு சங்கங்களுமே இத்துறையில் பணியாற்ற முடியும். ஒவ்வொரு சங்கமும் தனித்தனியாகவே இருந்து வேலை செய்து வரவேண்டுமென்று சொல்லி இருக்கிறேன். எந்தச் சங்கம் என்னுடைய திட்டத்தின்படி பணியாற்றத் தொடங்குகிறதோ, அந்தச் சங்கம் அந்த மொழியை வளம்படுத்துவதோடு, கடைசியில் இரண்டு மொழிகளும் ஒன்றுசேர்வதற்குப் பணியாற்றியதும் ஆகும். இப்படி இரண்டு மொழிகளும் ஒன்றாகி, ஒரு பொது மொழியாவதால், தேசம் முழுவதற்குமே நன்மையுண்டு.

ஹிந்தி - உருது பிரசினை, வகுப்பு உணர்ச்சி வடிவில் வளர்ந்துகொண்டு வருவது துரதிர்ஷ்டமான போக்காகும். யாராவது சில்லரைத் தவறுகள் செய்துவிட்டால், அவற்றைப் பொறுத்துக்கொண்டு, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்ள வேண்டும். இரண்டு சங்கத்தாருக்கும் இது சாத்தியமானதே. பொதுப்படையான காரியங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றை இரு சங்கங்களுமே செயல்முறைக்குக் கொண்டுவரலாம். தனக்கே யுரிய சிறப்பியல்புகள் குன்றிவிடாது, தயக்கமின்றிப் பிறமொழிச் சொற்களைக் கையாளத் தயாராய் இருக்கும் எந்த மொழியும் நிச்சயமாக வளம்பெற்று வளரும். அப்படித் தாராளமாகப் பிற மொழிச் சொற்களை எடுத்தாண்டுகொண்டதனாலேயே, இன்று, ஆங்கில மொழி சிறந்து விளங்குகிறது.

# ஹிந்தி + உருது = ஹிந்துஸ்தானி

*"பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் என்ன சொல்லுகிறார்களோ, அவைதாம் மொழியாக வடிவுகொள்கிறது. ஆங்கிலேயர் எழுதியது, பேசியதைத் தவிர, வேறு தனியான மதிப்பு ஆங்கில மொழிக்கு இல்லை. வேறுவிதமாகச் சொன்னால், மொழி என்பது மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கருவியாகும். எனவே, சிருஷ்டித்தவனுடைய இயல்புதான் மொழியில் படிந்து கிடக்கும்."*

ஒருவர் இம்மாதம் 29உ ஒரு கடிதம் எழுதி, அதை ரெஜிஸ்டர் தபாலில் எனக்கு அனுப்பி யிருக்கிறார். சேவாக் கிராமத்தில் 31உ அந்தக் கடிதம் எனக்குக் கிடைத்தது. அந்தக் கடிதம் பின்வருமாறு:

"காசி சர்வகலாசாலையில், தாங்கள் செய்த பட்டமளிப்பு விழாப் பிரசங்கம், என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. நமது கல்வி ஸ்தாபனங்களில், ஹிந்துஸ்தானி மூலமாகவே சகல பாடங்களையும் போதிக்க வேண்டுமென்று, தாங்கள் குறிப்பிட்டது, முக்கியமாக, அந்த சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமுடையது. ஹிந்துஸ்தானி என்னும் பெயரால் உண்மையாகவே ஒரு மொழி வழங்கிவருவதாகத் தாங்கள் எண்ணுகிறீர்களா? உண்மையைப் பார்க்கப்போனால், அப்படியொரு மொழி இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, காசியில் ஹிந்தி மொழிக்குப் பரிந்துபேசி இருக்கிறீர்களே யன்றி, ஹிந்துஸ்தானி மொழிக்குத் தாங்கள் பரிந்துபேச வில்லை. தாங்கள் மட்டுமல்ல, காங்கிரஸ்காரர்கள் அனைவருமே இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். மனசில் எண்ணுவதை, அப்படியே வெளிப்படையாகச் சொன்னால் என்ன? எங்களுக்கு ஹிந்திதான் வேண்டுமென்று சொல்லுங்களேன்? ஹிந்துஸ்தானி என்ற பெயரால் அதை அழைக்க வேண்டுமென்பது ஏன்? தாங்கள் பொது மொழியை "ஹிந்தி-ஹிந்துஸ்தானி" என்ற பெயரால் அழைக்க வேண்டுமென்று, சில ஆண்டுகளுக்கு முன்னரே கூறினீர்கள். அந்தப் பெயரை இதுவரை யாரும் உபயோகப்படுத்தியதாகத் தெரியவில்லையே?

"மகாத்மாஜி, தங்களுக்கு உருதுவினிடம் விரோத உணர்ச்சி கிடையாது என்று சொல்லுகிறீர்கள். கொரானை எழுதியுள்ள லிபியில் எழுதப்படுவதால் உருது மொழியை முஸல்மான்களுடைய மொழியென்று தாங்கள் வெளிப்படையாகவே குறிப்பிட்டு வருகிறீர்கள்.

விரும்பினால், முஸல்மான்கள் அதைப் பாதுகாத்துக்கொள்ளட்டும் என்றுகூடச் சொல்லி இருக்கிறீர்கள். மறுபுறத்தில், அனேக ஹிந்தி சபைகளின் ஆண்டு விழாக்களில் தாங்கள் தலைமை தாங்கி இருக்கிறீர்கள்; ஹிந்திக்காகப் பரிந்துபேசி இருக்கிறீர்கள். அதற்காக லட்சக்கணக்கில் பணமும் வசூலித்துக் கொடுத்திருக்கிறீர்கள். உருதுவைப் பரப்பும் கூட்டங்களில் எதற்காவது, தாங்கள் இதுவரைத் தலைமை வகித்தது உண்டா? அல்லது, இப்போதாவது தலைமை தாங்க ஒப்புக்கொள்வீர்களா? உருது மொழியின் முன்னேற்றத்திற்காக, தாங்கள், இதுவரை ஒரு தம்படியாவது வசூலித்துக் கொடுத்தது உண்டா?

"முஸ்லிம்கள் பாரசீகச் சொற்களை விலக்கிவிட்டும், ஹிந்துக்கள் சம்ஸ்கிருதச் சொற்களை விலக்கிவிட்டும் எழுதிவந்தால், அதன் பயனாய் ஹிந்துஸ்தானி தோன்றிவிடும் என்று, காது புளித்துப்போகும்படி காங்கிரஸ்காரர்கள் சொல்லிவருவதை நான் கேட்டிருக்கிறேன்.

"மகாத்மாஜி, தாங்களே சிறந்த ஒரு எழுத்தாளர். ஒரு மொழியில் எழுதி எழுதிப் பழகிப்போனவர்களுக்கு, ஒருவிதமான நடைப்போக்கு அபிவிருத்தி அடைந்துவிடும். அவர்கள் எழுதுகிற மொழியில் சம்ஸ்கிருதச் சொற்களும், பாரசீகச் சொற்களும் விரவிவருமானால், அவற்றை விலக்கிவிட அவர்களால் முடியாது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த நடைப்போக்கை அவர்கள் கையாளுவதினாலேதான், அவர்களுக்குத் தனிமதிப்பு உண்டாயிற்று எனலாம். எனவே, தங்களுடைய அறிவுரை சிறிதும் நடைமுறைக்குப் பொருந்திவராது.

"இருந்தாலும் ஒரு வழி இருக்கிறது. உயர்தரப் பள்ளிவரை ஒரு மாகாணத்தில் - உதாரணமாக, ஐ. மா. தில். - ஹிந்தி, உருது இரண்டையும் கட்டாயப் பாடமாக ஆக்குங்கள். இப்படி ஒரு ஏற்பாடு செய்து, இரண்டு மொழிகளையும் ஒரு மாகாணத்தில் கட்டாயப் பாடமாகச் சொல்லிக்கொடுத்துவந்தால், ஐம்பது ஆண்டுகளுக்கிடையில், பொது மொழி ஒன்று, தோன்றினாலும் தோன்றக்கூடும். இதனால் செயற்கையாக நம்மிடைவந்து புகுந்துகொண்ட மொழி நம்மை விட்டு மறைந்துவிடும், இயற்கையான நமது சொந்த மொழி நம்முடன் கூடவே நிலைத்து யிருக்கும். இரண்டு மொழிகளிலும் நாம் கல்வி கற்று வருவோமானால், எந்த மொழி, அதிகமாக அபிவிருத்தி யடைந்தும், அழகாகவும், கவர்ச்சி பொருந்தியதாகவும், சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கிறதோ, அந்த மொழியின் மூலமேதான் நமது சிந்தனைகள் யாவும் தாமே நிகழ ஆரம்பிக்கும். இது வெளிப்படையான ஒரு உண்மை. இப்படிப் படித்துவரத் தொடங்கினால் எல்லாப் பாடங்களையும் தாய் மொழிமூலமே போதிக்க வேண்டும் என்பது, சண்டை சச்சரவிற்கு இடமின்றி எளிதாகிவிடுவது

டன், சமூக வாழ்வில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் காணப்படும் வேற்றுமையைப் போக்கி, எவ்வளவோ தூரம் ஒற்றுமைப்படுத்திவிடும். ஒருவருடைய இலக்கியங்களை மற்றவர் படிப்பதனால் ஒருவருடைய லட்சியங்களையும் நம்பிக்கைகளையும் தெரிந்துகொள்ளவும், பரிவுகாட்டவும் வழி ஏற்படும். அதன்பிறகு தான் - அதாவது ஹிந்தியும் உருதுவும் நன்ருகக் கலந்த பிறகுதான் - ஹிந்துஸ்தானி மொழி தோன்ற முடியும். அப்போது வேணுமானல், அதை ஹிந்துஸ்தானி என்ற பெயரால் அழைக்கலாம். இரண்டு மொழிகளை அறிந்துகொண்டதின் பயனுய்த் தோன்றிய மொழியே, இயல்பான ஹிந்துஸ்தானி மொழியாக இருக்க முடியும்.

"மகாத்மாஜி, பொது மொழி ஒன்று நமது நாட்டிற்கு அவசியம் வேண்டும் என்று தாங்கள் மனப்பூர்வமாக விரும்புவீர்களாயின், நான் சொல்லியுள்ள இந்த விஷயத்தை ஏற்றுக்கொள்வதோடு, அதைத் தேசமும் ஏற்றுக்கொள்ளும்படி சிபார்சு செய்வீர்கள் என்பது திண்ணம். ஆனல், தாங்கள் இவ்விதம் செய்யமாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஏனெனில், தாங்கள் இதுவரை ஹிந்தி மொழிக்குத்தான் பரிந்துபேசி வந்திருக்கிறீர்கள். ஹிந்தியைத் தேசத்தில் திணிப்பதற்கும் அரும்பாடுபட்டு வந்திருக்கிறீர்கள். ஹிந்தி மொழியையும் உருது மொழியையும் கட்டாயப் பாடமாக்கினல், ஹிந்தி மொழியை உருது மொழி துரத்தியடித்துவிடும் என்று தெரிந்து கொண்டே, தாங்கள் இவ்விதம் நடந்துகொண்டு வருகிறீர்கள். ஏனெனில், ஹிந்தியைவிட உருதுதான் செம்மையானது; நாகரிகமானது; அழகானது; எதையும் தெரிவிக்கும் ஆற்றல் உள்ளது. ஆனல், நான் சொல்லுகிற முறை இரண்டு மொழிகளுக்குமே சமமான சந்தர்ப்பத்தை அளிக்கிற தெனலாம். இந்த நாட்டில் இயல்பாக இருந்துவந்த மொழி ஹிந்திதான் என்ற எண்ணம் தங்களுக்கு இருக்குமாயின், உருதுவை ஹிந்தி மொழியினல் துரத்தி யடித்துவிட முடியு மென்று தாங்கள் உறுதியாக நம்பலாம். இரண்டு மொழிகளையும் பொது மொழியாக்கக்கூடிய ஆற்றல் தங்களுக்கு இல்லை என்பதாகச் சென்ற ஆண்டில் எனக்கு எழுதினீர்கள். இந்தவிதமான சாக்குப்போக்குகளைச் சொல்லித் தட்டிக்கழிக்க முயல்வது சரியன்று. நான் சொல்லிய ஆலோசனையைத் தேசத்திற்கு சிபார்சு செய்வதற்குத் தாங்கள் முயற்சி எடுத்துக்கொள்வீர்களாயின், அதனல் பலன் ஏற்படாமல் போகாது."

எனக்கு வந்துள்ள இக்கடிதம் கையொப்பத்துடன் கூடியதுதான். கடிதம் எழுதியவரின் பெயரை நான் தெரிவிக்கவில்லை. இனம் யார் என்பது எதிலும் முக்கிய மன்று. இந்தக் கடிதம் எழுதியிருப்பவர் என்ன குறிப்பிட்டுள்ளாரோ,

அதே மாதிரிதான் அனேக முஸல்மான்களும் நம்புகிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் எவ்வளவுதான் மறுத்துரைத்தாலும், குறைகூறுவது நின்றபாடில்லை.

23உ யன்று வெளிவந்த ஹரிஜன் பத்திரிகையில், நான் எழுதியுள்ள கட்டுரையை இந்த நிருபர் படித்துப்பார்ப்பாராக. அது அவருடைய மனதைத் திருப்திப்படுத்தும் என்பதே எனது நம்பிக்கை.

இன்று அகில இந்திய மொழி ஒன்று வேண்டுமென நினைக்கிறவர்கள், ஹிந்தி உருது இரண்டையுமே கற்க வேண்டுமென்று இந்த நிருபர் சொல்வதை நான் முற்றும் ஒப்புக்கொள்கிறேன். அப்படிப் படித்துக்கொண்டு வருவார்களாயின், இறுதியில் அதுவே பொது மொழியாக ஆகிவிடும். எந்த நடைப்போக்கு, பொதுஜனங்களிடைச் செல்வாக்குப் பெற்றுவிடுகிறதோ, எந்த மொழியைப் பொதுஜனங்களால் அறிந்துகொள்ள முடியுமோ, ஹிந்துக்களாயினும் சரி முஸ்லிம்களாயினும் சரி, அந்த மொழிதான் அகில இந்தியப் பொது மொழியாக இருக்க முடியும். நான் சொல்லுகிற இந்த ஆலோசனையை எல்லோரும் பொதுவாக ஏற்றுக்கொள்வார்களாயின், மொழிப் பிரசினை அரசியல் பிரசினையாக மாறிக்கொண்டு வருவது நின்றுவிடும்; அல்லது, திருப்திகரமான முடிவாவது ஏற்படும்.

"ஹிந்தியைக் காட்டிலும் உருது மொழிதான் செம்மையானது; நாகரிகமானது; அழகானது; எதையும் தெரிவிக்கும் ஆற்றலுள்ளது." என்று இந்த நிருபர் சொல்லுகிறார். இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நிருபர் கூறியுள்ள குணங்கள் அனைத்தும் ஒரு மொழிக்கு மட்டுமே உள்ளீடாக அமைந்திருப்பதில்லை. பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் என்ன சொல்லுகிறார்களோ, அவைதாம் மொழியாக வடிவுகொள்கிறது. ஆங்கிலேயர்கள் எழுதியது, பேசியதைத் தவிர, வேறு தனியான மதிப்பு ஆங்கில மொழிக்கு இல்லை. வேறுவிதமாகச் சொன்னால், மொழி என்பது மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கருவியாகும். எனவே, சிருஷ்டித்தவனுடைய இயல்புதான் மொழியில்

படிந்து கிடக்கும். ஒவ்வொரு மொழியும் எல்லையற்ற அள வுக்கு வளர்ச்சியடைய இடமுண்டு. பங்கிம் சந்திரரும் ரவீந்திரநாத் தாகூரும் கையாண்ட நடைப்போக்கே இன்று நவீன வங்க மொழியாக விளங்குகிறது. ஹிந்தி பேசுகிறவர்களைக் காட்டிலும் உருது மொழி பேசுகிறவர் கள் திறமைசாலிகளாய் இருக்கிறார்கள்போலும். அத னாலேதான், உருது மொழி, ஹிந்தி மொழியைவிடச் சிறப் புடன் விளங்குகிறது. இது உண்மையே. நான் இந்த இரண்டு மொழிகளையும் மொழியாராய்ச்சியாளன் என்ற முறையில் ஆராயாதபடியால், எனது கருத்துக்களைச் சொல்வதற்கில்லை. பொதுஜன வேலைக்கு வேண்டிய அளவு, நான் இந்த இரண்டு மொழிகளையும் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

மராத்தி மொழியிலிருந்து வங்க மொழி வேறுபட்டிருப் பதைப் போல, ஹிந்தியிலிருந்து உருது மொழி வேறுபட்டு இருக்கிறதா? உருது மொழி ஹிந்தியிலிருந்து தோன்றியது தானே? புதிய வார்த்தைகள் தேவைப்பட்டால் சம்ஸ்கிரு-தத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமல், அராபிய, பாரசீக மொழிகளிலிருந்து எடுத்துக்கொள்ளும் நோக்கோடும், பாரசீக லிபியில் எழுதும் நோக்கோடும் தோன்றியதில்லையா? இரண்டு வகுப்பாரிடையும் மனக்கசப்பு இல்லா விட்டால், இந்தவிதமான போக்கை நாம் வரவேற்க வேண்டியதுதான். பூசல்கள் யாவும் செத்தொழிந்து போனதும் - ஒருநாள் போவது நிச்சயம் - நம்முடைய சந்ததியார்கள் நாம் சண்டையிட்டுக்கொண்டதைத் பார்த் துச் சிரிப்பார்கள்; நமது பொது மொழியான ஹிந்துஸ்-தானியைப்பற்றி பெருமைப்படவும் செய்வார்கள். அப் போது, ஹிந்துஸ்தானி மொழி, பல பாஷைகளிலிருந்தும் வந்துள்ள சொற்களைத் தன்னகத்தே கொண்டதாயும், எழுத்தாளர், பேச்சாளர் இவர்களின் தரத்திற்கும் தகுதிக் கும் சுவைக்கும் ஏற்றவாறும் விளங்கிக்கொண்டிருக்கும்.

இந்த நிருபர் தவறாக ஒரு எண்ணத்தை மனதில் பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். அதை நான் திருத்த விரும்பு

கிறேன். கடைசி முடிவில், மாகாண மொழிகள் அனைத்தை யும் ஹிந்துஸ்தானி மொழி துரத்தி யடித்துவிடும் என்று இந்த நிருபர் எண்ணுகிருர். நானோ, அல்லது அகில இந்திய மொழி ஒன்று வேணும் என்று நினைக்கிறவர்களோ இந்த விதமாகக் கனவு காணவில்லை. படித்த வகுப்பாரிடை, ஏறக்குறைய ஆங்கிலம் பொது மொழியாக விளங்கிவரு கிறது; இதனுல் அவர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இடையில் தொடர்பற்ற நிலை இருந்துகொண் டிருக்கிறது. எனவே, ஆங்கில மொழியை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் ஹிந்துஸ்தானியைப் புகுத்தவே நானும் மற்றவர்களும் கனவு கண்டுகொண் டிருக்கிருேம். தற்கொலைக்கு ஒப்-பான இந்த விபரீதத்தைப் போக்குவதற்கு, இந்தியாவில் பெரும்பாலான மக்கள் பேசுகிற மொழியையே, பொது மொழியாக ஆக்கவேண்டும்; மாகாணத் தொடர்புகளுக் கும் அந்த மொழியையே உபயோகிக்க வேண்டும். எனவே, ஹிந்தி உருது இரண்டு மொழிகளுக் கிடையில் போட்டி இல்லை. ஹிந்தி மொழி உருது மொழி ஆகிய இரண்டும் ஒரு புறத்திலும் ஆங்கில மொழி மற்ருெரு புறத்திலும் இருந்து கொண்டு இப்போது போட்டி நடைபெறுகிறது. இரண்டு சகோதர மொழிகளுக் கிடையில் இப்பொழுது, தற்காலிக மாகச் சச்சரவு இருந்து வருகிறது. இப்பொழுது அது அவ்வளவு முக்கியமான தன்று. பெரிய பெரிய இடையூறு களை யெல்லாம் சமாளித்துக்கொண்டு, மேலே சொல்லிய லட்சியம் கைகூடிவர, இந்த இரு சகோதர மொழிகளும் அரும்பாடுபட்டுக்கொண்டு வருகின்றன. நாம் மேலே சொன்ன முடிவே, இதனுல் ஏற்படப் போகும் பலன்.

இந்த நிருபர், ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்திடம் நான் கொண்டுள்ள தொடர்புக்காக என்னோடு சண்டை போடுகிருர். அந்த ஸ்தாபனத்தோடு தொடர்பு கொண் டிருப்பதற்காக, நான் பெருமை யடைகிறேன். அது செய் துள்ள சேவையை எண்ணிப்பார்க்கும்போது, அதனிடம் கொண்டுள்ள தொடர்புக்காக நான் வெட்கப்பட வேண்டிய அவசியமே இல்லை. ஹிந்தி என்ற பெயர் இரு வகுப்பின

ருக்கும் பொதுவான பெயர். இரு தரப்பினரும் ஹிந்தி மொழியில் எழுதி, அதை வளர்த்திருக்கிறார்கள். எனக்கும் சம்மேளனத்திற்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதை இந்த நிருபர் அறிந்துகொள்ள வில்லை என்றே தோன்றுகிறது. என்னுடைய தூண்டுதலின் பேரில்தான், சம்மேளனத்தார், ஹிந்தி என்ற சொல்லில் உருது என்பதும் அடங்கி இருக்கிறது என்ற வியாக்கியானத்தை, புத்திசாலித்தனமாக ஏற்றுக்கொண்டார்கள். அந்த ஸ்தாபனத்தினுடைய பெருந்தன்மை, தேசபற்று ஆகியவற்றுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்று நான் தயங்காது சொல்வேன். உருது அஞ்சுமானில், நான் சேர முயற்சித்ததுண்டா என்று இந்த நிருபர் கேட்கிறார். இந்தவிதமான ஸ்தாபனங்களில் சேரும்படியாக இதுவரை யாருமே என்னை அழைத்ததில்லை. அழைத்திருப்பின், அழைத்தவர்களை, ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தார் செய்ததைப் போன்று, செய்ய முன்வரும்படி கேட்டிருப்பேன். உருது அபிமானிகளை, தேவநாகரியில் எழுதப்பெறும் ஹிந்தியும் உருதுதான் என்று வியாக்கியானம் செய்யும்படி சொல்லியிருப்பேன். இவ்விதமே கூட்டத்திற்கு வந்திருப்பவர்களைக் கேட்பேன் என்பதையும், என்னை அழைத்தவர்களிடம் தெரிவித்து இருப்பேன். இத்தகைய பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட, முதற் தேதி யன்று வெளிவந்த கட்டுரையில், இரண்டு லிபியில் மூலமாகவும் ஹிந்தியையும் உருதுவையும் சேர்த்துப் படிக்கும் பொருட்டாய், ஒரு சங்கம் நிறுவ வேண்டும் என்பதை, ஏற்கனவே நான் குறிப்பாகச்சொல்லி இருக்கிறேன். அதில் சேர்ந்துள்ள அங்கத்தினர்கள் இரண்டு லிபிகளின்மூலமும் ஹிந்தி, உருது மொழிகளைப் படிப்பதற்குப் பிரசாரம் செய்ய வேண்டும். இதன் பயனாக, இயல்பான முறையில் இரண்டு பாஷைகளுக்கும் இடையில் கலப்பு ஏற்பட்டு, அதனால் விளைவதே ஹிந்துஸ்தானி என்ற நம்பிக்கையோடு வேலை செய்ய வேண்டும். மாகாணத் தொடர்பு

களுக்கு, இந்த ஹிந்துஸ்தானி மொழியே பொது மொழியாக விளங்கிவரும். அப்போது கணக்குப் போட்டுப் பார்த்தால், ஹிந்துஸ்தானி = ஹிந்தி + உருது; ஆனால், ஹிந்துஸ்தானி = ஹிந்தி = உருது என்ற நிலை ஏற்படும்.

# ரோமன் லிபி

*"இந்தியாவில், ரோமன் லிபிக்கு ஒரு நிலையான ஸ்தானம் கிடைத்துவிட்டது. ஆயினும், இந்திய லிபிகளின் ஸ்தானத்தை அது கவர்ந்துகொள்ள முடியாது என்பது திண்ணம்."*

**வினா:** ஆங்கில மொழிமீது தங்களுக்குள்ள வெறுப்பாலேயே, தாங்கள் ரோமன் லிபியை வெறுத்துப் பேசுகிறீர்கள். இல்லாவிட்டால், தேவநாகரி லிபி, பாரசீக லிபிகளுக்குப் பரிந்துபேசுவதை விட்டுவிட்டு, எவ்விதத் தயக்கமுமின்றித் தாங்கள் ரோமன் லிபிக்குப் பரிந்து பேசுவீர்கள்; இல்லையா?

**விடை:** நீங்கள் சொல்வது தவறு. ஆங்கில மொழி மீதோ, ரோமன் லிபிமீதோ எனக்கு வெறுப்பு இல்லை. உரிமையில்லாத இடத்தை ஆக்கிரமித்துக்கொள்ளுகிற யாரையும், எதையும் நான் எதிர்க்கிறேன் என்பது உண்மைதான். இந்தியாவில், ரோமன் லிபிக்கு ஒரு நிலையான ஸ்தானம் கிடைத்துவிட்டது. ஆயினும், இந்திய லிபிகளின் ஸ்தானத்தை அது கவர்ந்துகொள்ள முடியாது என்பது திண்ணம். எனக்கு அதிகார மிருக்குமாயின், மாகாண மொழிகளுக்கெல்லாம் தேவநாகரி லிபியையே கையாளும் படியும், அகில இந்திய மொழிக்குத் தேவநாகரி லிபியையே கையாளும்படியும் செய்திருப்பேன். ஹிந்துக்களுக்குச் சம்ஸ்கிருத லிபி அவசியமா யிருப்பதைப்போல, முஸ்லிம்களுக்கு அராபி லிபி அவசியமாய் இருக்கிறது. ஏனென்றால், பாரசீக லிபி, அராபி லிபியிலிருந்தே தோன்றியது. இந்த உண்மையை மனதில்கொண்டு, லிபிகளின் தரத்தை ஆராயாது, சமாதானம் செய்யும் முறையில், ரோமன் லிபியைச் சிபார்சு செய்கிறீர்கள். மேலைநாட்டு மொழிகள் எல்லாம் ரோமன் லிபியிலேயே எழுதப்படுகின்றன என்பதைத் தவிர, வேறு சிறப்பு அந்த லிபிக்குக் கிடையாது. மாகாண மொழிகளில் பெரும்பாலானவை தேவ நாகரி லிபியிலிருந்து தோன்றியவை. மேலும், நமக்குத் தெரிந்த லிபிகளுக்குள்ளே தேவநாகரி லிபி பூர்ணத்துவம் வாய்ந்ததாகும். வடக்கே வாழும் கோடிக்கணக்கான ஹிந்துக்

களும் முஸ்லிம்களும் பாரசீக லிபியில் எழுதிவருகிறார்கள். இந்த இரண்டு லிபிகளையும், ரோமன் லிபி வந்து விரட்டி விடக் கூடாது. லிபிகளின் காரணமாகவே, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பிரிந்து நிற்கிறார்கள் என்றால், அதற்காகப் பூரணத்துவமில்லாத ரோமன் லிபியைக் கொண்டுவந்து, மத்தியஸ்தம் செய்வது சரியன்று. அதனால், அவர்களை ஒன்றுசேர்த்துவிட முடியுமா, என்ன? பரஸ்பர அன்பு இருதரப்பிலும் ஏற்பட்டுவிட்டால், சிரமப்பட்டாகிலும், இருவருமே இரண்டு லிபிகளையும் கற்றுக்கொள்ளத் தொடங்கிவிடுவார்கள். ரோமன் லிபிக்கு விசேஷமான ஒரு உன்னத ஸ்தானம் இருக்கவே இருக்கிறது. அதற்கு மேலான ஒரு ஸ்தானத்தை இன்னும் அடைய வேண்டிய அவசியம் ரோமன் லிபிக்கு இல்லை.

# தேசிய மொழி பற்றிய வினாக்கள்

*"இந்தியா ஒரு சமுதாயம் என்பது உண்மையானால், அதற்குத் தேசிய மொழி ஒன்று இருக்கவேண்டியது அவசியமே; ரோமன் லிபியில் எழுதப்படும் ஆங்கில பாஷை சர்வதேச மொழியாக இருப்பது பொருத்தமானதே. ஆனால், அதனுடைய லிபி, தேசிய பாஷையின் லிபியாக அமைய முடியாது."*

1. வினா: *பாரசீக லிபியின் பிறப்பிடம் இந்தியா வன்று. பிரிட்டிஷாரோடு ரோமன் லிபி வந்ததுபோல, மொகலாயரோடு பாரசீக லிபி இந் நாட்டிற்கு வந்தது. தாங்கள் ரோமன் லிபிக்குப் பரிந்து பேசுவதாகத் தெரியவில்லை. அதைத் தேசிய மொழிக்கு உபயோகப் படுத்தக் கூடாது என்கிறீர்கள். அப்படி இருக்கும்போது, பாரசீக லிபிக்கு மட்டும் ஏன் பரிந்துபேசுகிறீர்கள்?*

விடை: *பாரசீக லிபி இந்தியாவைத் தனது இருப்பிடமாகக்கொண்டதுபோல, ரோமன் லிபியும் இந்தியாவைத் தனது இருப்பிடமாகக்கொண் டிருப்பின், தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ரோமன் லிபியை அறிந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பம். ஆங்கிலம் படித்துள்ளவர்களுக்கு மட்டுமே ரோமன் லிபி தெரியும். ஆனால், பாரசீக லிபியோ அப்படியில்லை. கோடிக் கணக்கான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அந்த லிபியை அறிவர். ரோமன் லிபியை அறிந்தவர்கள் எவ்வளவு பேர், பாரசீக லிபியை அறிந்தவர்கள் எவ்வளவு பேர் என்பதைத் தாங்கள் கணக்கிட முயன்று பாருங்கள். அப்போது தெரியும் இதன் உண்மை.*

2. வினா: *ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை உத்தேசித்தே, உருது லிபி கற்க வேண்டு மென்று தாங்கள் பரிந்துபேசுகிறீர்கள். பெரும்பாலான முஸ்லிம்களுக்கு உருது தெரியாது என்பதைத் தயவுசெய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். சொந்த மாகாண மொழி மட்டுமே அவர்களுக்கு நன்கு பேசவரும். சாதாரண வழக்கிலுள்ள மாகாணச் சொற்கள் அடங்கிய தேசிய பாஷையைத்தான் அவர்களால் மிக எளிதாய்ப் புரிந்துகொள்ள முடியும். வட இந்திய மொழிகள் அனைத்துமே சம்ஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியவை யாகும். அதனாலே தான், அவற்றினிடையே அதிக ஒற்றுமை நிலவுவதைக் காண்கிறோம்.*

*தென் இந்திய மொழிகளிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் நிறையக் கலந்து விட்டன. அப்படியிருக்கும்போது, அராபிய, பாரசீகச் சொற்கள் அதிகமாகக் கலந்துள்ள, நமக்குப் பரிச்சயமில்லாத உருது மொழியைத் தாங்கள் ஏன் சிபார்சு செய்கிறீர்கள்?*

விடை: நீங்கள் சொல்வதில் வேகம் இருக்கிறது. ஆனால், இதை இன்னும் சிறிது ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை மனதில் கொண்டே, நான் பாரசீக லிபியைக் கற்க வேண்டுமென்கிறேன் என்று சொல்லுகிறீர்கள். இதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஹிந்தி மொழி, உருது மொழி இரண்டுக்கும் இடையில், எப்படி நீண்ட காலமாக மனப்பூசல் இருந்து வருகிறதோ, அதேபோல, இந்த இரண்டு லிபிகளுக்கிடையும் பூசல் இருந்து வருகிறது. இன்று, இந்தப் பூசல் மனப்பாங்கு, கொடிய ரூபம் பெற்றுக் கோரதாண்டவமாடுகிறது. 1935-ம் ஆண்டு, இந்தூரில் கூடிய, ஹிந்தி சாஹித்ய சம்மேளனம், பாரசீக லிபிக்கு ஒரு ஸ்தானத்தைக் கொடுத்து, ஹிந்தி என்ற சொல்லுக்கு வியாக்கியானம் செய்தது. 1925-ம் ஆண்டில், தேசிய மொழியை ஹிந்துஸ்தானி என்ற பெயரால் காங்கிரஸ் மகாசபை அழைக்க ஆரம்பித்தது. இரண்டு லிபிகள் மூலமாகவும் தேசிய மொழியை எழுதலாம் என்று அனுமதித்தது. இவ்வாறாக ஹிந்தி, உருது ஆகிய இரண்டும் சேர்ந்து தேசிய மொழியாகக் கருதப்பட்டது. இந்தத் தீர்மானங்கள் எல்லாம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டே செய்யப்பட்டன. அவற்றின் தாரதம்மியத்தைப்பற்றி, நான் இங்கு ஆராயவில்லை. நடைமுறையைப்பற்றியே விளக்கிச்சொன்னேன். தர்க்கரீதியில் ஆராய்ந்தால், இறுதியில் ஏற்படக்கூடிய முடிவு இதுதான். நமது தேசிய மொழியை நன்கு அபிவிருத்தி செய்ய விரும்பினால், இரண்டு லிபிகளுக்கும் சம அந்தஸ்தைக்கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். கடைசியில், எந்த லிபியை மக்கள் அதிகமாக விரும்பிக் கையாளுகிறார்களோ, அந்த லிபிதான் நிலைத்துநிற்கப் போகிறது; எங்கும் பரவப்போகிறது.

மாகாண மொழிகள் சம்ஸ்கிருத மொழியோடு மிகவும் தொடர்புகொண்டவைவாய் இருக்கின்றன. லட்சக் கணக்கான முஸ்லிம்களுக்குத் தங்கள் மாகாண மொழிதான் பேச வரும் என்பது உண்மையே. எனவே, உருது, பாரசீக லிபிகளைக் காட்டிலும், தேவநாகரி லிபிமூலம் ஹிந்தி கற்பது அவர்களுக்கு எளிதான காரியம்தான். என்னுடைய திட்டம், இதற்குக் குறுக்கே தடையாக நிற்காது. ஆனாலும், பாரசீக லிபியைக் கற்றுக்கொள்வதனால், லாபமுண்டு. தாங்கள் அதை ஒரு வேண்டாச்சுமையாக எண்ணிச் சிரமப்படுகிறீர்கள். இது சுமையா, அல்லது, இதனால் லாபமுண்டா என்பது, கற்றுக்கொள்கிறவரின் மன இயல்பைப் பொருத்தது. நாட்டுப்பற்று நிறைந்துள்ளவர்களுக்கு, இது ஒரு சுமையாகவே தோன்றாது. என்னுடைய திட்டத்தில் கட்டாயம் எதுவும் கிடையாது. மற்றொரு லிபியையும் கற்றுக்கொள்வதை ஒரு லாபமாகக் கருதுகிறவர்கள் தேவநாகரி லிபியையோ, அல்லது, பாரசீக லிபியையோ கற்றுக்கொள்ளவே செய்வார்கள்.

**3. வினா:** இந்தியாவிலுள்ள மக்களில் பெரும்பாலோருக்குத் தேவநாகரி லிபி தெரியும். பஞ்சாபியர், சிந்தியர், எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்தவர் ஆகியோருக்கு இந்த லிபி கற்றுக்கொள்வது எளிதாய் இராதா?

விடை: இதற்குப் பதில் மேலேகூறியுள்ள பதிலில் அடங்கி இருக்கிறது. எல்லைப்புற மாகாண வாசிகளும் பிறரும் தேவநாகரி லிபியைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியந்தான்.

**4. வினா:** உண்மையில், நாம், தேசிய பாஷை வேண்டுமென்பது பேச்சுவழக்கிற்கே யன்றி, இலக்கியத்திற்காக வன்று. எனவே, லிபி ஒரு முக்கியமான விஷய மன்று; லிபி இரண்டாம் பட்சமே. தாய்மொழி மூலமாகவே, தேசிய மொழியை எளிதாகக் கற்றுக்கொண்டு விடலாம். அப்படிச் செய்வதில் என்ன சங்கடம் இருக்கிறது?

விடை: தாங்கள் சொல்வது முற்றும் சரி. தாய் மொழி மூலமாக, தேசிய மொழியைக் கற்றுக்கொள்வது எளிதான

காரியந்தான். எனக்குத் தெரிந்தவரை, தென் இந்தியாவில், இந்த வழியை அனுஷ்டிப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால், அதை முறைப்படி அனுஷ்டிக்கவில்லை போலும். இரு லிபிகளைக் கற்றுக்கொள்வதைத் தாங்கள் சுமையாகக் கருதுகிறீர்கள். நான் அவ்வாறு கருதவில்லை. தாங்கள் அஞ்சுவதுபோல், அது அவ்வளவு சிரமமான காரியமன்று. தாய்மொழிமூலமாகத் தேசிய மொழியைக் கற்றுக்கொள்வதை நான் ஒருபோதும் எதிர்க்கமாட்டேன். தேசிய மொழியைக் கற்றுக்கொள்வதில் ஆர்வமிருக்குமானால், எல்லா முறைகளையுமே கையாண்டு பார்க்கலாம்.

**5. வினா :** *சிலருக்காவது ஹிந்தி தெரிந்திராவிட்டால், ஹிந்தி பாஷை தெரியாத மாகாணங்களோடு உண்மையான தொடர்பு ஏற்பட முடியாதென்றால், தேச ஊழியர்கள் மட்டும் ஹிந்தி கற்றுக் கொண்டால் போதாதா? எல்லோருமே ஹிந்தி கற்கவேண்டிய கட்டாயம் என்ன?*

**விடை :** எல்லோருமே ஹிந்தி கற்றுகவேண்டுமென்ற பிரசினை எழவே இல்லை. சரியாகச் சொன்னால், எல்லாருமே ஹிந்தியைக் கற்றுக்கொள்ளமாட்டார்கள். தொண்டு செய்வதில் பிரியமுள்ளவர்களுக்கும், பிரயாணம் செய்பவர்களுக்கும் ஹிந்தி அவசியம் தேவைப்படும். ஹிந்தி, உருது ஆகிய இரு மொழிகளையும், தேவநாகரி, உருது ஆகிய இரு லிபிகளிலும் கற்றுக்கொள்வதனால், தொண்டு செய்ய விரும்புகிறவர்களுக்குத் திறமை அதிகரிக்கும். நான் சொல்வதைத் தாங்கள் ஒப்புக்கொண்டால், தங்களுக்கிருக்கும் சந்தேகமும் எதிர்ப்பு உணர்ச்சியும் மறைந்துவிடும்.

**6. வினா :** *இன்று தேசிய மொழியை இரண்டு லிபிகளிலும் எழுதிவருகிறார்கள். கற்க விரும்புகிறவர்களுக்கு, எந்த லிபியில் விருப்பம் உண்டோ, அந்த லிபிமூலம் அவர்கள் கற்றுக்கொள்ளலாம். அப்படியிருக்கும்போது, எதற்காக, இரண்டு லிபிகளையும் கற்றுக் கொள்ளும்படி வற்புறுத்த வேண்டும்?*

**விடை :**—நான் எவ்வளவுதான் வற்புறுத்தியபோதிலும், இரண்டு லிபிகளையும் கற்றுக்கொள்வதால் நலனுண்டு என

நினைக்கிறவர்கள் மட்டும்தான், இரண்டு லிபிகளையும் கற்றுக் கொள்வார்கள். அதனால் நிச்சயமாக லாபம் உண்டு என்பதையும் அவர்கள் உணர்வார்கள். எனக்குத் தெரிந்தவரை, ஒரு லிபியையும், ஒரு மொழியையும் கற்றுக்கொள்கிறவர்களுக்கு அரைகுறை அறிவுதான் இருக்கும். என்னிடமிருந்து சரியான நற்சாட்சிப் பத்திரம் பெற விரும்புகிறவர்களுக்கு, இரண்டு லிபிகளும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இவ்விதம் இரண்டு லிபிகளையும் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் இந்த தேசத்தில் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை, நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என எண்ணுகிறேன். இந்த எண்ணிக்கை அதிகரிக்காதவரை, ஹிந்தியும் உருதுவும் சரியான முறையில், எப்போதுமே ஒன்றுசேர முடியாது. காங்கிரஸின் லட்சியத்திற்கேற்ற ஹிந்துஸ்தானியும் ஒருபோதும் கைகூடி வராது. ஹிந்தி பேசுகிற மாகாணங்களில் வசிக்கும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொது மொழி ஒன்று வேண்டியது அவசியமாகும்; ஆர்வத்தோடு வரவேற்கத் தக்கது மாகும். இந்த நிலை கைகூடிவர வேண்டுமென்று அனேகர் ஆசைப் படுக்கொண்டிருக்கிறோம். எப்படியாவது ஒரு நாள் அந்தப் பொது மொழி வந்தே தீரும் என்பது நிச்சயம்.

7. வினு: ஹிந்தி மொழி பேசப்படாத மகாணங்களில் வாழும் மக்களை, ஒரே சமயத்தில், இரண்டு லிபிகள் மூலமாகவும் தேசிய பாஷையைக் கற்றுக்கொள்ளும்படி சொல்வது, தாங்கமாட்டாத ஒரு சுமையாய் இராதா? அந்த முயற்சி பயனற்றதாயும் போய்விடாதா? முதலில் ஒரு லிபியையும், பிறகு மறெருரு லிபியையும் கற்றுக்கொள்வதுதான் எளிதாக இருக்கும். இல்லையா?

விடை:—அனுபவத்தினல்தான் இந்தக் கேள்விக்குச் சரியான பதில் சொல்ல முடியும். இரு லிபிகளிலும் பரிச்சயமில்லாதவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு லிபிகளையும் கற்க மாட்டார்கள். ஒரு லிபியைத் திறமையாகக் கற்றுக் கொண்ட பின்னரே, மறு லிபியைக் கற்க ஆரம்பிப்பார்கள். ஆரம்ப காலத்தில், பாடப் புத்தகங்களில் உபயோகிக்

கப்படும் சொற்கள்தாம், பெரும்பாலும் நடைமுறை வழக்கில் இருந்துவரும். எனது திட்டத்தை, மிகவும் உபயோககரமான ஒரு முக்கிய பரிசோதனையாகவே நான் கருதுகிறேன். இந்தத் திட்டத்தை சரியானபடி அனுஷ்டித்தால், தேசத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டாகி, காங்கிரஸ்த் தீர்மானத்தை நடைமுறையில் கொணர்வதற்கு, பெரிய காரியத்தைச் செய்தவர்கள் ஆவோம். தேசபக்தியுள்ள லட்சக்கணக்கான பெண்களும் ஆண்களும் இதில் ஈடுபட்டு உழைப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

8. வினா: எந்த பாஷைக்கும் தவிர்க்கமுடியாத சில மாற்றங்கள் ஏற்பட்டே தீரும்: அன்னிய மொழிச் சொற்கள் பாஷையில் வந்து கலக்கும்போது, அவற்றை ஒதுக்கித்தள்ள முடியாது. பரம்பரையாக, தேவநாகரி லிபிதான் எல்லாக் காலங்களிலும் இருந்துவந்திருக்கிறது. மொகலாயர்களின் ஆட்சியின்போதே, பாரசீக லிபி வந்ததெனலாம். குஜராத்தி, மராத்தி முதலிய பாஷைகள், அராபிய, பாரசீக, ஆங்கிலச் சொற்களை தமதாக்கிக்கொண்டபோதிலும், தங்கள் தங்கள் சொந்த லிபிகளை அவை ஒதுக்கித்தள்ளவில்லை. அப்படியிருக்கும்போது, தேவநாகரி லிபியையே நாம் வைத்துக் கொள்ளலாகாதா?

விடை: பரம்பரையாக வந்துள்ள எதையும் விட்டுக்கொடுக்கிற விஷயம் இதில் இல்லை. புதிதாகச் சேர்ப்பது, அல்லது ஏற்கனவே உள்ளதைச் சீர்திருத்துவது, இவைதாம் இப்போதுள்ள பிரசினை. எனக்குச் சம்ஸ்கிருதம் தெரிந்திருந்தால் அராபி மொழியையும், அராபி தெரிந்திருந்தால் சம்ஸ்கிருத மொழியையும் கற்றுக்கொள்வதனால், ஏதாவது குற்றம் உண்டா? இதனால் இரண்டு மொழிகளிலும் என்னுடைய அறிவு அபிவிருத்தி அடைகிறது. அராபியர்களுடனே, ஹிந்துக்களுடனே ஏற்படும் தொடர்பு நான் கற்றுள்ள மொழிக்குத் தகுந்தவாறு அதிகரிக்கிறது. எந்தத் துறையிலும் மனிதன் அறிவை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு மறுப்பு இருப்பதற்கு இடமில்லை.

9. வினா: தேசிய பாஷையின் உச்சரிப்பு எளிதில் கைகூடி வருவதற்கு, தேவநாகரி லிபி சிறந்ததாகத் தோன்றவில்லையா? உச்

சரிப்பு சம்பந்தப்பட்ட வரையில், பாரசீக லிபி நிச்சயமாய்க் குறைபாடுடையதுதான்.

விடை:—நீங்கள் சொல்வது உண்மை. ஆனல், பாரசீக லிபிமீது தாங்கள் கொண்டுள்ள மறுப்புக்கு இங்கு இடமில்லை. தேவநாகரி லிபியை ஒருவரும் விலக்கவில்லை. இப்போதுள்ள அறிவை அதிகப்படுத்துவதற்குத்தான் முயற்சி நடைபெறுகிறது.

**10.** வினு: தேசிய பாஷைக்கு இப்போது என்ன அவசியம்? தாய் மொழியும், சர்வதேச மொழியும் இதற்கு ஒத்தாசையாய் இருந்து உதவாதா? அப்படியாயின் இரண்டு மொழிகளுக்குமே ரோமன் லிபியை உபயோகித்தால் என்ன?

விடை: தங்கள் கேள்வி என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டது. ஆங்கில மொழி, சந்தேகத்திற்கு இடமின்றிச் சர்வதேச பாஷைதான். இருந்தபோதிலும், அது நம்முடைய தேசிய பாஷையாக எந்தக் காலத்திலும் வர முடியாது. கோடிக்கணக்கான நம் நாட்டு மக்களுக்கு, தேசிய மொழி பொதுச் சொத்தாக விளங்க வேண்டும். ஆங்கில மொழியை அவர்களால் பொறுமையோடு கற்க முடியுமா? ஹிந்துஸ்தானி மொழிதான் நம் நாட்டின் இயற்கையான தேசிய மொழியாகும். அதைப் பேசும் மக்கள் ஏற்கனவே இருபத்தொருகோடிக்கு அதிகமாக இருக்கிறார்கள். பாக்கியுள்ளவர்களாலும் அதை எளிதாகப்புரிந்து கொள்ள முடியும். ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பம். அதிகமாகப்போனல் லட்சத்திற்கு மேலிராது. இந்தியா ஒரு சமுதாயம் என்பது உண்மையானல், அதற்குத் தேசிய மொழி ஒன்று இருக்கவேண்டியது அவசியமே; ரோமன் லிபியில் எழுதப்படும் ஆங்கில பாஷை சர்வதேச மொழியாக இருப்பது பொருத்தமானதே. ஆனல், அதனுடைய லிபி, தேசிய பாஷையின் லிபியாக அமைய முடியாது.

# அனுபந்தம்

## ஹிந்தி என்ற சொல்லின் பிறப்பு

ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்திற்கு ஜீவனாய் விளங்கும் பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன், சமீபத்தில் ஹிந்தி—உருது தகராறு பற்றி, டாக்டர் அஷரப்புக்கு நீண்டதொரு கடிதம் எழுதி இருக்கிறார். ஹிந்தி—உருது தகராறைக் கவனித்து வருகிறவர்களுக்கு, அந்தக் கடிதம் சுவாரஸ்யமாய் இருக்கும். ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய அந்தக் கடிதத்திலிருந்து ஒரு பகுதியைக் கீழே தந்திருக்கிறேன்.

—மகாதேவ தேசாய்

"என்னைப் பொறுத்தவரை, 'ஹிந்தி' என்ற சொல்லையே நான் அதிகமாக விரும்புவேன். ஏனெனில், அதனுடைய தொடர்புகள் மிகப் பழமையானவை; இனிமையானவை; அந்தச் சொல் ஹிந்து-முஸ்லிம் பண்பாடுகளை ஒன்றுசேர்ப்பதற்கு எழுந்துள்ள ஒரு அறிகுறியாக நிற்கிறது. 'ஹிந்த்' என்பது நமது நாட்டின் பெயர். அதில் இருந்தே, ஹிந்தி என்ற சொல் பிறந்திருக்கிறது. எனவே, அந்தச் சொல்லின் பொருளை அறிந்துகொள்வது மிகவும் எளிது. பலவேறு உருவங்களையும், பேச்சு முறைகளையும் ஹிந்தி என்ற சொல் அடக்கிக்கொண்டிருக்கிறது. உருது மொழிகூட, பலவேறு உருவங்கொண்ட ஹிந்தியின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தையே குறிப்பதாய் இருக்கிறது. ஹிந்தி என்ற சொல்லை, குஷ்ரு என்பவர்தான் முதலில் உபயோகித்தவர். சில ஆசிரியர்கள் இந்த மொழிக்கு, ஹிந்தி என்ற பெயரை வைத்தவர் குஷ்ரு என்றும் கருதுகிறார்கள். குஷ்ருவுக்குப் பின்வந்த, சில முஸ்லிம் எழுத்தாளர்கள் இந்த நாட்டில் இருந்துவந்த பழைய மொழியைக் குறிப்பிடுவதற்கு மட்டுமல்லாமல், அதனுடைய பாரசீக நடைப்போக்கைக் குறிப்பிடுவதற்கும் ஹிந்தி என்ற சொல்லைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லூரைச் (தெக்ஷணம்) சேர்ந்த ப∴கார் ஆகா என்பவர், ஹிஜிரி 1157ல் பிறந்தவர். தாம் எழுதிய கவிதைகளை எல்லாம் திரட்டி, அதற்கு 'திவான்-இ-ஹிந்தி' என்று பெயர் வைத்திருக்கிறார். அவர் எழுதியுள்ள பாஷையைக் கவனித்தால், இன்று பொதுப்படையாக எல்லோருமே அதை உருது என்றுதான் சொல்லுவார்கள். டெல்லியைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற கவிஞரான மீர் என்பவர், தாம் எழுதியுள்ள கவிதைகளை

ஹிந்தி மொழியில் எழுதியிருப்பதாகவே கூறுகிறார். 'ஹிந்தி' என்ற சொல், 'ஹிந்த்' என்ற சொல்லைப்போலவே 'சிந்து' என்பதிலிருந்து பிறந்ததாகும். எனவே, இந்தச் சொல் குறிப்பிட்ட ஒரு மதத்திற்கோ, அல்லது, வகுப்பிற்கோ உரியதன்று. ஹிந்தி மொழியில் முஸ்லிம்களும் ஹிந்துக்களும் அனேகவிதமான இலக்கியங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த இலக்கியச் செல்வங்கள் தேசத்திற்கே பொதுவான ஒரு பொக்கிஷம் ஆகும். குஷ்ரு, கபீர், மாலிக் முகமது ஜெய்ஸி, ரஹீம்கான், கான்கானு, ஆனிஸ், ராஷ்கான் போன்ற முஸ்லிம்கள், இந்நாட்டிலிருந்து வந்த பழைய வடிவத்தைப் பின்பற்றியே எழுதி வைத்திருக்கிறார்கள். காலிப் ஸாக், அட்டாஷ் போன்றவர்களுக்கு எவ்வளவு மரியாதை காட்டுகிறோமோ, அந்த அளவிற்கு மேற் சொன்னவர்கட்கும் மரியாதை காட்ட நாம கடமைப்பட்டிருக்கிறோம், எந்தக் காரணத்திற்காக முஸ்லிம்கள் காங்கிரஸிலிருந்து ஒதுங்கி நிற்கிறார்களோ, அதே காரணத்திற்காகத்தான், இன்று முஸ்லிம்கள், கபீர், ஜெய்ஸி; ரஹீம் ஆகியோரைப் படிக்காமலும் ஒதுங்கி இருந்து வருகிறார்கள். ஒரு உண்மையான தேசபக்தன் சிறந்த முஸ்லிம் எழுத்தாளர்களை எவ்வாறு மனப்பூர்வமாய் நேசிப்பானோ, அதேபோல, துளசிதாஸ், சூர்தாஸ் ஆகிய ஹிந்து எழுத்தாளர்களையும் நிச்சயம் நேசிப்பான்; அப்படி நேசிப்பதில் பெருமையுங்கொள்வான். இந்த விதமான பண்பாட்டு அபிவிருத்தியையே நான் எதிர்பார்க்கிறேன். இந்தப் பண்பாட்டை நாம் அடைந்துவிட்டால், அரசியல், சமுதாயத் துறைகளில் இணைந்து முயலும் காலம் கிட்டிவிடும் என்பதுதிண்ணம்."

## ஹிந்தி—உருதுத் தகராறு

சென்ற வாரக் கடிதத்தில், ஹிந்தி—உருதுத் தகராறு பற்றி, பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் கொண்டுள்ள ஆழ்ந்த கருத்துக்களை, எடுத்துக்காட்டியிருந்தேன். இது சம்பந்தமாக, எவ்விதத் தகராறுமில்லாதிருந்த காலத்தில், வின்ஸன்ட் ஸ்மித் எழுதியுள்ளதைக் கீழே தந்திருக்கிறேன்:

"அத்தியாவசியமான அனேக சந்தர்ப்பங்கள், ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒருவரோடு ஒருவர் கலந்துறவாட வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கியதால், பொது மொழி ஒன்று வேண்டிய அவசிய மேற்பட்டது. சில முஸ்லிம்கள் ஹிந்தியைக் கற்றுக்கொண்டார்கள். ஹுமாயூன் காலத்தவரான ஜெய்ஸ் மாலிக் முகமது போன்றவர்கள் ஹிந்தி எழுத்தாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஹிந்துக்களிலும் ஏராளமானவர்கள் ஓரளவுக்குப் பாரசீக மொழிப்

பயிற்சி உள்ளவர்களாய் இருந்திருக்க வேண்டும். சௌகரியத்தை உத்தேசித்து, இரண்டு மொழிகளுக்கு இடையிலும் ஏற்பட்ட ஓர் இதமான மனப்பாங்கின் காரணமாகவே, உருது மொழி தோன்றலாயிற்று. 'உருது' என்ற சொல்லுக்கு 'கூடார மொழி' என்பது பொருள். இச்சொல் துருக்கி மொழியிலிருந்து வந்ததாகும். துருக்கி மொழியில் இந்தச் சொல்லுக்குக் கூடாரம் என்று பொருள். இதற்கு அசலான ஆங்கிலச் சொல் 'ஹோர்டு' என்பதாகும். (ஹோர்டு என்றால் ஆங்கிலத்தில் கூட்டம் எனப் பொருள்படும்)பாரசீகப் பாணியில் மேற்கே வழங்கும் ஹிந்தியே உருது மொழியாகும். இந்த மொழி டெல்லியைச் சார்ந்த வட்டாரங்களில் முக்கியமாகப் பேச்சு வழக்கில் இருந்து வருகிறது. இந்த மொழியினுடைய அமைப்பும் இலக்கணமும், முக்கியமான அடிப்படையில, ஹிந்தியை ஒட்டியே இருக்கின்றன; பெரும்பாலும் சொற்கள் மட்டுமே பாரசீகச் சொற்களாய் இருக்கின்றன. பாரசீக நாடு முகமதியர்களின் கைவசமான பின்பு, பாரசீக மொழியில் அராபியச் சொற்கள் நிறையக் கலந்து விட்டன. அதன் காரணமாகவே, உருது மொழியிலும் அராபியச் சொற்கள் நிறைய இருப்பதைக் காணுகிறோம். உருது தோன்றிய காலம் இதுதான் என்று ஒரு திட்டமான வரையறை செய்ய முடியாது. துருவி ஆராய ஆராய, உருது மொழி பகுத்துணர முடியாதவாறு படிப்படியாக ஹிந்தி மொழியில் கலந்து, மறைந்து விடுவதையே காணுகிறோம். ஆனால், சுல்தான்கள் ஆண்ட காலங்களில, நாடு பிடித்தவர்களும் நாட்டைப் பறிகொடுத்தவர்களும் புரிந்துகொள்ளும் வகையில், ஒரு மொழியை உண்டாக்குவதற்கு, தங்குதடையின்றி முயற்சிகள் நடைபெற்று வந்தன என்பது உறுதி. படிப்படியாக இந்திய முஸ்லிம்களுக்கு, உருது தாய் மொழி போலாகி, அதில் இலக்கியங்களும் தோன்றலாயின. 1325ல் காலஞ்சென்ற அமீர் என்று அழைக்கப்படும் மீர் குஷ்ரு எழுதியுள்ளவற்றில், அனேக ஹிந்திச் சொற்கள் தென்படுகின்றன. சில சமயங்களில் இவருடைய பெயர் உருது எழுத்தாளர் வரிசையிலும் இடம் பெறுகிறது."

முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு வந்தபோது, ஹிந்தி மொழி இலக்கணச் சிறப்போடு விளங்கிக்கொண்டிருந்த தென்றும், ஆளுவோர் ஆளப்படுவோர் இருவருக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்காகவே உருது மொழி தோன்றிய தென்றும் முஸ்லிம்களில் சிறந்த ஆசிரியர்கள் எனப் பெயர் பெற்றவர்கள் கூடக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். புதிதாக இந்த நாட்டிற்கு வந்தவர்கள் இங்குள்ள

இலக்கணத்தையும் சில சொற்களையும் எடுத்துக்கொண்டு, புது மொழி ஒன்றைச் சிருஷ்டித்ததோடு, அதிகப்படியான பாரசீக, அராபியச் சொற்களையும் கலந்து பேசிவந்தார்கள். அமரநாத் ஷா 'லீடர்' பத்திரிகையில், இரண்டு பாஷைகளின் தன்மைகளையும் பாகுபடுத்தி விளக்கி, பின்வருமாறு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் :

"டெல்லி, ஆக்ரா, மீரத், லக்னோ முதலிய நகரவாசிகள் உருது மொழியே பேசிவந்தார்கள். இந்த நகரவாசிகளான முஸ்லிம்கள் கூட, கிராமங்களுக்குச் செல்லநேர்ந்த காலத்தில், கிராமிய மக்களோடு சில நாட்களாவது கிராமிய பாஷையிலேயே பேசவேண்டியதாயிற்று. இவ்விதம் சொல்வதனால், நான் உருது மொழிக்கு அநீதி செய்தவன் ஆகமாட்டேன். உருது மொழி கிராமவாசிகளோடு, தொடர்புகொள்ள விரும்பவுமில்லை; முயலவுமில்லை; அதைப் பொருட்படுத்தவுமில்லை... ஹிந்தி பொதுஜனங்களின் மொழியாகும். அதனுடைய இலக்கியம் பொதுஜனங்களை விட்டு எப்போதும் ஒதுங்கி நின்றதே இல்லை. ஹிந்தி மொழி கிராமவாசிகளுக்கே சொந்தமான மொழியாக இருந்துவந்தபடியால், பொலிவு, நாசுக்கு, பட்டணப்பாணி முதலியவை ஹிந்தி மொழிக்கு இல்லாது போயின. அதனால்தான், ஆண்மையற்று, வளர்ச்சி குன்றி, உணர்ச்சிபாவம் கெட்டு விடாமல், ஹிந்தி மொழி ஜீவசக்தி நிரம்பியதாயிருக்கிறது."

ஐக்கிய மாகாணத்தையோ, அல்லது எல்லைப்புற மாகாணத்தையோ ஒரே மொழி பேசும் மாகாணமாக ஆக்க முயலக் கூடாதென்றும், ஒரு மொழியை ஒழிப்பதன்மூலம் மற்றொரு மொழியை வளர்க்க ஆசைப்படலாகாதென்றும், இரு மொழிகளும் அழிந்துபோகாமல் பாதுகாத்து வளர்க்க முயல வேண்டுமென்று வற்புறுத்திப் பரிந்துபேசுகிறார் :

"இவற்றை யெல்லாம் கவனிக்கும்போது, ஒரு பொது மொழியையோ, ஹிந்துஸ்தானியையோ, பரப்ப விரும்புகிறவர்கள் உண்மையாகவே அவ்விதம் பரப்ப விரும்புகிறார்களா என்பதில் நமக்குச் சந்தேகம் தோன்றுகிறது" என்கிறார் அமரநாத் ஷா. கல்விமுறை, இலக்கியம், பண்பாடு ஆகியவை அல்லாத வேறு நோக்கங்களும் அவர்களுக்கு இருக்குமோ என்பதேதான், நமக்கு உதிக்கும் சந்தேகமாகும். ஹிந்தி வேண்டாமென்று குறைகூறி முணுமுணுத்துக்கொண்டே இருப்பவர்களில், எத்தனை பேருக்குத் தேவநாகரி லிபி படிக்கவரும்?

'ஹிந்துஸ்தானி'யைச் சிருஷ்டிக்க விரும்புகிறவர்களில், எத்தனை பேர். ஹிந்தி இலக்கியத்தில் ஒரு நூலையாவது படித்தவர்கள்? மனதிலுள்ளதை அப்படியே பேசுவதுதான் நல்லது. ஒரு குறிப்பிட்ட வருஷத்தில், சர்வகலாசாலை, உயர்தரப்பள்ளி உருதுப் பரீட்சைகளில் எத்தனை ஹிந்து மாணவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள். பிறகு, பாரசீகப் பரீட்சையில் எத்தனை ஹிந்து மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள் என்பதையும் கவனியுங்கள். இதை ஹிந்தி படிக்கும் முஸ்லிம் மாணவர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். சம்ஸ்கிருதம் படிக்கிற முஸ்லிம்களையும் - இது அற்புதம்தான்- ஒப்பிட்டுப் பாருங்கள். அல்லது, ஹிந்து மாணவர்கள் தங்கியிருக்கும் மாணவர் இல்லத்தைக் கவனியுங்கள்; வாசகசாலையில் உருது மாதப் பத்திரிகையோ, தினசரிப் பத்திரிகையோ எப்போதும் அங்கு இருப்பதைக் காணலாம். முஸ்லிம் மாணவர் விடுதிக்குச் சென்று பார்ப்பீர்களாயின, தப்பித்தவறிக் கூட, ஒரு ஹிந்தி மாதப் பத்திரிகையை நீங்கள் அங்கு காணமுடியாது."

ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் உருதுவையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தால், உருதுவில் காணப்படும் சிறந்த இலக்கியங்களை யெல்லாம் தமதாக்கிக்கொள்ள விரும்பினார்கள். 'கவிதா கௌமுதி' என்ற பிரசுர வரிசையில், தேவநாகரி லிபியில் உருதுக் கவிதைகளைத் திரட்டி, பண்டித ராம்நரேஷ் திரிபாடி ஒரு சிறந்த புத்தகம் வெளியிட்டு இருக்கிறார்.* அதே போல சிறந்த முறையில் ஸ்ரீ ராமச்சந்திர சர்மா, தேவநாகரி லிபியில், ஹிந்தி—உருது அகராதியைத் தயாரித்து வெளியிட்டு இருக்கிறார். அந்த அகராதியில், சிறந்த உருது இலக்கியங்களில் அடிக்கடி கையாளப்பெறும் அராபிய, பாரசீகச் சொற்களைத் தொகுத்திருப்பதுடன், அவற்றுக்குச் சரியான ஹிந்தி அர்த்தத்தையும் தந்திருக்கிறார்.†

இதேபோல, உருது பேசுகிற மக்கள் ஹிந்தி மொழியில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமதாககிக்கொள்ள முயற்சி செய்திருக்கிறார்களா? அப்படி ஏதாவதிருந்தால், அதை அறிந்துகொள்வதில் எனக்குப் பிரியமுண்டு.

—மகாதேவ தேசாய்.

---

* 'உருது கவிதா கௌமுதி'—கிடைக்குமிடம்: ஹிந்தி மந்திர், பிரயாகை. அலஹாபாத். ஐ. மா.

† 'உருது—ஹிந்தி அகராதி'—கிடைக்குமிடம்: ஹிந்தி க்ரந்த் ரத்னாகர் கார்யாலயா; ஹிராபாக், பாம்பே 4.